# போக்காட்டினால் சுமக்கப்படும் பாவங்கள்

-ஏழாம் தூதனின் கட்டுரைகள்

# போக்காட்டினால் சுமக்கப்படும் பாவங்கள்

*(போக்காட்டினால் சுமக்கப்படும் பாவங்கள் தொடர்பாக*
*சகோ. ரசல் அவர்களினால் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளின்*
*தொகுப்பு மற்றும் மொழியாக்கம்)*

"அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து,
அதின்மேல் இஸ்ரயேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப்
பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு,
அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான
ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன்." (லேவியராகமம் 16:21)

# *பொருளடக்கம்*


| வ. எண். | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | R4426 \| மீட்கும்பொருள் மற்றும் பாவநிவாரணம் | 1 |
| 2. | R5462 \| ஆதாமின் . . . செய்யப்பட்ட பாவத்திற்கான நிவிர்த்தி | 14 |
| 3. | R4273 \| போக்காடு எந்தப் பாவங்களைச் சுமந்தது? | 21 |
| 4. | R4651 \| போக்காடு சுமந்த பாவங்கள் | 24 |
| 5. | R4034 \| இவைகளிலும் விசேஷித்த பலிகள் | 28 |
| 6. | R3605 \| பிராகாரத்தில் திரள் கூட்டத்தினர் | 34 |
| 7. | R4856 \| உரிய வகை தண்டனை அளிக்கும் . . . நடவடிக்கை | 36 |
| 8. | R5255 \| உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால் | 38 |
| 9. | R5872 \| மீட்கும்பொருளும், பாவநிவாரண பலியும் | 42 |
| 10. | R4015 \| போக்காடு பற்றின கேள்வி | 44 |
| 11. | R3356 \| சுவாரசியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது | 45 |
| 12. | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | 47 |

# ரீப்பிரிண்ட் கட்டுரைகள்

R4426 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## மீட்கும்பொருள் மற்றும் பாவநிவாரணம்

"ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் (மகா) பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும்." (எபிரெயர் 13:11-13)

பாவம் உலகில் காணப்படுகின்றது என்றும், தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் பாவம் உலகத்திற்குள் பிரவேசித்தது என்றும், ஈட்டுக்கிரயம் செலுத்தித்தீர்க்கப்படாதது (paid) வரையிலும் தேவன் மற்றும் மனுஷருக்கிடையில் முழுமையான ஒப்புரவாகுதல் உண்டாக முடியாது என்றும் வேதாகமம் போதிப்பதை நாம் அனைவருமே அறிவோம். ஒப்புரவாகுதலுக்கு அஸ்திபாரமாக மீட்கும்பொருள் ஒன்று காணப்பட வேண்டும். ஆகையால் நமது கர்த்தர் இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்துவைத்தபோது (laid down) அவர் மீட்கும்பொருளைக் கொடுத்துவைத்தார் என்று வேதவாக்கியங்கள் போதிப்பதாக நாம் புரிந்திருக்கின்றோம். மீட்கும்பொருள் எனும் வார்த்தையானது, சரிநிகர் சமானவிலையினைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; ஆதாமின் சுபாவத்திற்கு ஒத்த ஒரு சுபாவத்தினை நமது கர்த்தர் இயேசு பெற்றிராத காரணத்தினால், உலகத்தோற்றத்திற்கு முன்பாகப் பிதாவோடு அவருக்கிருந்த மகிமையினைத் துறந்து வருவதும், தம்மையே தாழ்த்திக்கொள்வதும், மனுஷ சுபாவத்தை எடுத்துக்கொள்வதும் அவருக்கு அவசியமாய் இருந்தது; இப்படியாக அவர் தேவனுடைய கிருபையினால் ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தினை ருசிக்கமுடிந்தவரானார். ஆகையாலே "நீர் எனக்கு ஒரு சரீரத்தை ஆயத்தப்படுத்தினீர்" என்று வேதவாக்கியங்களில் நாம் வாசிக்கின்றோம்.

மனுக்குலத்தின் பாவங்களுக்கு ஏற்றதொரு பலியாய்க் காணப்படும் சரீரத்தினை எந்த மனுஷஜீவியும் பெற்றிருக்கவில்லை, காரணம் அனைவருமே பாவிகளாய் இருந்தனர். ஒருவேளை பரிபூரண மனுஷன் ஒருவன் இருந்திருப்பானானால், அவன் தன் பரிபூரண ஜீவனை மீட்கும்பொருளெனக் கொடுத்திருந்திருப்பான்; ஆனால் பரிபூரண மனுஷர் எவருமே இல்லை. ஆகையால் சங்கீதங்களின் புஸ்தகத்தில் சொல்லப்பட்டதுபோன்று, "ஒருவனாவது தன் . . . சகோதரன் நிமித்தம் மீட்கும்பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே" (சங்கீதம் 49:7,8). ஆகையால் பரிபூரண நிலையினை உடைய ஒருவரை, மனுஷருக்கு அவசியமானதை ஒப்புக்கொடுக்கும் ஒருவரை கண்டுபிடிப்பது தேவனுக்கு அவசியமாய் இருந்தது. கர்த்தர் நியாயப்பிரமாணத்தின் வாயிலாக, அவரது பிரமாணங்கள் "ஜீவனுக்கு ஜீவனையும், கண்ணுக்குக் கண்ணையும், பல்லுக்குப் பல்லையும்" எதிர்ப்பார்க்கின்றது என்றும், நீதியினுடைய இந்த அடிப்படை கொள்கையின்படியே தேவன் இந்தக் காரியத்தில் செயலாற்றுவார் என்றும் நமக்குக் காண்பிக்கின்றார். ஆகையால் பாவம் செய்தது மனுஷனாக இருக்கின்றபடியால், ஒரு தேவதூதனின் மரணம் என்பது மனுஷனுக்கான மீட்பின் கிரயமாக இருக்கமுடியாது; அது சரிநிகர் சமான விலையாகக் காணப்பட வேண்டும். இழந்துபோனது மனுஷஜீவனாக இருக்கின்றபடியால், மீட்பதற்கான விலையாக ஒரு மனுஷ ஜீவனே கொடுக்கப்பட வேண்டும். யூத காலங்களில் செய்யப்பட்டு வந்ததுபோன்று காளைகளும், ஆடுகளும் அடிக்கப்படுவது என்பது போதுமானதல்ல; ஏனெனில் இவைகள் அப்போஸ்தலன் விவரிப்பதுபோன்று தேவன் ஏற்றகாலங்களில் ஏறெடுக்க நோக்கம் கொண்டுள்ள "விசேஷித்த பலிகளுக்கான" நிழல்களாகவும், அடையாளங்களாகவும் மாத்திரம் காணப்பட்டது.

ஆகையால் மனுஷனாகிய கிறிஸ்து இயேசு உதவிசெய்யும்படிக்கு வந்தார் என்று அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். அவர் பரலோக சுபாவத்தினுடைய மகிமையைத் துறந்து, மனுஷ சுபாவத்தினை எடுத்துக்கொண்டார்; இப்படி அவர் செய்ததற்கான காரணம் - நம்முடைய மீட்பர் ஆகும்பொருட்டு அதைப் பலிசெலுத்துவதற்கேயாகும்; ஏனெனில் பாவம்செய்த மனுஷனை (ஆதாமை) மீட்க ஒரு மனுஷனுடைய மரணத்தினை நீதி கேட்டது.

"அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்" நமது கர்த்தர் மரித்தபோது, அவர் நம்மைத் தேவனிடத்தில் கொண்டுசேர்த்திடவே இப்படிச் செய்தவரானார்; சபையாகிய நம்மைத் தேவனிடத்தில் கொண்டுசேர்த்திடுவதற்காக மட்டுமல்லாமல், தேவனிடத்தில் சேருவதற்கு விரும்பிடும் மனுக்குலத்தார் அனைவரையும்கூடத் தேவனிடத்தில் கொண்டுசேர்த்திடுவதற்காக இப்படிச் செய்தவரானார். ஆனால் அவரது மரணம், நம்மைத் தேவனிடத்தில் கொண்டுசேர்த்திடவில்லை. அவருடைய மரணம் என்பது விலைக்கிரயத்தைக் கொடுத்துவைத்த (laid down) காரியமாய் மாத்திரமே இருந்தது மற்றும் அந்த விலைக்கிரயத்தை முதலாவது கண்டுபிடிப்பது அவசியமாய் இருந்தது. உதாரணத்திற்கு: உங்களுக்குக் கடன் இருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள் - 5,000 டாலர்கள் கடன் என்று வைத்துக்கொள்ளுங்கள். இன்னுமாக 5,000 டாலர்கள் விலைமதிப்புள்ளதும், உங்களால் விற்கமுடிகிறதுமாகிய சொத்து ஒன்றினைப் பெற்றிருக்கின்றீர்கள் என்றும் வைத்துக்கொள்ளுங்கள். அச்சொத்திற்கான விலைமதிப்பென்பது, உங்களது கடனிற்குச் சரிநிகர் சமமாக இருக்கின்றது. சொத்தின் விலையினை மீட்கும்பொருளெனப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அச்சொத்தினை விற்றுவிடுகின்றீர்கள். ஆனால் சொத்தை விற்றவுடன் உங்கள் கடன் ரத்தாகிறதில்லை; நீங்கள் சொத்தை விற்கமாத்திரம் செய்து, தொகையை மட்டும் பெற்றிருக்கின்றீர்கள்; இதைப் பிற்பாடுதான் கொண்டுபோய் கடனுக்குக் கட்டித்தீர்ப்பீர்கள்.

இப்படியாகவே நமது கர்த்தருடைய மரணத்தின் பலனும் காணப்படுகின்றது. அவர் "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராக மரித்தபோது," அவர் "சரிநிகர் சமானவிலை" ஒன்றினைக் கொடுத்துவைத்தார் (laid down). ஆகையாலே "ஒரு மனுஷனுடைய கீழ்ப்படியாமையினால் பாவம் உலகத்திற்குள் பிரவேசித்தது என்றும், பாவத்தின் விளைவாக மரணம் வந்தது என்றும்" தெரிவிக்கப்பட்டுள்ளது; இப்படியாக மரணதண்டனையும், இதனைத் தொடர்ந்து வருபவைகளும் ஆதாமின் சந்ததியின்மேல் வந்தது, ஏனெனில் அனைவருமே பாவ நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர் மற்றும் அனைவரும் மரணதீர்ப்பின்கீழ்க் காணப்பட்டனர். நம்மை மீட்கும்பொருட்டாக நமது கர்த்தர் நமக்கான ஈட்டுக்கிரயத்தினை, தமது சொந்த ஜீவனைக் கொடுத்துவைத்தார் (laid down). அந்த ஈட்டுக்கிரயமானது ஆதாமிற்கு அல்லது ஆதாமின் சந்ததியிலுள்ள எந்த அங்கத்தினனுக்கு அல்லது அனைவருக்குமே போதுமான ஒரு கிரயமாக இருந்தது - இதை அவர் பிற்பாடு செயல்முறைப்படுத்துவார் (apply). ஒரு நபருக்காக இருப்பினும், இந்தக் கிரய அளவைக்காட்டிலும் குறைவாய்ச் செலுத்த முடியாது. ஒருவேளை கர்த்தர் ஒரே ஒரு நபரை மட்டும் மீட்டெடுக்கவும், மீதமுள்ள நம் அனைவரையும் கைவிட்டுவிடவும் நோக்கம் கொண்டிருந்தாலும், இதற்கும் அவர் ஜீவனே எடுக்கப்படும் மற்றும் இதற்குக் குறைவாக எதுவும் எடுக்கப்பட முடியாது; ஏனெனில் மனுஷனுடைய ஜீவன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது மற்றும் மனுஷனுடைய ஜீவனே, தண்டனையைச் சந்திக்க அவசியமாய் இருக்கும்.

இந்த ஆக்கினைத்தீர்ப்பானது ஒரு மனுஷனாகிய ஆதாம் மூலமாய் வந்துள்ளபடியால், ஒருவருக்குரிய தண்டனையைச் சந்திப்பது என்பது முழு மனுஷ குடும்பத்தினையும் உள்ளடக்குவதாக எடுத்துக்கொள்ளலாம். இப்படியாக மீட்பைப்பற்றின இந்த மாபெரும் உபதேசத்தினுடைய கொள்கையினை நாம் காண்கின்றோம் மற்றும் தேவன் தம் குமாரனுடைய ஒரே ஒரு பலியினைக்கொண்டு, தம் சொந்த

நீதியினுடைய கணக்கினைக் கட்டித்தீர்க்கின்றவராய் இருக்கத்தக்கதாக எப்படிக் காரியங்களைத் திட்டமிட்டிருந்தார் என்பதையும் நாம் காண்கின்றோம்.

இதுவே மீட்கும்பொருளின் காரியமாகும். ஒருவேளை இயேசு பரமேறினபோது (தம் கரத்தில் பெற்றிருந்த) ஈட்டுக்கிரயத்தினை மனுக்குலம் அனைத்தின் சார்பாகப் பயன்படுத்துவதற்கு முடிவெடுத்திருந்திருப்பாரானால், அதுவே அனைவருக்கும் போதுமான கிரயமாய் இருந்திருக்கும். ஆனால் அவர் அப்படியாகச் செய்யவில்லை. அவர் அதை எப்படிச் செயல்படுத்தப்போகின்றார் (apply) என்பது வேறொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது மற்றும் அது பாவ நிவாரணம் என்று அழைக்கப்படுகின்றது. நமது கர்த்தர் எப்படித் தம் ஈடுபலியின் புண்ணியத்தினைச் செயல்படுத்தப் போகின்றார் என்பது குறித்து இஸ்ரயேலர்களுடைய பாவநிவாரண நாளின் நிழலான பலிகளில் காண்பிக்கப்பட்டுள்ளது.

மீட்கும்பொருளும், பாவநிவாரணமும் ஒன்று என்று நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. பாவநிவாரண பலிகள் என்பது, ஈடுபலியல்ல என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஈடுபலி என்பது, பாவநிவாரண பலிகளல்ல என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். இவைகள் வெவ்வேறான இரண்டு காரியங்களாகும். கிறிஸ்துவினுடைய வேலைபற்றின ஒரு கண்ணோட்டமானது, மீட்கும்பொருள் கிரயம்பற்றின கண்ணோட்டத்திலிருந்து காரியத்தினை முன்வைக்கின்றது; அதென்னவெனில்: கிறிஸ்துவின் மரணம் என்பது, ஈட்டுக்கிரயமாய் இருக்கின்றது மற்றும் இது எந்தவிதத்தில் செயல்படுத்தப்படப் (apply) போகிறதாய் இருப்பினும், இது அவசியமானதாய் இருக்கின்றது; இது சர்வ வல்லமையுள்ளவரின் பிரமாணத்தினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டுள்ள ஒரு ஜீவனுக்கு ஈடாகச் செலுத்தப்பட வேண்டும். வேதவாக்கியங்களின்படி நமது கர்த்தர் இயேசு தாம் நிறைவேற்றின பலியின் வேலையில், பல்வேறு தேவைகளைச் சந்தித்து முடித்தவரானார். உதாரணத்திற்கு: அவர் "நியாயப்பிரமாணத்தின்கீழ்ப் பிறந்தவராவார்." இதனால் ஏதேனும் வித்தியாசம் உண்டா? ஒருவேளை இயேசு "நியாயப்பிரமாணத்தின்கீழ்ப் பிறக்கவில்லை யெனில்," அவரது பலியானது யூதர்களுக்குப் பயன்படுத்தப்படாது, காரணம் தேவன் யூதர்களுடன் பண்ணின நியாயப்பிரமாண உடன்படிக்கை மூலம், யூத ஜனங்களை மற்ற ஜனங்களிடமிருந்து தேவன் முன்பே பிரித்துவிட்டார் என்று அப்போஸ்தலன் விவரிக்கின்றார்.

அந்த யூத ஜனங்கள், அவர்களின் நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ்ப் பரீட்சையில் காணப்பட்டு, "இப்பிரமாணங்கள் அனைத்தையும் நாங்கள் கைக்கொள்வோம்" என்று கூறி இவ்வுடன்படிக்கையினுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட பிற்பாடு, அவ்வுடன்படிக்கையைக் காத்துக்கொள்ள தவறிப்போனார்கள். இவர்களது நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ், ஒருவேளை இவர்கள் தேவனுடைய பிரமாணத்தினைக் கைக்கொள்வார்களானால், இவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் என்றும், ஒருவேளை பிரமாணத்தினை மீறிடுவார்களானால், தண்டனை நித்திய மரணமாக இருக்கும் என்றும் தேவன் வாய்ப்பருளியிருந்தார். இப்படியாக இவர்கள் இரண்டாம் முறை தெய்வீகத் தீர்ப்பின்கீழ் வந்தார்கள்: முதலாம் முறை நம் அனைவரோடு ஆதாமின் ஆக்கினைத்தீர்ப்பின்கீழ் ஆகும் மற்றும் இரண்டாம் முறை தங்கள் நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ள தவறிப்போனதினாலாகும். ஆகையாலே "ஜீவனுக்கேதுவான கற்பனையே மரணத்துக்கேதுவாயிற்று," காரணம் "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" என்று

அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆகையால் யூதர்கள் அனைவரையும் அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய ஏற்பாட்டின் கீழிலிருந்து தாம் மீட்கத்தக்கதாக, கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பிறக்க வேண்டியதும், ஒரு யூதனாக இருக்க வேண்டியதும் அவசியமாகக் காணப்பட்டது.

தேவன் தம்முடைய திட்டத்தில் இந்தப் பல்வேறு அம்சங்கள் அனைத்தையும் வைத்திருந்தார்; கிறிஸ்து மையப்புள்ளியாகக் காணப்பட்டார் மற்றும் இந்த மையப்புள்ளியினின்றே திவ்விய திட்டத்தினுடைய இந்த ஒவ்வொரு வெவ்வேறு அம்சங்களும் கடந்துவந்து, யூதர்களை விசேஷமாக மீட்கின்றது, இன்னுமாக இவர்களைத் தவிர்த்துள்ள முழு மனுக்குலத்தையும்கூட மீட்கின்றது; இன்னுமாகக் கிறிஸ்துவினுடைய சரீரமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட சபை தொடர்புடைய தேவ நோக்கத்தையும் நிறைவேற்றுகின்றது. நாம் குழப்பமடையாதபடிக்கு, உவமையில் கர்த்தர் சபையைக்குறித்துக் கொடுத்துள்ள அடையாளமான காட்சிகளைப் பார்ப்பதுபோன்றே, நமது கர்த்தருடைய வேலைபற்றிய இந்தக் காட்சிகளையும் நாம் கையாள வேண்டும். உவமையில் சபை பற்றி பல்வேறு உருவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சபை தேவாலயத்தின் ஜீவனுள்ள கற்களாக ஒப்பிடப்பட்டுள்ளனர்; அவரது சரீரத்தின் அங்கத்தினர்கள் என்று ஒப்பிடப்பட்டுள்ளனர்; ஆட்டுமந்தைக்கு ஒப்பிடப்பட்டுள்ளனர்; நமது இரட்சிப்பின் தளபதியாகிய கிறிஸ்துவின் கீழுள்ள போர்ச்சேவகர்களென ஒப்பிடப்பட்டுள்ளனர்; மணவாளனாகிய இயேசுவின் மணவாட்டிகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளனர்.

இப்பொழுது நாம் இவைகளையெல்லாம் குழப்பிக்கொண்டு, எப்படி மணவாளனால் தம் சொந்தச் சரீரத்தின் அங்கத்தினர்களையே திருமணம் செய்துகொள்ள முடியும் அல்லது எப்படித் தளபதி தன் சொந்தப் போர்ச்சேவகர்களையே திருமணம் செய்துகொள்ள முடியும் அல்லது ஆலயத்தின் கற்களைத் திருமணம் செய்துகொள்ள முடியும் என்று கேள்விகள் எழுப்புவோமானால், நாம் எவ்வளவு குழப்பமடைவோம் பாருங்கள். வேதவாக்கியங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டுமெனில், ஒவ்வொரு காட்சியும் ஏறக்குறைய தனித்து, பிரித்துப் பார்க்கப்படவேண்டும். ஒவ்வொரு காட்சியிலும் ஒரு பாடம் இருக்கின்றது; ஆனால் அதை நாம் மற்றக் காட்சிகளுடன் குழப்பிடக்கூடாது. ஆகையால் மீட்கும்பொருள் என்றால் என்ன என்பதைக்குறித்து மனதில் தெளிவடைந்துகொள்ளுங்கள், பின்னர் அதை அது இருந்த இடத்திலேயே விட்டுவிடுங்கள்; அதை அங்கிருந்து எடுத்து, பாவநிவாரணம் குறித்த கருத்தினைக் கொடுத்திடும் காட்சியுடன் இணைத்து குழப்பிடாதீர்கள். மீட்கும்பொருள் என்பது நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டது; அது வேறு எவராலும் கொடுக்கப்பட முடியாது மற்றும் அது திரும்பத் திரும்ப கொடுக்கப்பட வேண்டியதில்லை. ஆனால் அது இயேசுவின் புண்ணியமானது எப்படிச் செயல்படுத்தப்படும் (application) எனும் காரியத்தினைக் காண்பிக்கிறதில்லை. "ஏற்றகாலங்களில் சாட்சியம் விளங்கும்படிக்கு, அவர் தம்மை மீட்கும்பொருளாக" கொடுத்து மாத்திரம் இருந்தார்.

இதன் ஆசீர்வாதங்கள் எப்படித் துவங்கி, கடந்துசெல்லும் என்பது பாவநிவாரண காட்சியினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பாவநிவாரணம் என்பது நமது ஆதார வசனத்தின்படியான நமது ஆய்வின் விசேஷித்த அம்சமாய்க் காணப்படுகின்றது.

## பலி மூலமாய்ப் பாவநிவாரணம்

நமது ஆதார வசனத்தில் அப்போஸ்தலன் பாவநிவாரணத்தைக்குறித்துப் பேசிக்கொண்டிருக்கின்றார். தன் பாடத்தைச் சித்தரிக்கும் ஒரு குறிப்பிட்ட நிழலை நமக்கு அவர் சுட்டிக்காட்டுகின்றார். நிழலான

ஆராதனையில் யூதர்கள் பல்வேறு காணிக்கைகளையும், பலிகளையும் ஏறெடுத்தார்கள் - ஸ்தோத்திர பலி, சமாதான பலி, பாவநிவாரண பலிகள் முதலியவைகள் ஆகும். பாவநிவாரண பலியின் நிழலை மட்டுமே நாம் இப்பொழுது பார்த்து ஆராய்கின்றோம். ஜனங்களுக்கான பாவநிவாரண பலியானது வருஷந்தோறும், ஏழாம் மாதம், 10-ஆம் தேதி அன்று ஏறெடுக்கப்பட்டது மற்றும் அந்நாளானது பாவநிவராண நாள் என்று அழைக்கப்பட்டது. பாவநிவாரணத்தினை அல்லது தேவனுடன் ஒப்புரவாகுதலை உண்டாக்கின பாவங்களுக்கான பலிகளானது அந்த ஒரு நாளில் ஏறெடுக்கப்படுகின்றது மற்றும் இது ஒரு வருஷத்திற்குச் செல்லுபடியாகுகின்றது மற்றும் அந்நாளிலிருந்து ஒரு வருஷம் முடிகையில், மீண்டும் முழு ஏற்பாடு தொடரப்படுகின்றது. வருஷந்தோறும் இப்படியாகத் தொடர்ந்து காளைகளும், ஆட்டுக்கடாக்களும் பலி செலுத்தப்படுவதைக்குறித்துக் குறிப்பிட்ட பிற்பாடு, அப்போஸ்தலன் உண்மையிலேயே பாவங்களை ரத்து செய்திடும் காரணத்தினால், திரும்பத் திரும்பச் செலுத்தப்பட அவசியமில்லாத நிலையில் நமது கர்த்தர் இயேசுவினால் செலுத்தப்பட்ட "விசேஷித்த பலிகளைக்குறித்து" நமக்குக் கூறுகின்றார். தேவனிடத்தில் தம்மூலம் வரும் யாவரையும் என்றென்றும் பூரணப்படுத்திடும் வகையில், தம்மையே பலியாக்கிடும் கர்த்தரின் ஒரே ஒரு பலியானது, நமது கர்த்தர் இயேசு தம் சொந்தச் சரீரத்தைப் பலிசெலுத்தினதில் துவங்கி, அவரது சபையாகிய, அவரது பின்னடியார்கள் என்பவர்களில் இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் அவரால் தொடரப்பட்டு வருகின்றது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். இவர்கள் தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக, பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமானதாக, புத்தியுள்ள ஆராதனையாக ஒப்புக்கொடுக்கும்படிக்கு வரவேற்கப்பட்டுள்ளனர். இந்தப் பலிகளைப் பிரதான ஆசாரியன் ஏற்றுக்கொள்கையில், அர்ப்பணித்துள்ளவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகின்றார் மற்றும் அதுமுதற்கொண்டு கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினனென - பலிசெலுத்திக்கொண்டிருக்கும் பிரதான ஆசாரியனுடைய சரீரத்தின் அங்கத்தினனெனக் கருதப்படுகின்றார். இந்தக் கண்ணோட்டத்தின்படி 18-நூற்றாண்டுகளுக்கு முன்னதாக தம்முடைய மாம்சத்தினைப் பலிசெலுத்தினபோது துவங்கின பிரதான ஆசாரியனுடைய "விசேஷித்த பலிகளானது," அவரது பின்னடியார்கள் தங்கள் மாம்சத்தினை ஒப்புக்கொடுக்கையில், அவர்களில் தொடரப்பட்டு வருகின்றது; இவர்களுடையது பிரதான ஆசாரியன் நிமித்தமாக - அவருடைய நாமத்தில், அவரது புண்ணியத்தில், அவரது பலியென ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்தக் கண்ணோட்டத்தின்படி பாவநிவாரண நாளினுடைய முழுவேலையும், பலியின் வேலையாக இருக்கின்றது மற்றும் இன்னொரு கண்ணோட்டத்தின்படி நிழலில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம், அது இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்படுகின்றது - தலையினுடைய பலி மற்றும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகிய சபையின் பலியாகும்.

## பாவநிவாரணத்தின் நிழலான காட்சி

பாவநிவாரண நாள் மற்றும் அதன் பலிக்கடுத்த வேலைகள்பற்றின திவ்விய ஏற்பாட்டின் காட்சியினை நாம் லேவியராகமம் 16-ஆம் அதிகாரத்தில் பெற்றிருக்கின்றோம். தனக்காக - தனக்கு அடையாளமான காளை ஒன்றைப் பிரதான ஆசாரியன் கொண்டுவந்து, அதை அடித்தார் (பலிசெலுத்தினார்). காளை மனுஷனாகிய நமது கர்த்தருக்கு அடையாளமாய் இருக்கின்றது; வேதவாக்கியங்களில் கூறப்பட்டுள்ளதுபோன்று "ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்" (எபிரெயர் 10:5). பின்னர் இரண்டு ஆட்டுக்கடாக்கள் கொண்டுவரப்பட்டு, கூடாரத்தின் வாசலில் கட்டப்படுகின்றன. இவைகள் இஸ்ரயேல் ஜனங்களிடமிருந்து கொண்டுவரப்பட்டன அல்லது இவைகள் இஸ்ரயேல்

ஜனங்களுக்கு அடையாளமாய்க் காணப்பட்டன மற்றும் இவைகள் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாகிய விசுவாச வீட்டாருக்கு - இவர்களின் இரு வகுப்பாருக்கு, அதாவது "சிறுமந்தை" மற்றும் "திரள் கூட்டத்தாருக்கு" நிழலாய்க் காணப்படுகின்றன. பலிக்கென விசேஷமாய் ஆயத்தம்பண்ணப்பட்ட சரீரத்தினை இவர்கள் பெற்றிருக்கவில்லை என்பதை எத்தனை அழகாய் நிழல் காண்பித்துத் தருகின்றது! இது குறிப்பாக பாவநிவாரண பலிக்கென இஸ்ரயேல் ஜனங்களிடமிருந்து ஆட்டுக்கடாக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன எனும் அறிக்கையில் விளங்குகின்றது; ஆனால் இப்படியாக பெற்றுக்கொண்டது போன்ற எந்த அறிக்கையும் காளைப்பற்றி சொல்லப்படவில்லை. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டு மெனில், நமது கர்த்தர் அவரது அற்புதகரமான பிறப்பின் நிமித்தமாக பரிபூரணமானவராகக் காணப்பட்டார்; உண்மையில் அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்" இருந்தார். அவரது சீஷர்களாகிய நாமோ அபூரணர்களாகவும், உலகத்திலிருந்து வந்தவர்களாகவும், மற்றவர்களைப்போலவே கோபாக்கினையின் பிள்ளைகளாகவும் காணப்படுகின்றோம். உலகத்திலிருந்து எடுக்கப்பட்டவர்களாகிய நாமோ நமது அபூரணங்களைக் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தினால் மூடப்பெற்றவர்களாகக் கருதப்படுகின்றோம் - அதாவது பலியின் முதல் பங்கினால் மூடப்பெற்றவர்களாகக் கருதப்படுகின்றோம் - நிஜமான காளையின் இரத்தத்தினால், கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவநிவாரணம் பெறுபவர்களாக இருக்கின்றோம். நமது கர்த்தருடைய பலியானது அவரது ஊழியத்தினுடைய ஆரம்பத்தில் துவங்கி, ஊழியத்தினுடைய இறுதியில் நிறைவடைந்தது என்றும், நியாயப்பிரமாணத்தின்கீழ் 30-ஆம் வயதை அடையாதது வரையிலும் அவரால் பாவநிவாரணத்திற்கான பலியாகிட முடியாது என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காண்பித்துள்ளதை நாங்கள் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றோம். எழுதியிருக்கிறபடி, அவர் 30-ஆம் வயதை அடைந்த உடனே பலியினை ஏறெடுத்தார்: "இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவராயிருந்தபோது, யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்படும்படிக்கு யோர்தானுக்கு வந்தார்." தேவனிடம் தம்மைப் பலிசெலுத்தத்தக்கதாகக் கூடுமானமட்டும் சீக்கிரமாய் வந்தார், ஏற்றவேளையில் அவர் வந்தார் என்பதில் நமக்கு உறுதியே. அப்போதுதான் "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது" (எபிரெயர் 10:7) எனும் தீர்க்கத்தரிசனத்தை அவர் நிறைவேற்றினார் என்று அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். அப்போதுதான் "இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் (எபிரெயர் 10:9). வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், அங்கிருந்து அவர் "விசேஷித்த பலிகளுக்கான" நிழலினை நிறைவேற்றி முடிக்கத் துவங்கினார். அவர் தம்மை ஒப்புக்கொடுத்தது உடனடியாக நிகழ்ந்தது, ஆனாலும் அவரது சரீரமானது சோதனைகளுக்கும், ஜீவியத்தின் கஷ்டங்களுக்கும் ஒப்புக்கொடுக்கப்படும் காரியமானது அவரது 3½ வருஷ ஊழியகாலம் முழுவதும் நடைபெற்று வந்து, கல்வாரியில் நிறைவேறி முடிந்தது. அவர் அனைத்தையும், ஜீவனையும்கூட பிதாவிற்கான ஊழியத்திற்கென்று கொடுத்துவிடத் தக்கதாகத் தம்மையே ஒரு கணப்பொழுதில் அர்ப்பணம்பண்ணிவிட்டார். ஆனால் உண்மையிலேயே நேரத்தினை, செல்வாக்கினை, பலத்தினை, ஜீவனைக்கொடுக்கும் காரியமானது 3½ வருஷங்களாக நீடித்தது. ஞானஸ்நானத்தில் அவர் அர்ப்பணித்த தருணம் முதற்கொண்டு அவர் மரித்ததாகக் கருதப்பட்டார், அதேசமயம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார். அவர் புதுச்சிருஷ்டியென -

கருநிலையிலுள்ள ஆவிக்குரிய ஜீவியென ஜீவனோடு இருப்பவராகக் கருதப்பட்டார்; அந்த 3½ வருஷக்காலங்களில் மாம்சம் பட்சிக்கப்பட்டது மற்றும் புதிய சுபாவமானது கர்த்தருக்குள் பலமடைந்துகொண்டும், திவ்விய சித்தத்திற்கு இசைவாக வளர்ந்துகொண்டும் வந்தது. மாம்சத்தின் பாடுகள், பலி பட்சிக்கப்படுதல் சிலுவையில் நிறைவேறி முடிந்தது; பின்னர் மூன்றாம் நாளில் புதிய சுபாவமானது பிதாவின் வல்லமையினால் பூரணத்திற்கு, ஒரு மகிமையின் ஆவிக்குரிய ஜீவியாக, மரித்த உலகத்திற்குப் புலப்பாடாத ஒரு ஜீவியாக எழும்பிற்று; ஆனால் அவர் இனிமேலும் மரித்தவர் இல்லை என்பதையும், தாம் இனி மனுஷனாகிய இயேசு இல்லை என்பதையும், மகிமையடைந்துள்ள ஆவிக்குரிய இயேசுவாவார் என்பதையும் சீஷர்களுக்கு நிரூபிக்கத்தக்கதாக, பல்வேறு உருவங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் தோன்றி காட்சியளித்தார். ஆகையாலே "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்.

## மூன்று தகன-பலிகள்

நிழலில் கொழுப்பு முதலானவைகள் பிராகாரத்தின் வெண்கல தகனபலிபீடத்தின்மீது வைக்கப்படுகின்றன; இரத்தத்தைத் தவிர்த்து மீதியானவைகள் அனைத்துமே பாளயத்துக்குப் புறம்பே எரிக்கப்படுகின்றன. பிரதான ஆசாரியன் இரத்தத்தை எடுத்து, தன் கைகள் நிறைய தூபவர்க்கத்தினையும் எடுத்து, பலிபீடத்திலிருந்து நெருப்பையும் எடுத்துக்கொண்டு, உடனடியாகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள், பொன் குத்துவிளக்கினுடைய வெளிச்சத்திற்குள் கடந்துபோகின்றார். குத்துவிளக்கு மற்றும் அப்பம் வைக்கப்படும் மேஜைக்கு இடையிலுள்ள பீடத்தில் ஆசாரியன் நெருப்பினை வைத்துவிட்டு, அதன்மீது தூபவர்க்கத்தினைப் போடுகின்றார். தூபவர்க்கத்தினுடைய புகையானது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் பிரவேசித்தது என்பதாக நாம் வாசிக்கின்றோம். இது அவசியமானதாகக் காணப்பட்டது. பிரதான ஆசாரியனால் செலுத்தப்பட்ட தூபவர்க்கமானது சர்வ வல்லமையுள்ளவரினால் வேறொரு காட்சியாகப் பார்க்கப்படுவதே முக்கியத்துவம் வாய்ந்த காரியமாய் இருக்கின்றது. இது தேவனுக்குச் சுகந்த வாசனையாக இருந்தது. இது நமது கர்த்தருக்கு முன்பாக, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாகச் சென்று, அங்கு கிருபாசனத்தின்மீது அமர்ந்தது. மூன்று தகனபலிகளைக் கவனியுங்கள். பரிசுத்த ஸ்தலத்தில் இடம்பெற்ற பலியானது, கிறிஸ்துவினுடைய 3½ வருஷங்களின் போதுள்ள, அவரது பலியின்மீதிருந்த தெய்வீகப் பார்வையினைச் சுட்டிக்காட்டுகின்றது. பிராகாரத்திலுள்ள வெண்கல பலிபீடத்தில் கொழுப்பு தகனிக்கப்படுதல் என்பது, நமது கர்த்தருடைய பலியானது அவரது சீஷர்களால், உண்மையுள்ள பின்னடியார்களால், அதாவது நீதிமானாக்கப்பட்ட வர்களால், சுமார் 500-சகோதரர்களால் பார்க்கப்படுகிற காரியத்தினை அடையாளப்படுத்துகின்றது. அதுமுதற்கொண்டு இந்த நீதிமானாக்கப்படுகிற நிலைக்கு வருபவர்கள் அனைவரும் விசுவாசத்தின் மூலமாய் அதே பலியினைக் காணமுடிகிறவர்களாய் இருக்கின்றனர். மிருகத்தின் உடலானது பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்படுவது என்பது, நமது கர்த்தருடைய பலியானது மனுஷ கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும் காரியத்தினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. மனுஷரைப் பொறுத்தமட்டில் இது நேரத்தினையும், உடலாற்றலையும் தகாதவிதமாய்ப் பயன்படுத்தும் காரியமாய் இருக்கின்றது. மனுஷரைப் பொறுத்தமட்டில் அவருடைய ஜீவியம் நாற்றம் எடுத்ததாய்

இருந்தது, ஏனெனில் இவர்கள் அவரை ஆயக்காரர்கள் மற்றும் பாவிகளின் நண்பனாய்க் கருதினார்கள். பாளயத்திற்கு வெளியிலும், பிராகாரத்திற்கு உள்ளும், கூடாரத்தின் முதலாம் அறையிலும் ஏறெடுக்கப்பட்ட மூன்று தகன பலிகள் அனைத்தும், இந்தப் பல்வேறு தரப்பட்ட கண்ணோட்டங்களில் நமது கர்த்தருடைய பலியினை அடையாளப்படுத்திக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஒன்று முடிவடைந்த போது, அனைத்தும் முடிவடைந்தது - அதாவது நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டபோதாகும். அப்போது அவரது பலி நிறைவேறினது. அவர் திரைக்குப் பின்பு, உயிர்த்தெழுதலுக்குள்ளாகக் கடந்துபோனார். எனினும் இன்னொரு கோணத்தில் பார்க்கையில் நமது கர்த்தருடைய வேலை கல்வாரியில் நிறைவடையவில்லை. அது துவங்க மாத்திரமே செய்திருந்தது. அவர் தம் பலியின் முதலாம் பாகத்தினை மாத்திரம் நிறைவேற்றியிருந்தார், அதாவது ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த சரீரத்தை, அதாவது தம்மை பலிசெலுத்தினார். ஆனால் இன்னும் செய்வதற்குரிய பெரிய ஒரு வேலையினை அவர் பெற்றிருந்தார் - அதாவது பிதாவினுடைய திட்டத்தின்படி "பரலோகத்தில் பெயரெழுதப்பட்டவர்களாகிய முதற்பேறான சபையை" - சபை வகுப்பாரை ஏற்றுக்கொள்வதும், பலிசெலுத்துவதுமாகும். இந்தச் சபையின் தலையானவர் தம் பலியினை நிறைவேற்றி, மகிமையின் கர்த்தராகியுள்ளார்; மீதியிருப்பவர்கள் இன்னமும் அவருக்கொத்த அனுபவங்களின் ஊடே கடந்துசெல்ல வேண்டும். அவரது அடிச்சுவடுகளில் நடந்துசெல்ல வேண்டும்.

## அவர் நமக்காய்த் தோன்றினார்

நிழலில் பிரதான ஆசாரியன் தூபவர்க்கத்தினை ஏறெடுத்த பிற்பாடு, அவர் காளையின் இரத்தத்தினை எடுத்துக்கொண்டு, கல்லறையில் நமது கர்த்தர் மூன்று நாட்கள் காணப்பட்டதைச் சித்தரிக்கும் விதமாக இரண்டாம் திரையின்கீழ்க் குனிந்துவந்து, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார். அவர் திரைக்கு அந்தப் பக்கத்தில் ஆவியின் ஜீவியாக எழுந்திருந்து, "நமக்காய்த் தேவனுக்குமுன் தோன்றத்தக்கதாக" பரமேறினார். நிழலினை நாம் பார்த்து, இதன் நிறைவேறுதலை அடையாளம் காணமுயற்சிக்கையில், இக்காரியமானது கிருபாசனத்திற்கு முன்பும், கிருபாசனத்தின்மீதும் இரத்தம் தெளிக்கப்பட்டதில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்று பார்க்கின்றோம். அவர் நமக்காய்ப் பிரத்தியட்சமானார் என்று அப்போஸ்தலன் கூறுகையில், இது பிரதான ஆசாரியன் இரத்தத்தினைத் தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும் சமர்ப்பித்த காரியத்தினால் - அதாவது தம் சரீரமான சபைக்காகவும், திரள் கூட்டத்தாருக்காகவும் - விசுவாச வீட்டாருக்காய், நிஜமான லேவியர்கள் அல்லது லேவி வீட்டாருக்காய்ச் சமர்ப்பித்த காரியத்தினால் நிழல்படுத்தப்படுகின்றது என்று நாம் காண்கின்றோம்.

அடுத்ததாக நிழலின் மற்றப் பாகத்தினைப் பார்க்கலாம். காளையின் இரத்தத்தினைச் செலுத்தின பிற்பாடு, பிரதான ஆசாரியன் வந்து, ஏற்கெனவே விவரிக்கப்பட்டுள்ளதுபோன்று தன் கைகளை வெள்ளாட்டுக்கடாக்களின்மீது வைக்கின்றார்; அதில் ஒன்று பலிசெலுத்தப்படுவதற்கெனக் கர்த்தருடைய ஆடு என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது, மற்றொன்று அழிக்கப்படுவதற்கெனப் போக்காடாகுகின்றது. சீட்டுகள் போடப்பட்ட காரியமானது, எந்த ஆடு பலியாகுவதற்குரியது எனும் விஷயத்தில் பிரதான ஆசாரியன் எந்தத் தெரிந்துகொள்ளுதலையும் (choice) பெற்றிருக்கிறதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணியிருப்பவர்கள் அனைவருமே பலியாகுவதற்குத்

தகுதியானவர்கள் என்றபோதிலும், கர்த்தர் நபர்களைப் பார்ப்பதில்லை, மாறாக தங்களது உடன்படிக்கையின் கடமைகளுக்கு உண்மையாய் இருக்கும் அனைவரையும் ஏற்றுக்கொள்வதற்குச் சித்தமாயிருக்கின்றார். இந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களுமே, இந்தச் சுவிசேஷ யுகத்தின் அர்ப்பணிக்கப்பட்ட சபைக்கு நிழலாய்க் காணப்படுகின்றன; உலகத்திலிருந்து வந்துள்ள இவர்கள் தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்துள்ளனர். கர்த்தருடைய ஆடானது, பிரதான ஆசாரியனுடைய சரீரத்தின் அங்கத்தினர்களுக்கு அடையாளமாயிருக்கின்றது; போக்காடானது உண்மை விஷயத்தில் சபையில் குறைவுப்பட்டவர்களை, அதாவது "திரள் கூட்டத்தாரை," நிஜமான லேவியர்களை அடையாளப்படுத்துகின்றது. நிழலில் பிரதான ஆசாரியன் தன் கைகளைக் கர்த்தருடைய ஆட்டின்மீது வைத்து, அதனை அடித்தார், அதைக் கொன்றார்; பின்னர் அதன் இரத்தத்தினை எடுத்து, காளையின் இரத்தத்தைக்கொண்டு செய்ததுபோன்றே செய்தார்; அதன் கொழுப்பும் காளைக்குச் செய்யப்பட்டது போன்றே வெண்கல பலிபீடத்தில் வைக்கப்பட்டது மற்றும் அதன் மாம்சம் பாளயத்திற்கு வெளியே சுட்டெரிக்கப்பட்டது. இக்காரியமானது சபை கிறிஸ்துவின் பாடுகளில் பங்கினைப் பெற்றிருப்பதையும், அவரது உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றும் பங்கினைப் பெற்றிருப்பதையும் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது. இது அப்போஸ்தலர்களின் விஷயத்தில் மாத்திரமல்லாமல், அதுமுதற்கொண்டு தங்களுக்கு நன்மையாய் இருப்பவைகள் அனைத்தையும் கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் பலிசெலுத்தி வருபவர்கள் அனைவரின் விஷயத்திலும்கூட உண்மையாகவே இருக்கின்றது.

நம்முடைய ஆதார வசனத்தில் அப்போஸ்தலன், கர்த்தரைக் காளையுடனும், அவரது உண்மையுள்ள ஜனங்களை வெள்ளாட்டுக்கடாவுடனும் அடையாளப்படுத்திக் கூறுகின்றார். பாவநிவாரண பலிகளைத் தவிர வேறு எந்தப் பலிகளும் ஒருபோதும் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட்டதில்லை என்றும், இந்தப் பலிகளைத் தவிர வேறு எந்தப் பலிகளிலும் இரத்தமானது பலிசெலுத்தவும்படவில்லை, பாவநிவாரணம் உண்டாகத்தக்கதாக மகா பரிசுத்த ஸ்தலத்தில் தெளிக்கப்படவுமில்லை என்றும் அப்போஸ்தலன் நமக்கு நினைப்பூட்டுகின்றார். பின்னர் "இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்" (எபிரெயர் 13:12) என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். இவைகள் பாவங்களை எடுத்துப்போடுகிற "விசேஷித்த பலிகளாக" பரிசுத்த பவுல் அடிகளாரால் விவரிக்கப்பட்டுள்ளது. பாவநிவாரண நாளில் பிரதான ஆசாரியனால் ஏறெடுக்கப்படும் இந்த மாபெரும் பலிசெலுத்தும் வேலையின் விளைவானது (effect) ஒருபோதும் திரும்பத்திரும்பச் செய்யப்பட வேண்டியிருக்காது. இது தெய்வீக நோக்கங்களை முழுமையாக நிறைவேற்றிவிடும். இது உலகத்தினை முழுமையான ஒப்புரவாகுதலுக்குள் கொண்டுவந்துவிடும். புண்ணியமானது, காளையினுடைய பலியில்தான் காணப்படுகின்றது. காளை நமது கர்த்தர் இயேசுவுக்கு அடையாளமாயிருக்கின்றது; வெள்ளாட்டுக்கடாவானது 1,44,000-பேருக்கு அடையாளமாயிருக்கின்றது. நம்முடைய ஜீவியங்களைக் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுப்பதில் எந்த உண்மையான மதிப்புமில்லை - பாவத்தை எடுத்துப்போட்டுவிடுவதற்குரிய எவ்வாற்றலும் இல்லை. காளையினுடைய பலியின் புண்ணியத்தின்மூலம் இந்த வெள்ளாட்டுக்கடா வகுப்பாருக்கு முதலாவது செயல்படுத்தப்படும் நீதிமானாக்கப்படுதலின் வாயிலாகவே - நம்முடைய பலிக்கான மதிப்பு எல்லாமே வருகின்றது.

பிரதான ஆசாரியன் வெள்ளாட்டுக்கடாவின் இந்த இரத்தத்தினைத் தம்முடைய ஒரே ஒரு பலியின், அதாவது நித்திய ஜீவனை அடையப்போகும் யாவரையும் ஆசீர்வதித்திடும் அந்த ஒரே ஒரு பலியின் பாகமாகக் கருதினதாக நிழல் நமக்குத் தெரிவிக்கின்றது. காளையினுடைய இரத்தத்தை முதலாவதாகப் பிரதான ஆசாரியன் படைத்திட்ட நோக்கத்திலிருந்து மிகவும் வேறுப்பட்ட நோக்கத்திற்காக, அவர் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தினைப் படைக்கின்றார். காளையின் இரத்தமானது பிரதான ஆசாரியனுக்காகவும், அவரது வீட்டாரின் அங்கத்தினர்களுக்காகவுமானது; வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம் மீதமுள்ள இஸ்ரயேல் ஜனங்கள் அனைவருக்குமானதாகும். நிஜத்தில் கிறிஸ்துவின் இரத்தமானது, அவரது அர்ப்பணிக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கு, "சிறுமந்தைக்கு," "இராஜரிக ஆசாரியக் கூட்டத்தாருக்கு" மற்றும் லேவியர்களாகிய "திரள் கூட்டத்தாருக்கு" என்று பயன்படுத்தப்படுகின்றது; ஆனால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையினுடைய பலியின் புண்ணியமானது, ஜனங்கள் அனைவரின் சார்பாக - உலகத்தின் சார்பாக - அதாவது ஒப்புரவாகுவதற்குரிய மகிமையான வாய்ப்புகளைத் தங்களுக்கென்று பயன்படுத்திக்கொள்ள விரும்பிடும் உலகத்தார் யாவரின் சார்பாக அவரால் பயன்படுத்தப்படும்.

பிரதான ஆசாரியன் முதலாம் பலியினை நிறைவேற்றி, தம் இரத்தத்தினைச் செலுத்தினபோது, அவர் கடந்துவந்தார். அவர் பெந்தெகொஸ்தே நாளின்போது தம்மை வெளிப்படுத்தி, பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்களை அருளினதன் வாயிலாக, அடையாளமான விதத்தில் தம் கரங்களைச் சபையின்மீது வைத்தார்; இந்தப் பலியின் வாயிலாக, அவரது பின்னடியார்கள், அவரது பலியின் நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க முடிபவர்களானார்கள். ஆனால் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தினைப் படைத்த பிற்பாடு, பிரதான ஆசாரியன் அவரது வேலையினை முடித்ததாகக் காண்பிக்கப்படுகின்றார். அவர் பலிசெலுத்தும்போதுள்ள தனது வஸ்திரங்களைக் கழற்றிவிட்டு, கிறிஸ்துவின் குணலட்சணத்தினுடைய, இன்னுமாக உலகத்தின் தீர்க்கதரிசியென, ஆசாரியரென, இராஜாவென, நியாயாதிபதியென, மத்தியஸ்தரென அவர் அபிஷேகிக்கப்பட்டுள்ள கனமிக்க ஊழியத்தினுடைய மகிமையான பண்புகளை நிழலில் காண்பித்திடும் மகிமையான மற்றும் அலங்காரமான தனது வஸ்திரங்களை உடுத்திக்கொள்கின்றார். இப்படியாக உடுத்திக்கொண்டு, வெளியே வரும்போது, இது நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையினையும், திவ்விய மகிமை மற்றும் வல்லமையை அவர் எடுத்துக்கொண்டதையும் அடையாளப்படுத்துகின்றது; அப்போது சபை, அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களென, இஸ்ரயேலுக்கும், பூமியின் குடிகள் அனைவருக்கும் புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை வழங்குவதற்குவேண்டி ஒத்துழைக்கத்தக்கதாக அவருடன்கூடக் காணப்படுவார்கள். பாவநிவாரண நாளின்போது இஸ்ரயேல் ஜனங்கள் இரட்டு உடுத்திக்கொண்டு, நல்லப் பதார்த்தங்களை உண்ணாமல், மகிமையும், அலங்காரமுமான வஸ்திரத்தில் பிரதான ஆசாரியன் வெளியே வருவது வரையிலும் உபவாசமிருந்து காத்திருந்ததுபோலவே, இந்தச் சுவிசேஷயுகம் முழுவதிலும் இருந்துவந்துள்ளது. உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது மற்றும் பாவத்தினால், மரணத்தினால், ஒழுக்கக்கேட்டினால் மூழ்கடிக்கப்பபட்டிருக்கின்றது. இவர்களைக்குறித்துப் பரிசுத்த பவுல் அடிகளார், "நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது" (உரோமர் 8:22, 19) என்று கூறியுள்ளார்; இவர்கள் யூதருடைய

பிரதான ஆசாரியனின் மகிமையான வஸ்திரங்களினால் அடையாளப்படுத்தப்படும் தலை மற்றும் சரீரமாகிய பிரதான ஆசாரியனுக்காய்க் காத்திருக்கின்றனர். நிழலைத் தொடர்ந்து இன்னும் நாம் பார்க்கையில், பிரதான ஆசாரியன் தனது மகிமையான வஸ்திரங்களில் பலிபீடத்தினிடத்திற்குச் சென்று, தனது கரங்களை உயர்த்தி, ஜனங்களுக்குத் தனது ஆசீர்வாதங்களைக் கொடுத்தார் - புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை, பாவ மன்னிப்பாகிய ஆசீர்வாதங்களை, மாம்சமான யாவர்மீதும் பரிசுத்த ஆவியினைப் பொழிந்தருளும் ஆசீர்வாதத்தினைக் கொடுத்தார் என்று பார்க்கின்றோம். நிழலில் ஓர் ஆசீர்வாதம் இப்படியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது என்றால், நிஜத்தில் அந்த ஆசீர்வாதம் எவ்வளவு பெரியதாயிருக்கும்! நிழலில் ஜனங்கள் எழுந்திருந்து, தங்கள் இரட்டு வஸ்திரத்தையும், உபவாசத்தையும் களைந்து தாங்கள் மன்னிப்பை அடைந்ததில் களிகூர்ந்ததுபோன்று, உலகத்தினுடைய ஆயிரவருஷ விடியலின்போது, உலகம் மகா பிரதான ஆசாரியன் மற்றும் பாவநிவாரண பலிகளைக்குறித்த புரிந்துகொள்ளுதலுக்குள்ளாய் வருகையில், அவர்கள் பாவம் மற்றும் மரணம் மற்றும் சீர்க்கேட்டினின்று எழும்பி, திவ்விய கிருபையில் களிகூருவார்கள்; உலகம் உண்டானது முதற்கொண்டு பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் அனைவரின் வாயினின்று புறப்பட்ட காரியங்களின்படியே, இஸ்ரயேலுக்கு முன்னதாக வைக்கப்படும் திரும்பக்கொடுத்தலின் அநேகம் ஆசீர்வாதங்கள்குறித்த உணர்ந்துகொள்ளுதலிலும் களிகூருவார்கள். (அப்போஸ்தலர் 3:21)

## தம்முடைய சொந்த இரத்தத்தினாலே

ஆதார வசனத்தில் அப்போஸ்தலன் "ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்" என்று கூறுகின்றார் (எபிரெயர் 13:13). எந்த ஜனங்களை இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினாலே பரிசுத்தஞ்செய்வார் என்று கேள்வி கேட்கப்படுகின்றதா? "சகல ஜனங்கள் - அதாவது அவர் வாயிலாகப் பரிசுத்தமாக்கப்படுதலையும், சுத்திகரிக்கப்படுதலையும், ஒப்புரவாகுதலையும் ஏற்றுக்கொள்ளும் சகல ஜனங்கள்" ஆவார்கள் என்ற பரந்த வார்த்தைகளில் நாங்கள் பதிலளிக்கின்றோம். அவர் தம்மையே அனைவருக்குமான மீட்கும்பொருளாகக் கொடுத்துள்ளதாக நாம் வாசிக்கின்றோம். அவர் அதை உடனடியாக அனைவருக்கென்றும் செயல்படுத்தாமல் (apply), சபைக்கு, "விசுவாச வீட்டாருக்கு," நமக்கு மட்டுமே செயல்படுத்தியுள்ளார் எனும் காரியம் எந்த மாற்றத்தையும் கொண்டுவருகிறதில்லை. தம்மை அவர் பலிசெலுத்தினதற்கான நோக்கம், அனைவருக்காகவும்தான். இக்காரியம் இதுவரையிலும் இயேசுவினுடைய பலியின் புண்ணியமானது "விசுவாச வீட்டாருக்கு" அப்பாற்பட்டு யாருக்கும் கடந்து வரவில்லை எனும் உண்மைக்கு எவ்வித மாற்றத்தினையும் கொண்டுவருகிறதில்லை. ஏற்றகாலத்தில் அவரது புண்ணியமானது சபையின் மூலமாக ஒவ்வொரு சிருஷ்டியினிடத்திற்கும் கடந்துவரும். ஆகையாலே "உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது மற்றும் இயேசு திவ்விய கிருபையினாலே ஒவ்வொரு மனுஷருக்காகவும் மரணத்தினை ருசிப்பார்த்ததினால், அவரது மரணத்தின் மூலமாக நமக்கான இரக்கத்தினைப் பெற்றுக்கொள்கின்றோம்.

## போக்காட்டினுடைய பங்கு

போக்காடு வகுப்பார் என்பவர்கள் ஆவிக்குரிய வகுப்பாரை அடையாளப்படுத்த முடியாது, காரணம் போக்காடானது ஒருபோதும் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாகவோ அல்லது மகா பரிசுத்த

ஸ்தலத்திற்குள்ளாகவோ சென்றதில்லை என்று முதிர்ச்சியில்லாத சிந்தனையினால் சிலர் குறிப்பிடுகின்றனர். காளையும் சரி, கர்த்தருடைய ஆடும் சரி ஒருபோதும் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாகவோ அல்லது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாகவோ சென்றதில்லை என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். இவைகளின் இரத்தம் மாத்திரமே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுபோகப்பட்டது மற்றும் தெய்வீகச் சித்தம் அல்லது ஏற்பாட்டின்படி செய்யத்தக்கதாகப் பூமிக்குரிய உரிமைகளையும், சிலாக்கியங்களையும், ஜீவனையும் தானாய் விரும்பி ஒப்படைத்துவிடுவதை இரத்தமானது அடையாளப்படுத்துகின்றது. போக்காடு அல்லது "திரள் கூட்டம் வகுப்பாரில்" உள்ளவர்கள், தங்களைப் பலியாக ஒப்புக்கொடுத்து, ஏற்றுக்கொள்ளப்பட்டும், தங்களது பலிக்கடுத்த நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறிப்போனவர்கள் ஆவார்கள். பிரதான ஆசாரியனுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும், திவ்விய தளத்தில் அவரது மகிமையின் பங்காளிகளாகவும் ஆகுவதற்குத் தவறிப்போன இவர்கள் - இவர்களது மாம்சம் அழிக்கப்பட்டுப்போய், ஆவியானது கர்த்தர் இயேசுவின் நாளில் இரட்சிக்கப்படத்தக்கதாக ஒருவேளை கர்த்தரிடமிருந்து விசேஷமாய் உபத்திரவத்தின் அனுபவத்தை அருளப் பெற்றுக்கொள்ளவில்லையெனில் - இவர்கள் எதையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்களது விசுவாசத்தின் காரணமாகவும், மரணபரியந்தமான இவர்களது அர்ப்பணத்தின் காரணமாகவும் இவர்கள் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் தங்கள் அர்ப்பணிப்பினை நிறைவேற்றத் தவறினபடியினாலும், தற்கால பூமிக்குரிய ஜீவியத்தைப் பற்றிக்கொண்டு காணப்படுவதினாலும், இவர்களது மாம்சம் அழிக்கப்படத்தக்கதாக ஒருவேளை இவர்களுக்காக இத்தகைய ஏற்பாடு பண்ணப்படவில்லையெனில், இவர்கள் அனைத்தையுமே இழந்துபோக வேண்டியவர்களாய் இருப்பார்கள். இவர்களைக் கனவீனமான வகுப்பார் என்றோ, உண்மையற்ற வகுப்பார் என்றோ, வளர்ச்சியடையாத வகுப்பார் என்றோ நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. யார் ஒருவரும் மறுரூபம் அடைந்து, தேவனுக்கும், அவரது நீதிக்கும் பூரணமான நேர்மை நிலையினை எட்டாதது வரையிலும், திவ்விய ஏற்பாட்டின்கீழ் எந்த ஜீவத்தளத்திலும் நித்திய ஜீவனை அடையமுடியாது. தேவனுக்குக் கீழ்ப்படியும் உயர்வான தரநிலையினை ஒருவன் அடையாத வரையிலும், அவன் "திரள் கூட்டத்திலோ" அல்லது வேறு ஏதேனும் வகுப்பாரிலோ நித்திய ஜீவனை அடைவதற்குப் பாத்திரமாய் எண்ணப்படுவதில்லை. இவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டுள்ளபடியால், இவர்களால் தங்களது பூலோக உரிமைகளையும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களையும் திரும்பப்பெற முடியாது. இவர்கள் ஒருமுறை அர்ப்பணம்பண்ணி பலியாகியுள்ளதால், திரும்பிச்செல்லுதல் என்பது கூடாதகாரியம். ஆவிக்குரிய ஜீவனை இவர்கள் அடையவில்லையெனில், இது இரண்டாம் மரணத்தை இவர்கள் விஷயத்தில் குறிக்கின்றதாய் இருக்கும்.

இந்தத் "திரள் கூட்ட" வகுப்பாருக்குப் பாவநிவாரணத்துடன் எந்தச் சம்பந்தமும் இல்லை, ஏனெனில் போக்காடானது பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படுவதுமில்லை, அதன் இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுசெல்லப்படவுமில்லை. அப்படியானால் லேவியராகமம் 16:21-ஆம் வசனத்தின்படி, ஆரோன் தனது கைகளைப் போக்காட்டினுடைய தலையின்மீது வைத்து, அதன்மீது இஸ்ரயேல் ஜனங்களுடைய அக்கிரமங்கள் அனைத்தையும் அறிக்கையிட்டு, அவர்களது மீறுதல்கள் அனைத்தையும் போக்காட்டினுடைய தலையின்மீது சுமத்துவதின் அர்த்தமென்ன?

காளையின் இரத்தத்தினாலும், கர்த்தருடைய ஆட்டின் இரத்தத்தினாலும் உண்டான பாவநிவாரணம் என்பது, ஆதி ஆதாமின் பாவத்திற்கும், அதனால் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள பெலவீனங்கள் மற்றும் அபூரணங்கள் அனைத்திற்குமான பாவநிவாரணத்தை அடையாளப் படுத்துகின்றது. இந்த இரண்டு மிருகங்களின் இரத்தமானது சகல ஜனங்களுடைய இத்தகைய பாவங்கள்

அனைத்திற்கும் நிவாரணத்தினை உண்டுபண்ணியுள்ளபடியால், போக்காட்டினுடைய தலையின்மீது அறிக்கைப்பண்ணப்படத்தக்கதாக மீதி எதுவும் இருப்பதில்லை என்பதும் வெளியாகுகின்றது. அப்படியானால் ஆரோன் போக்காட்டினுடைய தலையின்மீது அறிக்கையிட்ட பாவங்கள் என்னவாக இருக்கும்? எங்கள் பதில்: "எங்களுக்கு மீறுதல்கள் செய்பவர்களை நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் மீறுதல்களையும் எங்களுக்கு மன்னியும்" என்று நமது கர்த்தர் கற்றுத்தந்த ஜெபத்தில் ஒருவகை மீறுதல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. நமக்கு விரோதமாய் மீறுதல் புரிந்துள்ளோரை நாம் மன்னித்தால், தேவனும் நம்முடைய மீறுதல்களை மன்னிப்பார். ஆனால் அவர் ஆதி பாவத்தினை மன்னிக்கவில்லை; மாறாக அதினிமித்தம் அவர் நம்மை மரணத்திற்குள்ளாகத் தீர்த்து, அவருடைய குமாரனை, நம்முடைய மீட்பராகும்படிக்கு அருளினார். மீறுதல்கள் என்பவைகள், கர்த்தருடைய சித்தத்தினை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்று நன்கு அறிந்திருக்க, அதில் காண்பிக்கும் அலட்சியத்தில் அல்லது புறக்கணிப்பில் அல்லது குறைபாட்டில் விளங்கும் தவறுகள், குறைவுகள் முதலியவைகளாகக் காணப்படுகின்றன. கர்த்தர் உலகத்தின் காரியங்கள் அனைத்தையும் குறித்து மிகவும் தளர்வற்ற கணக்கினைப் பார்ப்பவராகத் தம்மை வெளிப்படுத்துகின்றார். யூத ஜனங்கள்மீது அவர்களுடைய அறுவடை காலத்தின் நிறைவில் கடந்துவந்த கடுமையான உபத்திரவங்களானது, பழிவாங்கும் விதத்திலுள்ள அனுபவமாகும் என்று கர்த்தர் விவரிக்கின்றார். அவர்களது யுகத்தினை முடிவிற்குக் கொண்டுவந்த அந்தப் பயங்கரமான உபத்திரவத்தின்போது, நமது கர்த்தர் முன்னறிவித்ததுபோன்று, அவர் நீதிமானாகிய ஆபேல் முதற்கொண்டு, அப்போது வரையிலும் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தம் அனைத்திற்குமாகக் கணக்கு விசாரித்தார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு அநீதியும், பழிவாங்குதலுக்காக, தண்டனைக்காகக் கூக்குரலிட்டுக்கொண்டிருக்கின்றது. மரணத்தினைத் தண்டனையாகப் பெற்றிருந்த மகா ஆதி பாவமானது, நமது கர்த்தர் அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராக மரித்ததன் மூலம் கணக்குக் கட்டித்தீர்க்கப்பட்டது. ஆனால் நீதிக்குக் கணக்குச் சரிக்கட்டப்படாத நிலையில் முற்காலங்களிலும், தற்காலத்திலும் அநேகம் பாவங்கள், அநேகம் அநீதிகள் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் பலிபீடத்தின்கீழ் ஆத்துமாக்கள்: "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர் களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" என்று கூக்குரலிடுவதாக நாம் வாசிக்கின்றோம் (வெளிப்படுத்தல் 6:10). நீதியின் நிமித்தமாகத் துன்புறுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கையானது நிறைவுபெறுவதற்காக நீதியானது காத்துக்கொண்டு மாத்திரம் இருக்கின்றது மற்றும் எண்ணிக்கை நிறைவுபெற்றவுடன் தண்டனைக் கடந்துவரும். யூத யுகத்தினை நிறைவுசெய்த உபத்திரவ காலத்தினைப்போன்றே, இந்த யுகத்தினையும் நிறைவுசெய்திடும் மகா உபத்திரவ காலமானது, நீதியின் கோரிக்கைகளைச் சரிக்கட்டும் காலமாயிருக்கும். அநுக்கிரக காலத்தில் பலிசெலுத்துவதற்குத் தவறிடும் "திரள் கூட்டத்தார்," ரத்து செய்வதற்கென உலகத்தின்மீது வரவிருக்கின்ற, அதாவது பொதுவான மனுக்குலத்தின்மீது வரவிருக்கின்ற அந்த உபத்திரவத்தில் கொஞ்சம் பங்கடைவதற்கென அனுமதிக்கப்படுவார்கள். காலம் வரும்போது "திரள் கூட்டத்தாரிலுள்ள" இந்த அருமையான நண்பர்கள், கர்த்தர் இயேசுவினுடைய நாளில் ஆவிக்குரிய ஜீவிகளெனத் தாங்கள் இரட்சிக்கப்படத்தக்கதாக மாம்சம் அழிக்கப்படுவதுகுறித்தும், பாடுகளிலுள்ள தங்கள் பங்கினைக்குறித்தும் களிகூருவார்கள். உலகத்தினுடைய அக்கிரமங்களின் நிமித்தமாக இவர்கள் அனுபவிக்கவிருக்கும் உபத்திரவமானது, அந்த உபத்திரவத்தின் நாளில் மற்றவர்களால் அனுபவிக்கப்படும் உபத்திரவங்களைவிட அதிகமாய் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

R5462

# ஆதாமின் பாவத்திற்கான மற்றும் ஓரளவு மனப்பூர்வமாய்ச் செய்யப்பட்ட பாவத்திற்கான நிவிர்த்தி

பாவத்திற்கான நிவிர்த்தி என்பது இரண்டு வெவ்வேறு கோணங்களிலிருந்து பார்க்கப்படலாம். ஆதாமின் பாவத்திற்காகத் திவ்விய நீதிக்கு நிவிர்த்தி செய்யப்படுவது என்பது முதலாவது அவசியமாயிருந்தது. மனுஷசந்ததி மரித்துப்போக வேண்டும் என்றுள்ள அண்டசராசரத்தின் மகா பிரதான நியாயாதிபதியினுடைய ஆணையானது, ஆதாமின் கீழ்ப்படியாமை காரணமாகக் கடந்துவந்தது; இந்த ஆணையினுடைய நிபந்தனைகள் சந்திக்கப்பட்டு, அது ரத்து செய்யப்படாதது வரையிலும், ஒருவரும் மரணத்தினின்று விடுதலைப்பண்ணப்பட முடியாது. எனினும் நீதியினுடைய அந்த ஆணை ரத்து செய்யப்படுதல் என்பது, ஒரு நபரை உடனடியாகப் பூரண மனுஷனாக்கிடாது.

ஒருவேளை ஏதோ ஒரு குற்றத்திற்காக ஒரு மனுஷன் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் பத்து வருஷங்களுக்குப் பின்னர் யாரோ ஒருவர் கைதியினுடைய கணக்கைக் கட்டித்தீர்த்து, சட்டத்தின் கோரிக்கைகளைச் சந்திக்கின்றார் மற்றும் கைதி விடுதலைச்செய்யப்படுகின்றார் - நீதிக்கு நிவிர்த்தி செய்யப்பட்டாயிற்று. ஆனால் சிறைச்சாலை வாழ்க்கையினின்றுள்ள விடுதலை என்பது கைதி காவலில் இருந்த காலங்களில் அவனால் இழந்துபோகப்பட்ட தெளிவான கண்பார்வை, அவனது பற்கள், அவனது முடி, அவனது ஆரோக்கியம் அல்லது வேறு எதையேனும் அல்லது பலவீனப்பட்டுப்போன எதையேனும் அவனுக்குத் திரும்பி கொடுத்திடாது. இதுபோலவே மனுக்குலத்திற்காக நீதிக்கு என்னதான் நிவிர்த்தி செய்யப்பட்டாலும், இவர்கள் கல்லறையினின்று விழித்தெழுப்பப்படும்போது, இவர்கள்மீது பாவம் ஏற்படுத்தின அச்சடையாளங்களிடமிருந்து விடுதலையாகிறதில்லை.

அப்போது உலகத்தின்மீது எந்தத் திவ்விய தயவின்மையும் காணப்படுவதில்லை, காரணம் மனுஷனுடைய விடுதலைக்கான விலையானது கட்டித்தீர்க்கப்பட்டிருக்கும். ஆனால் ஆயிர வருஷ யுகத்தினுடைய துவக்கத்தில், மனுக்குலத்திடம் விழுகையின் காரணமாய் உண்டான குறைவுகள் காணப்படவே செய்யும். மனுக்குலத்தைச் சீர்ப்பொருந்தப்பண்ணுவதும், அவர்களை அபூரணம் மற்றும் பெலவீனத்தினின்று வெளியே தூக்கியெடுப்பதும் அந்த யுகத்தினுடைய வேலையாகக் காணப்படும். நீதிக்கு நிவிர்த்தி செய்யப்பட்டிருப்பதினால், மனுஷன் அவனது விழுந்துபோன நிலைமையினின்று எழும்புவதற்கு உதவப்படுவான்.

தம் சொந்த ஜீவனைப் பலிசெலுத்தி வாங்கின உலகமானது, கிறிஸ்துவின் கரங்களில் காணப்படும். நீதிக்கு நிவிர்த்தி செய்யப்படும் காரியமானது, மனுஷனை அபூரணத்தினின்று திரும்பிவரப்பண்ணாது என்றும், சட்டப்பூர்வமாய் நிவிர்த்தி செய்யப்படும் காரியமானது, தேவ அனுக்கிரகமின்மையினை மாற்றுவதை மாத்திரம் - மரண தண்டனையை ரத்து மாத்திரம் செய்கின்றது என்றுமுள்ள காரியங்களை நாம் மனதில்கொள்ள வேண்டும். இது மனுஷன் தேவனின் தயவுபெறும் நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்குரிய மற்றும் ஆயிர வருஷஅரசாட்சியினுடைய முடிவில் திவ்விய அங்கீகரிப்பிற்குப் பாத்திரமான நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்குரிய வாய்ப்பினைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

புதிய உடன்படிக்கையானது துவங்குவதற்கு முன்னதாக திவ்விய நீதிக்கு நிவிர்த்தி செய்யப்படவேண்டிய காரியமானது, ஆதாமின் பாவங்களுக்காக நிவிர்த்தி செய்யப்படும் காரியத்தினை மாத்திரம் உள்ளடக்குவதில்லை, இன்னுமாக ஓரளவு மனப்பூர்வமாய்ச் செய்யப்பட்ட பாவங்களுக்கு அடிகள் கொடுக்கப்படுவதையும்கூட உள்ளடக்கியுள்ளதாய் இருக்கின்றது; அதாவது நல்நடக்கைக்கான அறிவைப் பெற்றிருப்பவர்களாகவும், தங்கள் அநீதியான வார்த்தைகள் மற்றும் கிரியைகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவில் பொறுப்பாளிகளாகவும் காணப்படும் மனுக்குலத்தினால் செய்யப்பட்டுள்ள சில கீழ்த்தரமான அநியாயங்களுக்காக நிவிர்த்தி செய்யப்படுவதையும்கூட உள்ளடக்கியுள்ளதாய் இருக்கின்றது. ஓரளவிற்கு இவர்கள் அறியாமையில்தான் காணப்பட்டனர்; ஆனாலும் பெரும்பாலும் இவர்கள் மனப்பூர்வமாகவே செய்துள்ளனர்; மேலும் பொறுப்பினுடைய அளவிற்கேற்ப நீதியானது பதில் கேட்கும்.

## யூத யுகத்தின் கணக்கு விசாரிக்கப்படுதல்

யூத யுகத்தினுடைய முடிவின்போது, தேவன் இஸ்ரயேல் ஜனங்களிடம் கணக்கு விசாரித்தார் மற்றும் இது உலகம் அறிந்துள்ள மிகக் கொடிதான உபத்திரவ காலங்களில் ஒன்றாகக் காணப்பட்டது. அந்த யுகத்தைக்குறித்து - அப்போது வாழ்ந்துகொண்டிருந்த தலைமுறையினர்குறித்து இயேசு பேசுகையில், தேவன் ஆபேலின் காலம் துவங்கி . . . அவர் பேசிக்கொண்டிருந்த காலம் மட்டும் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தத்திற்காகச் சரிக்கட்டுவார் என்று கூறியுள்ளார். (மத்தேயு 23:34-36)

உலகத்தினால் ஓரளவு மனப்பூர்வமாய்ச் செய்யப்பட்ட இந்தப் பாவங்கள் என்பவை, பாவநிவாரண பலிகளினால் முழுமையாய் மூடப்படுகிறதில்லை. இவைகள் மனப்பூர்வமாய் இருக்கும் அளவுக்கு, தண்டனை வழங்கப்பட்டு நிவிர்த்தி செய்யப்படவேண்டும். இந்தப் பாவங்களும், அக்கிரமங்களும் போக்காடு வகுப்பாராகிய - திரள் கூட்டத்தார்மீது வைக்கப்படுவதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. சீக்கிரத்தில் செயல்படப்போகின்ற மாபெரும் நிஜத்தில், இந்த வகுப்பார் உலகத்தினால் ஓரளவு மனப்பூர்வமாய்ச் செய்யப்பட்ட பாவங்களில் சிலவற்றிற்காக - அதிலும் விசேஷமாகப் பாபிலோனுடைய பாவங்களுக்காகப் பாடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய துவக்கம் முதல் சிந்தப்பட்ட தேவனுடைய பரிசுத்தவான்கள் அனைவரின் இரத்தத்திற்கான கணக்கானது, தற்காலத் தலைமுறையினரிடத்தில், இதுவரை இல்லாத "மகா உபத்திரவ காலத்தின்போது" விசாரிக்கப்படும்.

கடந்த காலங்களிலுள்ள இரத்த சாட்சிகளாகிய, "பலிபீடத்தின்கீழுள்ள ஆத்துமாக்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூறி" நீதி செய்யப்படத்தக்கதாகக் கூக்குரலிட்டுக் கொண்டிருப்பதாக அடையாளமான விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளனர் (வெளிப்படுத்தல் 6:9-11). இவர்கள் தங்கள் சகோதரர்களும் இவர்களைப்போன்று கொல்லப்பட்டு, பின்னர் குற்றங்கள் அனைத்திற்காகவும் பழிவாங்கப்படுவது வரையிலும் காத்திருக்கும்படியாகச் சொல்லப்பட்டிருக்கின்றனர்.

## சுவிசேஷ யுகத்தின் கணக்கு விசாரிக்கப்படுதல்

மேற்கூறிய காரியங்களை வைத்துப்பார்க்கையில், இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவிலும், மற்றுமொரு கணக்கு விசாரிக்கப்படுதல் சம்பவிக்கும் என்று அறிகின்றோம். எந்த ஒரு ஜாதியார்

தோன்றினது முதற்கொண்டு சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவ காலம் ஒன்று சீக்கிரம் வரவிருக்கின்றது (மத்தேயு 24:21-22). இதுகுறித்து அநேக தீர்க்கத்தரிசன வேதவாக்கியங்களில் அழுத்தம்கொடுத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. நமது கர்த்தர் மறுபடியும் இப்பொழுது மகா நியாயாதிபதியாக வந்து இருக்கின்றார் மற்றும் புயல் மேகங்களானது இராஜாவாகிய அவரது பிரசன்ன நாளில் வேகமாய்த் திரண்டு கூடிவருகின்றது.

இரண்டு யுகங்களின், அதாவது சுவிசேஷ யுகம் மற்றும் அதற்கு முன்புள்ள யுகத்தின், அதாவது நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் சிந்தப்பட்டது முதற்கொண்டு, தற்காலம் வரையுள்ள காலப்பகுதியின் தப்பிதங்கள் யாவற்றிற்குமான முழுச்சரிக்கட்டுதலும் ஏன் இந்த யுகங்களினுடைய முடிவின்போது நிறைவேற்றப்படுகின்றது என்று கேள்வி எழும்புகின்றதா? இதற்கு எங்கள் பதில்: காரணம் ஒவ்வொரு யுகத்திற்கான பிரதான வெளிச்சமானது, அதன் முடிவின்போது வருகின்றது; மேலும் இத்தகைய வெளிச்சத்திற்கு எதிராகப் பாவம் செய்பவர்கள், இவர்களுக்கு முன்புள்ள காலங்களில் குறைவான வெளிச்சம் பெற்று காணப்பட்ட பொல்லாதவர்களைக்காட்டிலும் மிகக் கடினமான நியாயத்தீர்ப்பிற்குப் பாத்திரமாய்க் காணப்படுகின்றனர். தற்காலத்தின் வெளிச்சத்தின்கீழ்க் கடந்த காலங்களினுடைய தவறுகளுக்கு உடன்படுவது என்பது, பொறுப்பினைப் பெருக்கி, அனைத்திற்குமான வாதைகளுக்கு ஆளாகுவதற்குப் பாத்திரமாக்குகின்றது.

இன்றுள்ள உலகத்தாரின், அதிலும் விசேஷமாகக் கிறிஸ்தவ மண்டலத்தின் இந்த அக்கிரமங்களை அல்லது அநியாயங்களைப் பார்த்தாலே நாம் புரிந்துகொள்ளலாம். இப்பொழுது ஒட்டுமொத்த உலகத்தின்மீது அதிகமான வெளிச்சம் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது; அதிலும் விசேஷமாய் உலகத்தாரிலுள்ள நாகரிகமடைந்தோர்மீது பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. யூதருடைய நியாயப்பிரமாணத்தில் முன்வைக்கப்பட்டதும், பின்னர் கர்த்தரினாலும் அப்போஸ்தலர்களாலும் விவரிக்கப்பட்டதுமான நீதியின் கொள்கைகளானது, நீதி-அநியாயம் தொடர்பாகவும், சரி-தவறு தொடர்பாகவும், நன்மை-தீமை தொடர்பாகவும் பொது ஜனங்களுடைய மனங்களை வெளிச்சமூட்டியுள்ள படியால், இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் தலைமுறையினர் போன்று இந்தளவுக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களாக வேறு யாரும் காணப்படுவதில்லை.

அறிவு இப்படிப் பெருகினபோதிலும், உலகம் முழுவதும் கடுமையான அக்கிரமங்கள் நிலவிவந்தபோதிலும், வெகுசிலரே உலகக் காரியங்களையும், பொருளாதாரக் காரியங்களையும், சமுதாயக் காரியங்களையும், மதக் காரியங்களையும் சரிப்படுத்துவதற்கும், சமப்படுத்துவதற்கும் ஏதுவாக எதையேனும் செய்திடுவதற்கு விருப்பமாய் இருப்பதை நாம் காண்கின்றோம். அநேக நன்மைகளைப் பெற்றிருக்கும் பெரும்பாலானவர்களோ, அந்நன்மைகளை தங்களுக்கே பயன்படுத்திடுவது என்பது அநியாயம் என்றும், அநீதி என்றும் அடையாளம் கண்டுகொண்டபோதிலும், அவைகளைத் தங்களுக்கென்றே வைத்துக்கொள்ள விரும்புவதாகத் தெரிகின்றது.

கடந்த காலங்களில் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட பெரும்பான்மையான தீமைகளுக்கு உரிய தண்டனை இதுவரை வரவில்லை என்றும் நம்மால் காணமுடிகின்றது. கிறிஸ்துவின் நாமத்தில் உண்மை சபையினைத் துன்புறுத்தின மகா அமைப்புகளானது இன்னமும் இயங்கிவருகின்றது மற்றும் செழித்தோங்குகின்றது; எனினும் இவைகள் நீதியான பலனை

இன்னும் அடையவில்லை. மிகவும் அண்மையில் காணப்படுகின்ற பயங்கரமான உபத்திரவ காலத்தில் - ஒழுங்கின்மையில் ஒவ்வொரு மனுஷனுடைய கைகளும் தன் அயலானுக்கு எதிராக ஓங்கப்படும் காலத்தில், "வெளியே போகிறவர்களுக்கும், உள்ளே வருகிறவர்களுக்கும் சமாதானம் இல்லாத" காலத்தில், மகா பாபிலோன் பலத்த ஏந்திரக்கல்லெனக் கடலுக்குள் அமிழ்ந்துபோய்விடும்.

## போக்காடு வகுப்பாரால் சட்டப்படி நிவிர்த்தி செய்யப்படுதல்

நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளதுபோன்று, இந்தப் பாவங்களைச் சட்டப்படி நிவிர்த்தி செய்திடும் காரியமானது, போக்காடு வகுப்பாரால் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதாகத் தெரிகின்றது (லேவியராகமம் 16:20-22). நிழலில் இஸ்ரயேல் உலகத்திற்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது. இந்தப் போக்காட்டினுடைய நிழலில், அர்ப்பணம்பண்ணின பிற்பாடு, "பாளயத்திற்குப் புறம்பே கிறிஸ்துவின் நிந்தனைகளைச் சுமப்பதற்காக" போவதற்கு விருப்பமற்றுக் காணப்படும் திரள் கூட்டத்தார் தனிமை மற்றும் உபத்திரவம் எனும் வனாந்தரத்திற்குள் அனுப்பிவைக்கப்படுவதைக் கர்த்தர் சித்தரித்துக் காட்டுகின்றார். இவர்கள் பாவநிவாரணத்தில் பங்கடைவதில்லை, மாறாக உலகத்தினுடைய மனப்பூர்வமான பாவங்கள் சிலவற்றின் பாரப்பளுவினைச் சுமப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர், ஆம்! கட்டாயப்படுத்தப்படுகின்றனர் மற்றும் இவர்களது ஆவிக்குரிய ஜீவனானது கர்த்தர் இயேசுவின் நாளில் இரட்சிக்கப்படத்தக்கதாக, இப்படி உலகத்திற்கு மரித்தவர்களாகுவார்கள்.

தற்காலத்தில் குறிப்பாய் அதிக எண்ணிக்கையில் காணப்படும் இந்த வகுப்பார், இந்த மகா உபத்திரவ காலத்தில் பாடுபடத்தக்கதாக எதிராளியானவனிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். இவர்களில் யாரெல்லாம் இந்த உபத்திரவங்களுக்கு உண்மையாயும், நேர்மையாயும் இணங்குவார்களோ, அத்தகையவர்கள் ஜெயம்கொண்டவர்களாகக் கருதப்பட்டு வெளிப்படுத்தல் 7-ஆம் அதிகாரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதுபோன்று வெற்றியின் குருத்தோலைகளை அருளப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்கடைவதற்கும், கிறிஸ்துவினுடைய மணவாட்டியின் கனமிக்க ஊழியர்களாக இருப்பதற்குமான சிலாக்கியமடைவார்கள். ஒருவேளை இவர்கள் இணங்கத் தவறி, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து வெளுக்கத் தவறுவார்களானால், இரண்டாம் மரணத்திற்குள்ளாகக் கடந்துசெல்வார்கள்.

இந்த மகா உபத்திரவ காலத்தில் சிறுமந்தையாகிய, உண்மையாய்ப் பலிசெலுத்திடும் கர்த்தருடைய ஆடு வகுப்பார் தப்பித்துக்கொள்வார்கள் மற்றும் இதிலிருந்து திரள் கூட்டத்தினர் தப்பித்துக்கொள்ளமாட்டார்கள், மாறாக பங்கடைவார்கள். இவர்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் வெளுக்கப்பெற்றவர்களாக இந்த உபத்திரவத்தினின்று வெளிவருவார்கள். இவர்களது பாடுகளானது இவர்களது வஸ்திரங்களைத் தோய்ப்பதில்லை, மாறாக தங்கள் பாடுகளில் இவர்கள் முன்பு ஒருபோதும் இல்லாதளவுக்குத் தங்களுக்குத் தேவனுடைய ஆட்டுக்குட்டியானவருடனும், அவரது பாவநிவாரண புண்ணியத்துடனும் இருக்கும் உறவினைக்குறித்து உணர்ந்துகொள்ள கற்றுக்கொள்வார்கள் மற்றும் விசுவாசத்தின்மூலம் அந்தப் புண்ணியத்தினைக் கொண்டு தங்கள் சொந்தச் சுத்திகரிப்பை அடைகின்றவர்களாய்க் காணப்படுவார்கள். சீக்கிரம் வரவிருக்கின்ற இந்தத் தேவ பிள்ளைகளுக்கான அனுபவங்களை நாம் கவனத்தில் எடுத்துப்பார்க்கையில், நாம் நமது அன்பினை கர்த்தருக்கு அதிகமாய் வெளிப்படுத்த நாடிடுவோமாக - நமது இராஜாவுக்கான ஊழியத்திலும், விசுவாச வீட்டாரின் சார்பிலும் நம்முடைய ஜீவியங்களை உண்மையாய் ஒப்புக்கொடுக்க நாடிடுவோமாக.

## இயேசு மாத்திரமே ஈடுபலியாவார்

போக்காடு வகுப்பார் பாவத்திற்கான நிவிர்த்தியினை ஏறெடுத்து, இப்படியாக மனுக்குலத்தின் ஒரு பகுதியினரைக் கல்லறைகளினின்று வெளிக்கொண்டு வந்தார்கள் என்று கூறிடுவது சரியான காரியமாய் இராது. கல்லறை என்பது ஆதாமுடைய மீறுதலின் நிமித்தமான தண்டனையைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; மேலும் இந்தத் தண்டனையானது ஆதாமின் பிள்ளைகள் அனைவராலும் சுதந்தரிக்கப்பட்டுள்ளது. "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் (கீழ்ப்படியாமை) பாவத்தினாலே (பாவத்தின் விளைவாக) மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் (உரோமர் 5:12).

இயேசுவின் மரணம் மாத்திரமே ஆதாமின் பாவத்தினை ரத்து செய்திட முடியும். அவர் மாத்திரமே மீட்கிறவர் ஆவார், ஈடுபலியாவார். அவர் தம்முடைய ஜீவனைத் தகப்பனாகிய ஆதாமின் ஜீவனுக்காய்க் கொடுத்தார்; இப்படியாக முழு உலகத்தின் பாவங்களுக்காய் நிவிர்த்தி செய்யப்பட்டது. இயேசு தம்முடைய சரீரத்தின் அங்கத்தினர்களென யாருக்குப் பரிந்துபேசுகின்றாரோ, அவர்கள் தங்கள் சொந்தத் தகுதியினால் இல்லாமல், மாறாக "பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்" காரணமாக, அவரோடு இணைந்தவர்களாக அவரது வேலையில் அவரோடுகூடக் காணப்படுகின்றனர். இவர்கள் தலையானவருடன் இணைக்கப்பட்டிருக்கின்றபடியால், "உலகத்தின் பாவங்களை" ரத்து செய்திடும் காரியத்தில் ஏதோ சில பங்கினை ஆற்ற வேண்டியவர்களாக வேதவாக்கியங்களில் காண்பிக்கப்பட்டுள்ளனர். உலகத்தின் பாவத்தை ரத்து செய்திடும் விஷயத்தில் திரள் கூட்டத்தினர் பங்காற்றிடுவதற்கு ஏதும் பெற்றிருப்பதில்லை.

## வெளிச்சத்திற்கு எதிரான பாவங்களுக்குரிய பொறுப்பு

"உலகத்தின் பாவம்" என்பவை ஆதாமின் பாவமாகும் (யோவான் 1:29). ஆனாலும் விழுகையின் காரணமாய்ச் சந்ததியார்மீது வந்த ஆதாமின் பாவம் அல்லாத வேறு பாவங்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு யுகத்திலும், ஒரு குறிப்பிட்ட அளவு வெளிச்சத்திற்கு எதிராய்ப் பாவங்கள் செய்யப்படுகின்றன என்று நாம் எண்ணுகின்றோம். ஆனால் இந்தப் பாவிகள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் அல்ல; ஆகையால் வெளிச்சத்திற்கு எதிரான இவர்களுடைய பாவங்களானது, இவர்களை இரண்டாம் மரணத்திற்குள்ளாக்குவதில்லை.

எனினும் இவர்கள் எந்தளவுக்கு வெளிச்சத்தையும், அறிவையும் பெற்றிருந்தார்களோ, அந்தளவுக்கு இவர்கள் பொறுப்பினையும்கூடப் பெற்றிருந்தார்கள். அனைவருமே கல்லறையினின்று வெளியே வருவதற்கும், பூரண ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குமான வாய்ப்பினை அடையும்பொருட்டு இயேசு மரித்திருந்தபோதிலும், அவர் (உலகத்தினால்) வெளிச்சத்திற்கு எதிராகச் செய்யப்பட்டிருந்த எந்தத் தனிப்பட்ட பாவங்களுக்காகவும் மரிக்கவில்லை. ஏனெனில் இத்தகைய பாவங்களுக்காய், அந்தந்த தனி நபரே பொறுப்பாளியாகக் காணப்படுகின்றனர்.

சபை வகுப்பார் விஷயத்தில், மனப்பூர்வமாய்த் தீமை செய்பவர்கள் ஜீவனின்று அறுப்புண்டு போகப்பண்ணப்படுவார்கள். சிலருடைய ஆவி இரட்சிக்கப்படத்தக்கதாக, இவர்களுடைய மாம்சம்

அழிக்கப்படுவதற்காய்ச் சாத்தானிடம் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். ஒவ்வொரு மனப்பூர்வமான பாவமும், அது யாரால் செய்யப்பட்டதாக இருப்பினும் அல்லது எப்போது செய்யப்பட்டதாக இருப்பினும், அது அடிகள் படுவதன் மூலமாகவோ அல்லது பாவியினுடைய மரணத்தின் மூலமாகவோ ஈடுபண்ணப்பட வேண்டும்.

## கிறிஸ்துவின் பலியினால் மூடப்படாத பாவங்கள்

ஆதாமின் பாவமே கிறிஸ்துவின் மரணம் மூலம் நிவிர்த்தி செய்யப்படுகின்றதே ஒழிய, வேறு எதுவுமல்ல. ஆனால் நேரடியாய்ப் பொறுப்பைப் பெற்றிருக்கும் மற்ற பாவங்கள், அதாவது வெளிச்சத்திற்கு எதிரான பாவங்களுக்கான கணக்கும் சரிக்கட்டப்பட வேண்டும். முற்காலங்களில் தேவ ஜனங்கள் கசப்பான துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டனர் மற்றும் இப்படித் துன்புறுத்தப்பட்டவர்கள் குகைகளிலும், பூமியின் வெடிப்புகளிலும் வாசம்பண்ணும்படிக்குக் கட்டாயப்படுத்தப்பட்டனர் (எபிரெயர் 11:32-40). இவர்களுக்கு எதிரான மீறுதல்களானது, ஓரளவு வெளிச்சத்தில் செய்யப்பட்டிருப்பதின் அளவிற்கேற்ப, இவைகளின் கணக்குகளானது அக்கிரமக்காரர்களால் சந்திக்கப்பட வேண்டும்.

தேவ ஏற்பாடானது யூத ஜனங்களுக்கு எதிரான கணக்கினை யூத யுகத்தினுடைய முடிவில் சரிக்கட்டி தீர்த்துவைத்தது. அந்த ஜனங்கள்மீது மிகுந்த கோபாக்கினை வந்தது. அந்த ஜனங்களினுடைய கணக்கின் சரிக்கட்டுதல் கி.பி. 70-இல் நிறைவடைந்ததென நாம் புரிந்துகொள்கின்றோம். மற்ற ஜாதியாரைப் பொறுத்தமட்டில், அவர்களையும் இதேவகையில் தேவன் கையாண்டார், ஆனாலும் இதேபோன்றே அல்ல என்று நாம் எண்ணிக்கொள்ள வேண்டும்; இதேபோன்றே இல்லாததற்கான காரணம், மற்ற ஜாதியார் இஸ்ரயேலர்களைப்போன்று அவருடன் உடன்படிக்கை உறவில் காணப்படவில்லை.

சுவிசேஷ யுகத்திற்கு வருகையில், அநேக பாவங்கள் புரியப்பட்டுள்ளன மற்றும் இவை கிறிஸ்துவின் பலியினால் மூடப்படுகிறதில்லை - இவைகள் ஓரளவிற்கு வெளிச்சம் மற்றும் அறிவிற்கு எதிராய்ப் புரியப்பட்டுள்ள பாவங்களாகும். இந்தப் பாவங்களிலேயே பிரதான பாவம், ஆண்டவருடைய வார்த்தைகளின்படி, அவரது ஜனங்களுக்கு எதிராய்ப் புரியப்பட்டவையாகும். தம்மில் விசுவாசம் வைத்துள்ள "சிறியரில்" ஒருவனுக்குத் தீமைசெய்யும் எவனும் தண்டிக்கப்படுவான் என்றும், இந்தச் சிறியரில் ஒருவனுக்குக் குடிக்க "ஒரு கலசம் தண்ணீர்" கொடுப்பவனும், பலனை அடைவான் என்றும் அவர் கூறியுள்ளார். (மத்தேயு 18:6; 10:42)

இருண்ட யுகங்களில் பரிசுத்தவான்களுக்கு எதிராகப் பயங்கரமான கொடுமைகள் செய்யப்பட்டுள்ளதைக்குறித்து நாம் வாசித்திருக்கின்றோம். அவர்கள் தார் பூசப்பட்டு, எரிக்கப்பட்டுள்ளனர்; அவர்கள் காட்டு மிருகங்களுக்கு இரையாக்கப்பட்டு, அவர்களின் பாவப்பட்ட சரீரங்கள் பீறப்பட்டுள்ளன. அவர்கள் எண்ணமுடியாத விதங்களிலெல்லாம் சித்திரவதைப் பண்ணப்பட்டுள்ளனர். இந்தக் கொடுமைகளைப் புரிந்துள்ளோருக்குரிய சில தண்டனைக்கான காலம் சமீபமாயுள்ளது என்பதில் நமக்கு நிச்சயமே. ஆனாலும் காலத்திற்கு முன்பாக நாம் யாதொன்றைக்குறித்தும் நியாயந்தீர்க்கக்கூடாது என்று கர்த்தர் நமக்குக் கூறியுள்ளார். ஏற்றகாலத்தில் நாம் உலகத்தின் நியாயாதிபதிகளாக்கப்படுவோம். இப்பொழுதும் நாம் கர்த்தரையே நோக்கிப்பார்த்து, அவரது நியாயத்தீர்ப்புகளுக்காகக் காத்திருக்க வேண்டும்.

## நிஜமான போக்காடு

கி.பி. 70-இல் நிறைவடைந்த யூதர்களின் கணக்குச்சரிக்கட்டும் காலம் ஒன்று காணப்பட்டது போன்று, கிறிஸ்தவ தேசங்கள் என்று உரிமைப்பாராட்டிக் கொண்டிருப்பவர்களுக்கும்கூடக் கணக்குச்சரிக்கட்டும் காலம் ஒன்று இருக்குமென வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவர்கள் எந்தளவுக்குத் தங்களை அநியாயத்தில் உட்படுத்தியிருந்தார்களோ, எந்தளவுக்கு வெளிச்சத்திற்கு எதிராகப் பாவம்செய்திருந்தார்களோ, அந்தளவுக்குப் பொறுப்பாளிகளாகக் காணப்படுவார்கள். நாம் இவர்களது பொறுப்பினுடைய அளவினை அறியோம் - தேவனே அறிவார்! ஆனால் இந்த உபத்திரவ காலத்தில் அவர் இந்தக் காரியங்களின் கணக்கு அனைத்தையும் சரிக்கட்டித் தீர்ப்பார் - இப்படியாகப் புதிய யுகமானது கணக்குகள் அனைத்தினின்றும் விடுவிக்கப்பட்டிருக்கும் - இப்படியாக இவ்வகையான கணக்குகள் எதுவும் மனுக்குலத்திற்கு எதிராகச் சாற்றப்பட்டிருக்காது. தேசமாகப் புரிந்த பாவங்கள் விஷயத்தில், தேசமாக நிவிர்த்தி செய்யப்படும். தீமையான செய்கைகளினால் தனிநபர்கள் கஷ்டமடைந்தபடியால், சரிக்கட்டப்படுதலிலும் தனிநபர்கள் கஷ்டம் அனுபவிப்பார்கள்.

உலகம் கணக்குகளினின்று விடுவிக்கப்படத்தக்கதாக, தேவன் ரத்து செய்ய விரும்பிடும் அநியாயங்களை அவர் எவ்வாறு விசாரிக்கப்போகின்றார்? திரள் கூட்ட வகுப்பார் அந்த உபத்திரவத்தில் ஒரு பங்கினை அடைவார்கள் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். தெய்வீகக் கோபாக்கினைக்கு உரியவர்கள் என்ற விதத்தில் உபத்திரவத்தில் ஒரு பங்கினை அடைவதற்கு இவர்கள் பாத்திரவான்களாய் இராதபடியால், இவர்கள் படும் பாடுகளின் புண்ணியமானது மற்றவர்களுக்குக் கடந்துபோகக்கூடியதாய் இருக்கின்றது. திரள் கூட்ட வகுப்பாருக்குள் வருவது என்பது ஒரு தண்டனையல்ல. திரள் கூட்ட வகுப்பார் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட வகுப்பாராய்க் காணப்படுவார்கள். இவர்கள் சிங்காசனத்தில் அமர்த்தப்படுகிறதில்லை, ஆனாலும் சிங்காசனத்தின் முன்னிலையில் சேவை செய்கின்றவர்களாய் இருப்பார்கள்; இவர்கள் திவ்விய சுபாவத்தினையும் அடையப்போகிறதில்லை. சிறுமந்தை வகுப்பார் ஆண்டவரோடுகூட, அவருடைய உடன்சுதந்தரர்களென இராஜ்யத்தில் இணைந்துகொள்ளும் மகா பரிசினை அடைபவர்களாய் இருப்பார்கள். மற்ற வகுப்பார் ஆவிக்குரிய தளத்தினுடைய கீழ்நிலையில் பலனை அடைவார்கள் - இவர்கள் ஆவிக்குரிய தளத்தை அடைவதற்கான காரணம், இவர்களும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர் என்பதினாலாகும்.

திரள் கூட்டத்தாரைப் பொறுத்தமட்டில், இவர்களை இந்த யுகத்தினுடைய முடிவின்போதுள்ள உபத்திரவத்தில் பங்குகொள்ள தேவன் அனுமதிப்பது என்பது, இவர்களது சொந்த முன்னேற்றத்திற்கே யாகும். இவர்களது உடன்படிக்கையானது, மரணபரியந்தமான உடன்படிக்கையாகும்; கர்த்தருக்குக் கீழ்ப்படிவதில் இவர்கள் தங்கள் ஜீவியங்களை இழக்கவில்லையெனில், மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களெனத் தங்களை நிரூபிக்கவில்லையெனில், இவர்கள் எந்த ஒரு தளத்திலும் ஜீவ நிலையினைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியாய் இருக்கமாட்டார்கள். ஆகையால் இவர்கள் அந்த உபத்திரவ காலத்தில் பாடுபடுவது என்பது இவர்களது சொந்த நன்மைக்காகவே இருக்கும். இவர்கள் நிஜமான போக்காடென உலக ஜனங்களுடைய அக்கிரமங்கள், பாவங்கள் மற்றும் மீறுதல்களுக்காய்ப் பாடுபடுவதாகக் கூறப்பட்டுள்ளனர் (லேவியராகமம் 16:21-22). [ஆசரிப்புக்கூடார நிழல்கள் புத்தகம், பக்கம்: 68-72 (ஆங்கிலம்); 74-79 (தமிழ்) பார்க்கவும்]. திரள் கூட்டத்தாரின் புண்ணியத்தினை விருதாவாக விடுவதற்குப் பதிலாக, கர்த்தர் அதைக் கணக்கில் வரவாக எடுத்துக்கொள்கின்றார்; மனப்பூர்வமான பாவங்களுக்குரிய உலகத்தின் கணக்கினைச் சரிக்கட்ட பயன்படுத்துகின்றார்.

R4273

# போக்காடு எந்தப் பாவங்களைச் சுமந்தது?

பாவநிவாரண நாளைப்பற்றின லேவியராகமம் 16-ஆம் அதிகாரத்தினுடைய பதிவில், பிரதான ஆசாரியனுடைய சரீரம் மற்றும் வீட்டாருக்கான பாவங்களுக்காய் முதலாவது காளையினுடைய பலி ஏறெடுக்கப்பட்ட பிற்பாடு, ஜனங்களுடைய பாவங்களுக்காய்க் கர்த்தருடைய ஆடானது பலிசெலுத்தப்பட்ட பிற்பாடு, பிரதான ஆசாரியன் போக்காட்டினை அழைப்பித்து, அதன் தலைமீது தன் கைகளை வைத்து, "அதின்மேல் இஸ்ரயேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன்" என்பதாக நாம் பதிவில் வாசிக்கின்றோம் (லேவியராகமம் 16:21). இந்தப் போக்காடானது வெளிப்படுத்தல் 7:9-15-ஆம் வசனங்களில் இடம்பெறும் "திரள் கூட்டத்தாருக்கு" நிழலாக இருக்கின்றது என்று நாம் அர்த்தம் கண்டுபிடித்திருக்கின்றோம். கூடாரத்தின் வாசலில் கட்டப்பட்டிருந்த கர்த்தருடைய ஆடும், போக்காடும், இந்தச் சுவிசேஷ யுகத்தில் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணி, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் இரண்டு வகுப்பாருக்கு நிழலாய்க் காணப்படுகின்றது என்று நாம் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இதில் ஒரு வகுப்பார் தங்கள் அர்ப்பணிப்பிற்கு இசைவாகக் காணப்பட்டு, நிழலில் காளையினால் அடையாளப்படுத்தப்படும் கிறிஸ்துவின் முன்மாதிரியினைப் பின்பற்றி நடக்கின்றனர். இவர்களைப் போன்றே மற்ற வகுப்பாரும் அர்ப்பணிக்கப்பட்டவர்களாகவும், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும் இருந்தபோதிலும், "கிறிஸ்துவுடன் பாடுபடுவதற்குரிய" சிலாக்கியத்தினைப் பயன்படுத்திடுவதற்குத் தவறிவிடுகின்றனர். இந்த வகுப்பார் பலியின் உடன்படிக்கையிலுள்ள பாடுகளினின்று விடப்படுகின்றனர். அப்படியானால், போக்காட்டின்மீது எந்தப் பாவங்கள் சுமத்தப்படுகின்றன என்றும், அவை நிஜமான திரள் கூட்டத்தினரின் விஷயத்தில் எதை அடையாளப்படுத்துகின்றது என்றுமுள்ள கேள்விகள் எழும்புகின்றன. அவை விசுவாச வீட்டாருடைய பாவநிவாரணத்திற்கு என்று காளையின்மீது சுமத்தப்பட்ட அதே பாவங்களை அடையாளப்படுத்துகிறதில்லை என்று நாங்கள் பதிலளிக்கின்றோம்; இன்னுமாக அவை கர்த்தருடைய ஆட்டின் இரத்தத்தைக் கொண்டு நிவிர்த்தி செய்யப்பட்ட பாவங்களையும் அடையாளப்படுத்துகிறதில்லை. இந்தப் (ஆதாமின்) பாவங்களுக்காய் இரத்தம் தெளிக்கப்பட்ட காரியமானது, "அனைத்து ஜனங்களுக்காகவும்" இப்பாவங்களை முழுமையாய் ரத்து பண்ணிற்று.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் "ஜனங்கள் அனைவருடைய பாவங்களுக்கென்று" முதலாவது பாவநிவிர்த்தி செய்யப்பட்ட சம்பவத்திற்கும், பிற்பாடு "போக்காட்டின் தலைமீது ஜனங்களுடைய அக்கிரமங்களைச் சுமத்திடும்" சம்பவத்திற்கும் இடையில் முரண்பாடு இருப்பதுபோன்று தோற்றமளிக்கும் காரியத்திற்கான விளக்கமானது, இரண்டு வகையான பாவங்கள் இருக்கின்றன என்றும், காளை மற்றும் கர்த்தருடைய ஆட்டினுடைய பலியினால் அடையாளப்படுத்தப்படும் கிறிஸ்து மற்றும் சபையின் பலியானது ஒருவகையான பாவத்திற்கே நிவாரணமானதே ஒழிய, மற்ற வகையான பாவத்திற்கல்ல என்றுமுள்ள உண்மையினால் விவரிக்கப்படுகின்றது. ஆகையாலே நமது கர்த்தரைக்குறித்து, "இதோ உலகத்தின்

பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று எழுதப்பட்டுள்ளது; இந்த ஆட்டுக்குட்டியானவர் தம்முடன்கூடக் கர்த்தருடைய ஆட்டினால் அடையாளப்படுத்தப்படும் பலியினை ஏறெடுக்கும் சபையையும் சேர்த்துள்ளார். உலகத்தின் பாவம் என்பது ஆதாமின் பாவமாகும்; மேலும் இப்பாவத்தினைக்குறித்து அப்போஸ்தலன்: "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" (உரோமர் 5:12) என்று கூறுகின்றார்; ஒருவருடைய விருப்பத்தினைப் பொருட்படுத்தாமலேயே, இந்தப் பாவமும், இதற்கான தண்டனையும் அனைவர்மீதும் காணப்படுகின்றது. ஏனெனில் அனைவருமே பாவத்தில் பிறந்தவர்களாகவும், துர்க்குணத்தில் உருவானவர்களாகவும் - பழுதடைந்தவர்களாகவும், முற்றும் முடிய நீதிசெய்ய முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்த ஒரு பாவத்திற்காக மட்டுமே கிறிஸ்துவாகிய தலையும், சரீரமும் தண்டனைக் கணக்கினைச் செலுத்தித்தீர்க்கின்றனர்.

இந்தப் பொதுவான பாவத்தைத் தவிர, இன்னுமாக "ஜனங்களுடைய மீறுதல்கள்" என்ற ஒன்று இருக்கின்றது; இதில் சிலர் பங்கினை அதிகமாகவும், சிலர் குறைவாகவும், சிலர் ஒரு பங்குமே இல்லாமலும் காணப்படுகின்றனர். இவை உலகத்தில் காணப்படும் தீய செய்கைகளிலேயே மிகவும் மனப்பூர்வமான தீய செய்கைகளாகும் - அதாவது சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்களால், செய்வதற்கு மிஞ்சி நீதி மற்றும் அன்பில் மீறுதலாகும். இவைகள் விஷயத்தில் அறிவு மற்றும் எதிர்த்துப் போராடுவதற்குரிய திறனிற்கு ஏற்ப பொறுப்பு ஒன்று காணப்படுகின்றது. உலகத்தினுடைய இந்தப் பாவங்களே, போக்காடு வகுப்பார் தலைமீது சுமத்தப்படுகின்றது மற்றும் இதற்காகவே இவர்கள் பாடுபட அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கான ஓர் உதாரணமானது, நிழலான இஸ்ரயேலர்குறித்தும், மகாபெரும் சிலாக்கியங்களை அனுபவித்தப்போதிலும், பரம அழைப்பிற்கு அபாத்திரர்களாகிப்போன யூத ஜனங்கள்மீது கடந்துவந்த பயங்கரமான உபத்திரவங்கள் குறித்துமுள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகளில் காணப்படுகின்றது.

அந்த உபத்திரவ காலத்தினைக்குறித்து நமது கர்த்தர் மத்தேயு 24-ஆம் அதிகாரத்தில் அதிகமாய்ப் பேசியிருக்கின்றார்; மேலும் இதைக்குறித்து "நியாயப்பிரமாணங்களிலும், தீர்க்கத்தரிசனங்களிலும் எழுதப்பட்டுள்ளவைகள் நிறைவேறத்தக்கதாக, தேவன் இந்த ஜனங்கள்மீது கோபாக்கினையைப் பூரணமாய் வரப்பண்ணினார்" என்று அப்போஸ்தலர் பேசியுள்ளார். இவர்களுடைய மூதாதையர்மீது வந்ததைக்காட்டிலும் இவர்கள்மீது இவ்வளவு அதிகக் கடுமையான சூழ்நிலைகள் ஏன் வரவேண்டும்? வேதவாக்கியங்கள் முன்னறிவித்துள்ளதுபோன்று இந்த யுகத்தினுடைய முடிவிலுள்ள திரள் கூட்டத்தார்மீதே, முந்தய காலங்களில் காணப்பட்ட மற்றவர்களைக்காட்டிலும் இந்தளவுக்கு ஒரு மகா உபத்திரவம் ஏன் வரவேண்டும்? இதற்குத் திறவுகோல் போன்றதொரு வார்த்தையினை நமது கர்த்தர் குறிப்பிட்டுள்ளார்: "ஆபேலின் இரத்தம்முதல் பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே கொலையுண்ட சகரியாவின் இரத்தம் வரைக்கும், உலகத்தோற்றமுதற்கொண்டு சிந்தப்பட்ட சகல தீர்க்கத்தரிசிகளுடைய இரத்தப்பழியும் இந்தச் சந்ததியினிடத்தில் கேட்கப்படத்தக்கதாக அப்படிச் செய்வார்கள் என்று சொல்லுகிறது. நிச்சயமாகவே இந்தச் சந்ததியினிடத்தில் அது கேட்கப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 11:50-51). இதுபோலவே இந்த யுகத்தினுடைய முடிவைப்பற்றி பேசிடும் வேதவாக்கியங்களும், இந்த யுகத்தினை முடித்துவைத்திடும் பயங்கரமான உபத்திரவத்தில், மகா பழிவாங்கும் கணக்கானது முழுமையாகச் சரிக்கட்டி தீர்த்துவைக்கப்படும் (squared) என்று

தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த யுகத்தின் ஆரம்ப காலங்களில் பாடுபட்டவர்கள், "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்" என்று சத்தமிட்டுக்கொண்டிருக்கும் பலிபீடத்தின் கீழுள்ள சிரச்சேதம் பண்ணப்பட்ட ஆத்துமாக்களினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர் (வெளிப்படுத்தல் 6:10). இவர்களுடைய இரத்தம்குறித்தும், இவர்களுக்குச் செய்யப்பட்ட தீமைகள், அநியாயங்கள்குறித்தும், இன்னுமாக இவர்களுக்குப் பின்னர் வந்த மற்றவர்களுக்குச் செய்யப்பட்ட தீமைகள், அநியாயங்கள்குறித்தும் உள்ள கணக்கானது, ஒன்றுவிடாமல் கணக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும், இந்த யுகத்தினுடைய இறுதியில் இக்கணக்குகளானது சரிக்கட்டப்பட (settle) வேண்டும் என்றும், இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பதிலானது சுட்டிக்காட்டுகின்றது.

கர்த்தருக்கும், சத்தியத்திற்கும், சகோதர சகோதரிகளுக்கென்றும் ஊழியம்புரிவதில் தங்கள் ஜீவியங்களைப் பலிசெலுத்துவதாக உடன்படிக்கை பண்ணினவர்களாகவும், ஆவியினால் ஆவிக்குரிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும் இருந்தும், பிற்பாடு தங்கள் உடன்படிக்கையினை அல்லது வாக்குறுதியினை நிறைவேற்றத் தவறுபவர்கள், இதன் காரணமாய் இரண்டாம் மரணத்திற்கு ஏதுவானவர்களாய் இருப்பார்கள்; ஆனால் கர்த்தரோ மிகுந்த இரக்கத்தில் இவர்களை ஒரு "மகா உபத்திரவத்திற்குள்" அனுப்பிவைப்பதற்கும், அந்த உபத்திரவத்தின் காலங்களிலுள்ள பரீட்சைகளில் உண்மையாய் நிற்பவர்களை "ஜெயங்கொண்டவர்களாக" ஏற்றுக்கொள்வதற்கும் திட்டம்பண்ணியுள்ளார். ஆனாலும், இவர்களுடைய பாடுகளானது இவர்கள் நிமித்தமானதல்ல. இவர்கள் மற்றவர்களுடைய பாவங்களுக்காய்ப் பாடுபடுவார்கள் - அதாவது இந்த யுகத்தில் வெளிச்சம் மற்றும் அறிவிற்கு எதிராய்ச் செயல்பட்டதின் நிமித்தம் குவிந்தப் பாவங்களானது, சத்தியத்தினுடைய வெளிச்சம் மிகவும் பிரகாசித்திடும் இந்த நாளில், அர்ப்பணிப்பின்போது தங்களை எதற்கு அர்ப்பணித்திருந்தார்களோ, அந்த மனப்பூர்வமான பலியினை ஏறெடுக்காமல் போனவர்களால் சுமக்கப்பட வேண்டியிருக்கின்றது.

எனினும் இறுதியில் இந்தத் திரள் கூட்டத்தினர் தங்கள் பரீட்சைகளில் ஜெயங்கொண்டு, தங்களைக் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களென நிரூபித்தப் பிற்பாடு, கடைசியில் ஒரு மகா பெரிய ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள்; இவ்வாசீர்வாதமானது தேவவசனத்தினுடைய அறிவுரைகள் மற்றும் அது முன்வைத்திடும் சிலாக்கியங்களுக்கு இசைவாகத் தங்கள் ஜீவியங்களை விருப்பத்துடனும், மகிழ்ச்சியுடனும் ஒப்புக்கொடுத்தவர்களாகிய சிறுமந்தைக்குக் கர்த்தரினால் கொடுக்கப்படும் ஆசீர்வாதத்தினைக்காட்டிலும் மிக மகிமையானதாக இல்லையென்றாலும், ஒரு மாபெரும் ஆசீர்வாதமாகவே இவ்வகுப்பாருக்குக் காணப்படும். இவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் திருமண விழாவில் பங்கெடுக்க அழைக்கப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 19:9)

திரள் கூட்டத்தினர் பூமிக்குரிய தளத்தில் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதுபற்றி தங்களுக்குத் தெரியும் என்ற தங்களது நிச்சயத்தைக்குறித்துச் சிலர் நமக்குச் சமீபத்தில் கடிதம் எழுதி அனுப்பியுள்ளனர். ஆயிர வருஷ யுகத்தின்போது திரளான ஜனக்கூட்டம் ஒன்று திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களின்கீழ் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும், அவர்கள் "பூமியின் குடிகள் அனைவர்" என்றும் உள்ள காரியம் உண்மையே என்பது எங்களது பதில். ஆனால் வெளிப்படுத்தல் 7:9-15-வரையிலான வசனங்களில் இடம்பெறும் திரள் கூட்டத்தினர் விசேஷமாகச்

சபையுடன் சேர்ந்து பேசப்பட்டுள்ளனர் மற்றும் இவர்கள் உலகத்தினின்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாகப் பேசப்பட்டுள்ளனர். இவர்கள் மகா உபத்திரவத்தின் வாயிலாகத் தங்கள் நிலைமைக்கு வந்தடைபவர்களாவார்கள்; ஆனால், உலகத்தாரோ பரிசுத்தத்தின் பிரம்மாண்டமான பெரும்பாதையின் வழியில் நடந்துவருபவர்களாய் இருப்பார்கள்; இந்த வழியில் சிங்கமும், துஷ்டமிருகமும் இருப்பதில்லை; அந்தப் பரிசுத்த இராஜ்யத்தில் கேடுசெய்வாரும், தீங்குச்செய்வாரும் இருப்பதில்லை.

ஒருவேளை திரள் கூட்டத்தாரைக்குறித்து வேதாகமத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லையெனில், நாமும் தேடக்கூடாது அல்லது அநேகர் இரண்டாம் மரணத்திற்குள்ளாகச் செல்லவேண்டியிருக்கும் என்ற காரியத்தினை நாம் துக்கத்தோடே அறிந்துகொள்ள வேண்டியதாய் இருந்திருக்கும். முழுமையாய் அர்ப்பணம்பண்ணி, பரிசுத்த ஆவியினால் புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்ட அனைவரும், தங்கள் தெரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமெனில், நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். தாங்கள் அழைக்கப்பட்ட மகிமைகளுக்குத் தகுதியற்றுப்போன மற்றவர்களோ ஒன்றில் இரண்டாம் மரணத்தில் மரித்துப்போக வேண்டும், அல்லது "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே ஆவி இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக" வேண்டி மகா உபத்திரவங்களிலும், கடுமையான சோதனைகளிலும் தங்கள் புதிய சுபாவங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

---

R4651

## போக்காடு சுமந்த பாவங்கள்

"போக்காடாக விடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை, அதைக்கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்கவும் அதைப் போக்காடாக வனாந்தரத்திலே போகவிடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்தி..." (லேவியராகமம் 16:10)

நீதியின் கணக்குகளானது சரிக்கட்டப்படும் விதத்தினை நாம் முழுமையாக அறிந்துகொள்ள முடியாது என்கிறபோதிலும், கொலை அதாவது ஜீவனை எடுத்தல் என்பது உண்மையான கொலையாக இருப்பினும் சரி அல்லது இருதயத்தைக் கொலைசெய்தல் என்று கர்த்தரினால் சுட்டிக்காண்பிக்கப்படும் மற்றவரைப் பகைக்கும் காரியமாக இருப்பினும் சரி, இது திவ்விய கண்ணோட்டத்தில் மிகக் கடுமையானதாகக் காணப்படும் குற்றங்களில் ஒன்றாகும். "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" (சங்கீதம் 116:15) என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இது அவர்களுடைய மரணத்தின் விஷயத்தில் அவர் விசேஷித்த கவனம் செலுத்துவதைச் சுட்டிக்காட்டுகின்றது. நமது கர்த்தருடைய முதலாம் வருகைக்கு முன்புள்ள காலப்பகுதிகளில் ஆபேல் முதற்கொண்டு சகரியா வரையிலும் நீதிமான்களின் இரத்தம் சிந்தப்பட்டுள்ளது.

காயீனைப் பொறுத்தமட்டில், இவர் தனது சகோதரனுடைய மரணத்தைக்குறித்துக் குற்றமுள்ளவராயிருந்தார்; தனது சகோதரனுடைய இரத்தத்ததைக்குறித்துக் குற்றமுள்ளவராயிருந்தார்; தேவனால் அங்கீகரிக்கப்பட்ட நீதிமான்களாகிய மற்றவர்களைக் கொலைசெய்தவர்களும், அவர்களது மரணத்தைக்குறித்துக் குற்றமுள்ளவர்களானார்கள்; இயேசுவைக் கொலைசெய்தவர்களும், கிறிஸ்துவினுடைய இரத்தத்தைக்குறித்துக் குற்றமுள்ளவர்களாயிருந்தனர். கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் வாயிலாக, ஆதாமின் பாவம் அனைத்தையும் பொதுவான விதத்தில் மன்னிப்பதற்குத்

தேவன் திட்டம்பண்ணியுள்ளார்; எனினும் ஆதாமினுடைய பெலவீனத்தினால் வந்தது என்று சொல்லப்பட முடியாததும், ஒருவிதமான பொறுப்பினைச் சாற்றுகின்றதுமான வேறு ஒருவகை பாவமும் உள்ளது.

## பழிவாங்குதலுக்கான நீதியின் கூக்குரல்

வேதவாக்கியங்களின்படி ஆபேலின் இரத்தமானது பூமியிலிருந்து கர்த்தரை நோக்கிக் கூக்குரலிட்டது என்று பார்க்கின்றோம். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில் நீதியானது பழிவாங்குதலுக்காய்க் கூக்குரலிட்டது. உலகத்தின் பாவங்களுக்கென மீட்கும் விலைக்கிரயமாக இறுதியில் செயல்படுத்தப்படும் கிறிஸ்துவினுடைய மரணத்தின் புண்ணியமானது, மேற்கூறப்பட்டுள்ள இத்தகைய மீறுதல்களை முழுமையாக மூடிடுவதில்லை. அப்புண்ணியமானது ஆதாமின் பெலவீனங்கள் அல்லது சுதந்தரித்துக்கொண்ட பாவத்தின் பாகத்தினை மட்டும் மூடுகின்றது; ஒரு குறிப்பிட்ட பாகம் மூடப்படுவதில்லை. ஆகையால் கொலைகள் புரிந்த நபர்கள் மீது ஒரு குறிப்பிட்ட அளவு பொறுப்பு தொடரும் என்றும், அவர்களது தவறான செய்கைகள் மற்றும் பொல்லாப்புகள் நிமித்தமாக அவர்கள் மீது கொஞ்சம் தண்டனைக் காணப்படும் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். மேலும், தேவன் இதைத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிகின்றது; சிலர் பாடுபடவேண்டிய அவசியமிருக்கின்றபடியால், இந்தக் கொலை கணக்கினை யூத யுகத்தினுடைய முடிவின்போதுள்ள யூதர்கள்மீது வரப்பண்ணுவதன் மூலம், இக்கணக்கானது ஒருவிதத்தில் செலுத்தித்தீர்க்கப்படும்படிக்குத் தேவன் அனுமதித்தார். யூதர்கள் அவர்களது யுகத்தினுடைய முடிவில் எப்படியும் ஒரு மகா உபத்திரவத்தினைப் பெறப்போவதினால், அவர்கள்மீது, அதுவும் அவர்களிலுள்ள அநேகம் குற்றமற்றவர்கள் மீதும்கூட இந்தக் கூடுதலான கஷ்டமானது சேர்ந்து கடந்துவருவதற்குக் கர்த்தர் திட்டமிட்டார்.

விசேஷித்த கொலைகள் முதலானவைகளைப் புரிந்தவர்களுக்கு எதிரான நீதியினுடைய கணக்கினைத் தீர்க்கத்தக்கதாகக் குற்றமற்றவர்களைத் தண்டிக்கும் இத்தண்டனையை அவர் அனுமதித்துள்ளதாகத் தெரிகின்றது; மேலும் இந்த ஒரு வெளிச்சத்தில், "நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்" (மத்தேயு 23:35) எனும் வேதவாக்கியத்தின் வார்த்தைகளை நாம் புரிந்துகொள்கின்றோம். இதுவே எருசலேமின்மீது கடந்துவந்த "கோபாக்கினையாகும்;" மேலும் இது கடந்த காலத்தினுடைய கணக்குகளைத் தீர்த்துவைத்துள்ளதாகத் தெரிகின்றது. அங்கு ஒரு புதிய யுகம் துவங்கியபோது, புதிய கணக்கினுடைய ஆரம்பமும் காணப்பட்டது. நிஜமான ஆசாரியத்துவமும், நிஜமான லேவியர்களும் அங்குக் காட்சியில் வந்தார்கள் மற்றும் இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும் கர்த்தர் தமது அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அனைவருடைய மரணத்தைக்குறித்தும் கணக்கு வைத்திருக்கின்றார். கர்த்தருடைய பரிசுத்தவான்களில், அர்ப்பணிக்கப்பட்டவர்களில் யார் ஒருவருடைய மரணத்தைக்குறித்து ஒருவன் குற்றமுள்ளவனாயிருப்பானானால், அப்படிப்பட்டவன் தன்னையே பிரத்தியேகமான ஒரு கடன் மற்றும் பொறுப்பின்கீழ்க் கொண்டுவந்துவிடுபவனாய் இருப்பான். கர்த்தருடைய பரிசுத்தவான்களைத் துன்புறுத்திய அல்லது கொன்ற நபருக்கு எதிராக நீதியினுடைய விசேஷித்த குற்றச்சாட்டு காணப்படும் என்பதாகத் தெரிகின்றது. இதுபற்றின ஒரு கருத்தானது, இயேசுவினுடைய சாட்சியின் நிமித்தமாகவும், தேவவசனத்தினுடைய சாட்சியின் நிமித்தமாகவும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களானது, "தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக்

கூப்பிட்டார்கள்" என்றுள்ள வேதவாக்கியத்தின் வார்த்தைகளில் விளங்குகின்றது. இது அடையாளமான காட்சியே தவிர, தனிப்பட்ட நபரின் கூக்குரலல்ல; ஏனெனில், இந்த நபர்கள் மரித்துப்போய்விட்டனர் மற்றும் எதைக்குறித்தும் அறியாதவர்களாகவும், உணராதவர்களாகவும் காணப்படுகின்றனர் - ஏனெனில் "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்;" ஆனால் எப்படி ஆபேலின் விஷயத்தில், அவர் மரித்த பிற்பாடு நீதி அபயமிட்டதோ, அதுபோல இங்கும் நீதியே கூக்குரலிடுகின்றது. இறந்தவர்களுக்கும், அவர்களது இரத்தத்தின் கூக்குரலுக்கும் சம்பந்தமில்லை. அது நீதியின் சத்தமேயாகும்.

இப்படிக் கொல்லப்பட்ட வகுப்பார்,1800-வருஷங்களுக்கும் அதிகமான இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும் பெரும் வகுப்பாராய்க் காணப்படுகின்றனர் என்பது அனைவராலும் எளிதில் ஒப்புக்கொள்ள முடிகிற காரியமேயாகும். அநேகர் நீதியின் காரணங்களுக்காகவும், கர்த்தருடைய நாமத்தின் நிமித்தமாகவும் பாடுபட்டுள்ளனர்; மேலும் யூத யுகத்தினுடைய முடிவின்போது கர்த்தர் செய்ததுபோலவே, இந்த யுகத்தினுடைய முடிவின்போதும், கணக்கினைத் தீர்த்துக்கொள்ளவும், நீதியினைத் திருப்திப்படுத்தவும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகின்றது. ஆனால் இது - ஆதாமினுடைய தண்டனைத் தீர்ப்பு மற்றும் பெலவீனத்தின் விஷயத்திலுள்ள நீதியின் கோரிக்கைகள் அனைத்தையும் இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினுடைய புண்ணியத்தினைக்கொண்டு திருப்திப்படுத்திடும் நீதியின் திருப்திப்படுத்துதல் அல்ல, மாறாக "சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்திற்கு" எதிராகப் புரியப்பட்டுள்ள இந்த விசேஷித்த மீறுதல்கள் தொடர்புடைய நீதியினைத் திருப்திப்படுத்துதலாகும். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்." (மத்தேயு 18:6)

## திரள் கூட்டத்தினரால் செய்யப்படும் நிவிர்த்தியின் வகை

இந்த யுகத்தினுடைய முடிவில், திரள் கூட்டத்தினர் என்று அழைக்கப்படும் வகுப்பார் மரித்தாக வேண்டும், ஏனெனில் அவர்களுடைய உடன்படிக்கையின்படி அப்படிச் செய்தாக வேண்டும். இந்த நிபந்தனையின்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தலைப் பெற்றுக்கொண்டவர்கள் ஆனார்கள். ஆகையால் இவர்களுக்கு ஓர் ஆவிக்குரிய சுபாவத்தினைக் கொடுப்பதன் மூலம் இந்தக் கிருபையின் வேலையினைத் தேவன் நிறைவேற்றி முடித்துவைக்க வேண்டுமானால், மாம்சத்தினுடைய மரணம் சம்பவித்தாக வேண்டும். இதற்கு மாற்றுவழி ஏதும் இல்லை; இதிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் முடியாது; இவர்கள் பலியினை முழுமையான விதத்தில் ஏறெடுக்கத் தவறிப்போயுள்ளபடியால், கர்த்தருடைய பின்னடியார்களிடம் எதிர்ப்பார்க்கப்படும் பக்திவைராக்கியத்துடனும், சுறுசுறுப்புடனும் தொடர்ந்து செயல்படுவதற்கு இவர்கள் தவறிப்போயுள்ளபடியால், இவர்கள் சிறுமந்தை வகுப்பாரிடமிருந்து பிரிக்கப்படுகின்றனர்; ஆனாலும் இவர்கள் இரண்டாம் மரணத்திற்குள்ளாகத் தள்ளப்படுவதற்குப் பதிலாக, இவர்கள் தங்கள் மரணத்தினை நிறைவேற்றிட அனுமதிக்கப்படுகின்றனர். உண்மையில் திட்டமிட்டிருந்தபடி இவர்களது மரணமானது, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களுடைய மரணத்தைப்போன்று பலி என்ற விதத்தில் இருக்கப்போவதில்லை என்பதினால், இவர்கள் மாற்று விதத்தில் மரணத்திற்குள் கடந்துசெல்லும் வண்ணமாக ஏற்பாடு காணப்படுகின்றது; அதாவது இவர்கள் சுவிசேஷ யுகம் முழுவதிலும் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களுக்குக் கொடுமைகள் செய்தவர்களின் சில மீறுதல்களுக்கு ஈடாக மரணத்திற்குள் கடந்துசெல்லும் வண்ணமாக ஏற்பாடு காணப்படுகின்றது. இப்படியாக நீதியின் கணக்குகளானது திரள் கூட்டத்தினரால் ஒரு விதத்தில் சரிக்கட்டி தீர்த்துவைக்கப்படுகின்றது (squared); மேலும் இதன்விளைவாக முற்காலங்களில் கொலைபாதகம் புரிந்தவர்களுக்கு ஒரு விதத்தில் விடுதலையானது அருளப்படுகின்றது.

உதாரணத்திற்குத் தானியேலிடம் தேவதூதனால் கூறப்பட்ட வார்த்தைகளானது (தானியேல் 12:2) நீரோ மன்னன் உயிர்த்தெழுதலின் காலங்களில் வரும்போது, அவர் நிந்தைக்கும், நித்திய இகழ்ச்சிக்கும் எழுந்திருப்பார் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அனைவருமே இந்த மனுஷனுடைய ஜீவியத்தின் விவரங்களை அறிந்திருப்பார்கள்; இம்மனுஷனுடைய ஜீவியமே முழு உலகத்திற்கும் திறந்த புஸ்தகமாகக் காணப்படும். "இதோ இவர்தான் நீரோ! இதோ இவர்தான்!" என்று ஜனங்கள் சொல்லுவார்கள். தனது சொந்தத் தாயைக் கொலைசெய்தவன் என்றும், நூற்றுக்கணக்கான தேவனுடைய பரிசுத்தவான்களைக் கொலைசெய்தவன் என்றும் பார்க்கப்படுவது என்பது கஷ்டமான நிலைமையாக இருக்கும்; இவர் சீர்க்கெட்ட நிலையினின்று வெளிவந்து, தன்னை முற்றிலும் மாற்றம் அடைந்துள்ள மனுஷனாகக் குணலட்சணத்தினுடைய மாற்றத்தின் மூலமாய் வெளிப்படுத்துவது வரையிலும், இவரது நிந்தனையும், இகழ்ச்சியும் தொடர்ந்து காணப்படும். ஆனாலும் கர்த்தருடைய அந்தப் பரிசுத்தவான்களின் மரணத்தின் காரணமாய், நீரோவிற்கு எதிராய்க் குறிப்பிட்ட ஒரு மகா காரியப்பொறுப்பு காணப்படும்; இது இவர் தேவனிடமிருந்து இரக்கத்தினைப் பெறுவதற்குரிய எந்த ஒரு வாய்ப்பினையும் கிட்டத்தட்ட தடைப்பண்ணிவிடுகின்றதாயிருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம். ஒரு பரிசுத்தவானைக் கொன்ற விஷயம் தண்டனையைக் கொண்டுவருமானால், அநேகம் பரிசுத்தவான்களைக் கொன்றுபோட்ட காரியம் அதிகத் தண்டனையைக் கொண்டுவருகின்றதாயிருக்கும். நீரோ அதிகமான நிந்தனையையும், இகழ்ச்சியையும் அடைவார் என்று நாம் அனுமானிக்கின்றோம்; எனினும் கிறிஸ்துவினுடைய மரணத்தின் புண்ணியமானது, நீரோவிற்கும் சரி, மீதமுள்ள மனுக்குலத்திற்கும் சரி செயல்பாட்டிலிருக்கும்.

நீரோவைப்போல மனங்களையும், இருதயங்களையும் உடைய அநேக ஜனங்கள் உலகில் ஜீவித்திருப்பார்கள்; ஆனால் இவர்கள் தங்களுடைய இந்தப் பொல்லாத மனப்பாங்கினை வெளிப்படுத்துவதற்கு, நீரோ பெற்றுக்கொண்ட வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளாதவர்களாய் இருந்திருப்பார்கள். அநேகமாகக் கொலைசெய்வதற்குரிய விருப்பத்துடன் அநேகர் இருந்திருப்பார்கள்; எனினும் தாங்கள் சக்கரவர்த்திகளாக இல்லாதபடியினாலும், சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகவும், அதனால் தண்டிக்கப்பட வாய்ப்பு உள்ளபடியினாலும் தடுக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டிருப்பார்கள். ஆகையால் நீரோ தன் செய்கை அனைத்திற்கும் எப்படிக் குறிப்பாகப் பொறுப்பாளியாக இருக்கின்றார் என்றோ, நம் இனத்திலுள்ள வேறு சிலரைக்காட்டிலும் நீரோ எவ்வளவுக்கு அதிகமாகக் குற்றமுள்ளவராக இருப்பார் என்றோ நியாயந்தீர்ப்பதற்கு நாம் இயலாதவர்களாய் இருக்கின்றோம்.

திரள் கூட்டத்தாருடைய பாடுகளும், மரணமும், நாம் பார்த்திருக்கின்றபடி அவசியமானதாகும்; மேலும் இவர்களது இந்தப் பாடுகளும், மரணமும், "கிறிஸ்துவினுடைய சரீரத்திற்கு" எதிராகச் செய்யப்பட்ட விசேஷித்த மீறுதல்களுக்குரிய கணக்கிற்கென்று மாற்றீடான விதத்தில் செயல்படுத்தப் படுவது என்பது, கர்த்தர் சார்பிலுள்ள குறிப்பிட்ட ஓர் ஏற்பாடாகும். இப்படியான விதத்தில் "பலிபீடத்தின்கீழ்க் காணப்படும் ஆத்துமாக்களும்," அவர்களின் இரத்தமும், பழிவாங்குதலுக்காய்க் கதறுகின்றது; மேலும் இப்படியான விதத்தில் பழிவாங்குதல் நிறைவேற்றப்படுகின்றது. மகா உபத்திரவ காலத்தின்போது திரள் கூட்டம் வகுப்பாரிலுள்ள இந்தக் குற்றமற்ற நபர்களின் மரணம் தொடர்புடைய விஷயத்தில், நீதியின் கூக்குரலானது திருப்திப்படுத்தப்படும். நீரோவின் துன்புறுத்தலுக்கு ஆளானவர்களின் மரணமானது, குற்றமற்றவர்கள் பாடுபடுவதன் வாயிலாக ஈடுசெய்யப்படுகின்றது என்று நாம் எண்ணுகின்றோம். இப்படியான விதத்தில் நீதியின் கணக்குகளானது திருப்திப்படுத்தப்படும்.

---

R4034 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இவைகளிலும் விசேஷித்த பலிகள்
## லேவியராகமம் 16:5-22

"மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்." (எபிரெயர் 7:25)

## இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள்மீது சீட்டுப்போடுதல்

கூடாரத்தின் வாசலில் நின்றுகொண்டிருக்கும் இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள், இந்தத் தற்காலத்திலுள்ள கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட சபை யாவருக்கும் அடையாளமாயிருக்கின்றது; எனினும் அது இரண்டு வகுப்பாரைக் கொண்டிருக்கின்றது என்பதையும் நமக்குக் காட்டுகின்றது. இரண்டு வகுப்பாரும் ஒன்றுபோல் அர்ப்பணம்பண்ணுகின்றனர், ஆனாலும் ஒரேவிதமான அனுபவங்களுக்குள் செல்கிறதில்லை. கர்த்தருடைய ஆட்டின் அனுபவங்களானது காளையின் அனுபவங்களுக்கு ஒத்திருப்பதுபோன்று, ஒரு வகுப்பார் கர்த்தருடைய அனுபவங்களைத் துல்லியமாய்ப் பின்தொடர்கின்றனர்; ஆனால் போக்காட்டினால் அடையாளப்படுத்தப்படும் மற்ற வகுப்பாராகிய திரள் கூட்டத்தார், சிறுமந்தையினர்போன்றே சுயத்தைப் பலிசெலுத்துவதற்காக முழுமையான அர்ப்பணிப்பைப் பண்ணினாலும், இதைச் செய்யாமல், தங்கள் ஜீவியங்களைப் பலியாய் ஒப்புக்கொடுப்பதைச் செய்யத் தவறிப்போவதால், கர்த்தராம் இயேசுவின் நாட்களில் ஆவியானது இரட்சிக்கப்படத்தக்கதாக, மாம்சமானது அழிக்கப்படும் அனுபவத்திற்குள் கடந்துசெல்கின்றனர் (1 கொரிந்தியர் 5:5). இந்த இரண்டு வகுப்பாரும் வெளிப்படுத்தல் 7-ஆம் அதிகாரத்தில் வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளனர். சிறுமந்தையினராகிய 1,44,000-பேர், அதாவது ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் - மகிமைப்படுத்தப்படும் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் உண்மையுள்ள அங்கத்தினர்களாய்க் காணப்படுகின்றனர்; மற்ற வகுப்பாராகிய திரள் கூட்டத்தினரின் எண்ணிக்கையானது கர்த்தரினால் நிர்ணயிக்கப்படவில்லை; இவர்கள் உபத்திரவத்தின் வாயிலாகக் கடந்துவந்து, சிங்காசனத்தில் ஜெயங்கொள்பவர்களெனக் கிரீடங்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, ஊழியக்காரர்களெனச் சிங்காசனத்தின் முன்னிலையில் குருத்தோலைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள் இடையே சீட்டுப்போடுதல் என்பது, யார் யார் இந்த இரண்டு வகுப்பார்களுக்குள் கடந்துசெல்வார்கள் என்று கர்த்தர் தாமாய்த் தீர்மானிப்பதில்லை என்பதையும், அவர் இக்காரியத்தினை நம்மிடமே விட்டுவிட்டவராக, யார் பலியில் சரியான பக்திவைராக்கியத்தினை வெளிப்படுத்தி, இப்படியாகத் தங்களது நேர்மைக்குச் சான்றுபகிர்ந்து, தாங்கள் தேவனின் நேசகுமாரனுடைய சாயலில் இருப்பதை வெளிப்படுத்துகின்றார்களோ, அவர்கள் யாவரையும் அவர் ஏற்றுக்கொள்வார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. இக்காரியமானது கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணுவது மாத்திரம் போதாது, இன்னுமாக நாம் உண்மையில் கர்த்தருடைய ஆடு வகுப்பாராகிட வேண்டுமெனில், நமது உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளை நிறைவேற்ற நாம் தொடர்ந்திட வேண்டும் - நாம் பாடுபட வேண்டும், நாம் பலிசெலுத்திட வேண்டும் மற்றும் இவ்வாறாக ஆசாரியனுடைய சரீரத்தின் அங்கத்தினர்களென நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திக்கொள்ள நாடிட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

## யேகோவாவிற்கு அல்லது அசசேலுக்கு

"விசேஷித்த பலிகள் குறித்த ஆசாரிப்புக்கூடார நிழல்கள்" எனும் சிறு புஸ்தகத்தினை நமது வாசகர்கள் அனைவரும் கைகளில் பெற்றிருப்பார்கள் என்று எண்ணி, இங்கு நாம் இந்தப் பாவநிவாரண நாளின் விவரங்கள் அனைத்திற்குள்ளும் செல்வதில்லை; ஏனெனில் அப்புஸ்தகத்தில் இவ்விஷயங்களானது போதுமான அளவுக்கு விவரமாகக் கையாளப்பட்டுள்ளது. இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள்மீது விசேஷித்த கவனத்தை இப்பாடத்தில் கொடுக்கின்றோம்.

எபிரெயர்கள் மத்தியில் வெள்ளாட்டுக்கடாக்கள்மீது சீட்டுப்போடப்படுகையில், ஓர் ஆடு யேகோவாவிற்கு என்றும், மற்ற ஆடு அசசேலுக்கு என்றும் அறிவிக்கப்படுகின்றது. அசசேல் எனும் வார்த்தைக்கான அர்த்தம் மிகவும் தெளிவாய்த் தெரியவில்லை, ஆனாலும் பெரும்பான்மையான நவீனகால மேதைகளைப் பொறுத்தமட்டில், அவ்வார்த்தையானது இருளின் அதிபதிக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது; மில்டன் அவர்களின் "பாரடைஸ் லாஸ்ட்" ("Paradise lost") எனும் படைப்பில் அசசேல், நரகத்தின் சேனைகளுக்குத் தலைவரென - பிசாசுகளின் அதிபதியெனச் சித்தரிக்கப்பட்டுள்ளார். இந்த விளக்கத்திற்கு நாங்கள் ஒப்புதல் தெரிவிக்கின்றோம், ஏனெனில் இது அப்போஸ்தலனுடைய கருத்திற்கு இசைவாய்ப் பொருந்துகின்றதாகவே இருக்கின்றது; அப்போஸ்தலன் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அர்ப்பணிக்கப்பட்ட அங்கத்தினர்களிலுள்ள ஒரு வகுப்பாரைக்குறித்துக் குறிப்பிடுகையில், அதாவது தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியங்களுக்கு இசைவாய் ஜீவிக்காத இந்த வகுப்பாரைக்குறித்துக் குறிப்பிடுகையில், "நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடேகூட இருக்கிறவனாய், அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன்" (1 கொரிந்தியர் 5:3-5) என்று கூறுகின்றார். இதுபோலவே அர்ப்பணம்பண்ணியும், தானாய் மனமுவந்து வந்து பலிசெலுத்திட தவறுகிறவர்களாகவும் காணப்படுகின்ற திரள் கூட்டத்தினர், சாத்தானால் குட்டப்படத்தக்கதாக அவனிடம் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் என்றும், மகா உபத்திரவத்திற்குள் கடந்துசெல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும், இப்படியான விதத்தில் அவர்கள் பாவத்திற்காக முறையாய் வருந்தவும், சத்தியம் மற்றும் நீதியின் திவ்விய தரநிலையினை முறையாய் உணர்ந்துகொள்ளவும்தக்கதாக இப்படி ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் என்றும் நாங்கள் புரிந்துகொள்கின்றோம். இந்தப் புறக்கணிக்கும் வகுப்பாரில் சிலர் யுகம் முழுவதும் காணப்பட்டபோதிலும், இவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்த யுகத்தினுடைய முடிவிலேயே காணப்படுவார்கள் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றது.

போக்காடு என்பது பாவத்தை விரும்புகிற ஒரு வகுப்பார் அல்ல, கர்த்தரை மறுதலித்த வகுப்பாரும் அல்ல; மாறாக இந்த ஜீவியத்தின் கவலைகளினாலும், ஐசுவரியங்களின் வஞ்சனைகளினாலும் பாரமடைகின்றவர்களாக இருந்து, அனைத்தையும் விட்டுவிட்டு சுயத்தைப் பலிசெலுத்தும் பாதையில் ஆண்டவருடைய அடிச்சுவட்டில் நடப்போம் என்ற தங்களது உடன்படிக்கைக்கும் மற்றும் கர்த்தருக்கும் போதுமான அளவு உண்மையாக இராதவர்களாகக் காணப்படுகின்ற அர்ப்பணம்பண்ணியுள்ள விசுவாசிகளின் ஒரு வகுப்பார் ஆவார்கள். இந்நாளில் குறிப்பாய் பெரும் எண்ணிக்கையில் காணப்படும் இந்த வகுப்பார், எந்த ஜாதியார் தோன்றினது முதற்கொண்டு இராததும், இந்த யுகத்தினை

முடித்துவைக்கின்றதுமான மகா உபத்திரவ காலத்தில் பாடுபடத்தக்கதாக, எதிராளியானவனிடம் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். இந்த உபத்திரவங்களுக்கு இணங்கவும், கர்த்தரை நாடவும் தவறுகிறவர்கள் இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்; ஆனாலும் உண்மையாயும், நேர்மையாயும் செவிகொடுப்போர், ஜெயங்கொண்டவர்களென எண்ணப்பட்டு, வெளிப்படுத்தல் 7-ஆம் அதிகாரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதுபோன்று குருத்தோலைகள் கொடுக்கப்பட்டு, ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திலும், அக்கலியாணத்திற்குரிய மகிமைகள் மற்றும் கனங்களிலும் பங்கெடுப்பதற்குரிய சிலாக்கியம் பெற்றுக்கொள்வார்கள். தானாய் மனமுவந்து பலிசெலுத்துவதற்குரிய தங்களது தற்கால சிலாக்கியங்களை இவர்கள் உணர்ந்துகொள்ள தவறினதே மணவாட்டி வகுப்பாரில் அங்கத்துவம் பெற்றுக்கொள்வதிலிருந்து இவர்களைத் தடுத்தது; மேலும் இவர்களது கனமிக்க ஸ்தானம் மணவாட்டியுடன்கூடச் செல்லும் கன்னிகைகளாக, தோழிகளாக இருப்பதேயாகும். (சங்கீதம் 45:14)

## இரண்டு வகையான பாவங்கள்

இந்தப் போக்காடானது பலிசெலுத்தப்படுகிறதில்லை; இது கர்த்தருடைய பலிபீடத்தின்மீது வைக்கப்படுகிறதில்லை; மாறாக "மாம்சம் அழிக்கப்படத்தக்கதாக" வனாந்தரத்திற்கு அனுப்பிவைக்கப் படுகின்றது. பலிசெலுத்தப்படுவதற்கும், அழிக்கப்படுவதற்கும் இடையிலுள்ள பெரிய வித்தியாசமானது கவனிக்கப்பட வேண்டும் மற்றும் புரிந்துகொள்ளப்பட வேண்டும். (எந்த மிருகங்களின் இரத்தமானது பாவநிவாரணம் உண்டாகத்தக்கதாகத் திரைக்குள்ளாகக் கிருபாசனத்தின்மீது கொண்டுவரப்பட்டதோ) அந்த மிருகங்களின் சரீரங்களானது பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்படுகின்றது என்று நமக்கு அப்போஸ்தலன் நினைப்பூட்டி, பின்னர் "நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்" (எபிரெயர் 13:13) என்று உண்மையுள்ளவர்களுக்கு வலியுறுத்துகின்றார். இப்படியாக அந்த மிருகங்களில் ஒன்று நமது கர்த்தர் இயேசுவுக்கு அடையாளமாய் இருக்கின்றது என்றும், ஒருவேளை நாமும் அவரது நிந்தைகளைச் சுமக்கத்தக்கதாக அவரோடுகூட பாளயத்துக்கு வெளியே செல்வதற்கும், இவைகளில் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பங்கடைவதற்கும் விருப்பமாயிருப்போமானால், நாம் கர்த்தருடைய ஆட்டினால் அடையாளப்படுத்தப் படுவோம் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார்.

நம்முடைய இந்தப் பாடத்தில் குறிப்பிடப்படும் இரண்டு வகையான பாவங்களைக்குறித்துப் பார்க்கலாம்; ஒருவகை பாவமானது, காளை மற்றும் கர்த்தருடைய ஆட்டின் இரத்தத்தினால் மகா பரிசுத்த ஸ்தலத்தில் நிவிர்த்தி செய்யப்படுகின்றது; மற்றவகை பாவமானது, போக்காட்டின் தலைமீது அறிக்கையிட்டு, சுமத்தி அனுப்பிவைக்கப்படுகின்றது. நிவிர்த்தி செய்யப்பட்ட பாவமானது ஆதாமின் பாவமாகும்; இந்த ஆதாமின் பாவம் காரணமாக, மரணதீர்ப்பானது அனைவர்மீதும் கடந்துவந்தது மற்றும் இப்படியாகப் பெலவீனங்களும், அபூரணங்களும் அனைவர்மீதும் கடந்துவந்தது. இதுவே ஆதி பாவம் என்று அழைக்கப்படுகின்றது மற்றும் இதன் சாபம் அல்லது தீமைகளானது ஒட்டுமொத்த சந்ததியின்மீதும் காணப்படுகின்றது. ஆனால் ஆதி பாவம் மற்றும் இதனால் நாம் சுதந்தரித்துக்கொள்ளும் பெலவீனங்கள் மற்றும் அபூரணங்கள் தவிர்த்து, வேறு பாவங்களும் இருக்கின்றன; அதாவது விசுவாச வீட்டாரைப் பொறுத்தமட்டில் கர்த்தரினால் ரத்து செய்யப்பட்டதும், உலகத்தாரைப் பொறுத்தமட்டில் ரத்து செய்யப்படுவதற்குக் கர்த்தரினால் ஒழுங்குபண்ணப்பட்டதுமான இந்த ஆதி பாவம் தவிர்த்து வேறு பாவங்களும் இருக்கின்றன. இந்த மற்றவகை பாவங்களானது, அக்கிரமங்கள், மீறுதல்கள் என்று

வரையறுக்கப்படுகின்றது; அதாவது காளை மற்றும் கர்த்தருடைய ஆட்டின் இரத்தத்தினால் நிவிர்த்தி செய்யப்படும் பாவங்கள் அல்லாத மற்ற அனைத்துப் பாவங்களையும் உள்ளடக்குகின்றது.

உலகத்தின், அதிலும் விசேஷமாகக் கிறிஸ்தவ மண்டலத்தின் இந்த மீறுதல்களை அல்லது அநியாயங்களை நாம் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம். இன்று போதுமான அளவுக்கு வெளிச்சமானது உலகத்தார்மீது, அதிலும் விசேஷமாக நாகரிகமான ஜனங்கள்மீது பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. யூதருடைய நியாயப்பிரமாணத்தினால் முன்வைக்கப்பட்டதும், பிற்பாடு கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களினால் விரிவுபடுத்தப்பட்டதுமான நீதியின் கொள்கைகளானது, நீதி-அநீதி தொடர்பாகவும், சரி-தவறு தொடர்பாகவும், நன்மை-தீமை தொடர்பாகவும் ஜனங்களின் மனங்களைப் பிரகாசிப்பித்துள்ளபடியால், இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் சந்ததியார் அதிகப் பொறுப்பை உடையவர்களாய்க் காணப்படுகின்றனர். இப்படி அறிவு அதிகரித்து இருந்தபோதிலும், உலகமெங்கும் கடுமையான மீறுதல்கள் இருந்தபோதிலும், உலகத்தின் காரியங்களை, பொருளாதாரக் காரியங்களை, சமுதாயக் காரியங்களை, மதக் காரியங்களைச் சமப்படுத்துவதற்கு மற்றும் சரிப்படுத்துவதற்கு ஏதுவாய் எதையேனும் செய்துவிடுவதற்கு வெகு சொற்பமானவர்களே விருப்பமாய் இருப்பதை நாம் காண்கின்றோம். நன்மையானவைகளை வைத்திருக்கும் பெரும்பான்மையானவர்களோ, தாங்கள் நேர்மையற்றவர்கள் என்றும், அநீதியானவர்கள் என்றும் அடையாளம் கண்டுகொண்டபோதிலும், அந்த நன்மைகளைத் தங்களுக்கென்றே வைத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்களாய்க் காணப்படுகின்றனர்.

இதற்கிடையில் தங்கள் உரிமைகளுக்காகவும், அநியாயங்களுக்கு எதிராகவும் அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுக்கொண்டிருக்கும் ஜனக்கூட்டத்தாரையும் விடியலின் வெளிச்சமானது விழித்தெழப் பண்ணிக்கொண்டிருக்கின்றது. இச்சூழ்நிலைகளைக் கர்த்தர் அனுமதித்துக்கொண்டு மாத்திரம் இராமல், இதற்கு ஆதரவாகவும் இருக்கின்றார்; இதற்கு உதவிக்கொண்டும் இருக்கின்றார் மற்றும் இதன் விளைவாக ஜாதிகள் தோன்றினது முதற்கொண்டு இராத ஓர் உபத்திரவ காலம் வரும் என்றும் நமக்குத் தெரிவித்துள்ளார். இந்த மாபெரும் இறுதிப் போராட்டத்தில் உலகத்தின் இராஜாக்கள் - பொருளாதாரம், சமுதாயம், மதம் மற்றும் அரசியலானது கருத்து வேறுபாடில்லாமல் ஒரு பக்கத்தில் நிற்பார்கள் என்றும், மறுபக்கத்தில் கர்த்தருடைய "மகா சேனை" நிற்கும் என்றும், இந்த ஜனங்களின் நியாயங்களுக்காகவும், உரிமைகளுக்காகவும் கர்த்தர் வழக்காடுவார், போராடுவார் என்றும் கர்த்தர் நமக்குத் தெரியப்படுத்துகின்றார். உண்மைதான் கர்த்தர் தங்கள் சார்பில் இருக்கின்றார் என்பதைச் சாதாரண ஜனங்கள் உணர்ந்துகொள்ளமாட்டார்கள் மற்றும் இவர்களில் அநேகர் அவரைப் புறக்கணித்து, தங்கள் சொந்தத் திட்டங்கள், உபாயங்கள், பொதுவுடைமை கொள்கைகள் முதலானவைகள்மீது மட்டும் நம்பிக்கையினை வைப்பவர்களாகவும் காணப்படுவார்கள். இதுபோலவே பூமியின் இராஜாக்கள் மற்றும் பிரபுக்கள் மற்றும் இவர்களது சேனைகளின் சார்பில் நிற்பவர்களும்கூட, தாங்கள் எவ்வகையான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதையும், நீதியின் ஆளுகைக்காக - தேவனுடைய நேச குமாரனின் இராஜ்யத்திற்காக - ஆயிர வருஷ இராஜ்யத்திற்காகப் பூமியினை ஆயத்தப்படுத்தத்தக்கதாக, தற்காலத்தின் அமைப்புகளைக் கவிழ்த்திடும் நோக்கத்தில் கர்த்தர் இந்த யுத்தத்தில் பங்கெடுக்கின்றார் என்பதையும் அடையாளம் கண்டுகொள்ளாமல் இருப்பார்கள்.

இப்பொழுது போக்காடு வகுப்பாரைப் பார்க்கலாம்:- இவர்கள் தங்களது பலியின் உடன்படிக்கைக்கு உண்மையற்றுப்போவதால், இவர்கள் உலகத்தின்மீது வரப்போகும் காரியங்களிலிருந்து தப்பிப்பதற்கு

அபாத்திரர்களாகக் கருதப்படுவார்கள்; இவர்கள் தேவனுடைய உண்மையான பிள்ளைகளாக இருந்தபோதிலும் இந்த ஜீவியத்தின் காரியங்களினால் பாரமடைந்து, தங்கள் உடன்படிக்கையினை நிறைவேற்றிடுவதற்கும், இராஜ்யத்தில் பங்கடைவதற்கும் போதுமான வைராக்கியத்துடன் இராததால், இவர்கள் அந்த உபத்திரவத்தில் மாயக்காரர்களோடும், உலகத்தாரோடும் தங்கள் பங்கினைப் பெற்றுக்கொள்வார்கள். இந்த வகுப்பார் மீதான இரக்கத்தின் காரணமாகவே, கர்த்தர் இவர்களை அந்த உபத்திரவத்திற்குள் அனுப்புகின்றார்; இதன் கசப்பான அனுபவங்களில் இவர்கள் தேவையான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளத்தக்கதாகவும், இறுதியில் நெருக்கடியின்கீழ் அவருக்கும், நீதிக்குமான இவர்களது நேர்மைக்குச் சான்று பகிரத்தக்கதாகவும் கர்த்தர் இவர்களை அந்த உபத்திரவத்திற்குள் அனுப்புகின்றார். இவர்கள்மீது ஜனங்களுடைய மீறுதல்கள் அறிக்கைபண்ணப் படுவதாக - அதாவது திவ்விய நீதியின் கண்ணோட்டத்திலிருந்து இப்படிச் செய்யப்படுவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களது சொந்தப் பாவங்களானது, இவர்கள் விசுவாச வீட்டாரின் அங்கத்தினர்களெனக் கருதப்படுவதனால், கிறிஸ்து மூலமாய் மன்னிக்கப்பட்டுவிட்டன. ஆகையால் இவர்களது பாடுகள் மற்றவர்களுடைய பாவங்களுக்காய் ஆகும்; இவர்கள் விரும்பி பலிசெலுத்துபவர்களெனப் பாடுபடாததினால், இவர்களது ஆவி கர்த்தர் இயேசுவின் நாளில் இரட்சிக்கப்படத்தக்கதாக, இவர்கள் அப்போது மரணத்திற்கு ஏதுவாய்ப் பாடுபட அனுமதிக்கப்படுவார்கள்.

## அனைத்து நீதிமான்களின் இரத்தப்பழியும் விசாரிக்கப்படுதல்

இதைப்போன்று கிட்டத்தட்ட யூத யுகத்தினுடைய முடிவு காலங்களில் உண்டான உபத்திரவ காலத்தில் பாடுபட்ட வகுப்பார்குறித்த நமது கர்த்தருடைய வார்த்தைகளை நாம் மறவாமல் இருப்போமாக. ஆபேலின் காலம் முதற்கொண்டு, சகரியாவின் மரணம்வரை சிந்தப்பட்ட அனைத்து நீதிமான்களின் இரத்தம்குறித்து அந்தத் தலைமுறையினரிடத்தில் விசாரிக்கப்படும் என்று அவர் கூறியிருந்தார். இது அநீதிபோன்று தோன்றாலம். அந்தத் தலைமுறையினருடைய நாட்களுக்குப் பல நூற்றாண்டுகள் முன்னதாக நிகழ்த்தப்பட்ட மீறுதல்களுக்காய் ஏன் அந்தத் தலைமுறையினர் தண்டிக்கப்பட வேண்டும்? என்று நாம் கேள்வி கேட்கலாம். கர்த்தர் இது விஷயத்தில் குறிப்பாய்த் தெரிவிக்கிறதில்லை - இது விஷயத்திலுள்ள திவ்விய நீதியின் இவ்விதமான செயல்பாட்டினைக்குறித்து அவர் விவரமளிக்கிறதில்லை; ஆனாலும் நமது கர்த்தருடைய நாட்களில் வாழ்ந்துகொண்டிருந்த தலைமுறையினர், அவர்களுக்கு முந்தியுள்ள தலைமுறையினர் யாவரைக்காட்டிலும் மிக அதிகமான அனுகூலங்களை உடையவர்களாய் இருப்பதினால், இவர்கள் கடுமையான தண்டனைகளுக்குப் பாத்திரமாய் இருக்கின்றனர் என்ற உண்மையில் பதில் காணப்படுகின்றது என்று நாம் நியாயமாய் அனுமானித்திடலாம். நமது கர்த்தர் சுட்டிக்காட்டுவதுபோன்று இவர்களுக்கு முற்காலத்தின் அனுபவங்கள் இருந்தன மற்றும் இவர்கள் தீர்க்கத்தரிசிகளைக் கொன்றுபோட்ட தங்களது பிதாக்களின் செய்கைகளை அங்கீகரியாதிருந்தனர் - ஆனால் பெரும் வெளிச்சத்தினைப் பெற்றுக்கொண்ட இவர்கள் மிக மோசமானதைச் செய்தனர் - தேவகுமாரனைக் கொன்றுபோட்டனர் மற்றும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகிய, அவரது சபையினைத் துன்புறுத்தினர்.

இதுபோலவே இந்த யுகத்தினுடைய முடிவிலும், கடந்த காலங்களினுடைய அநீதிகளுக்காகவும், அதிலும் விசேஷமாக இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் நாகரிக தேசங்களில் சிந்தப்பட்ட

பரிசுத்தவான்கள் அனைவருடைய இரத்தத்திற்காகவும் கர்த்தர் வாழ்ந்துகொண்டிருக்கும் தலைமுறையினரிடத்தில் கணக்கினை விசாரிப்பார் என்றும் வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. கடந்த காலங்களில் பரிசுத்தவான்களுக்குச் செய்யப்பட்ட அநேகமான தீமைகளுக்கு இதுவரை தண்டனை வழங்கப்படவில்லை என்று நாங்கள் எண்ணுகின்றோம். கர்த்தருடைய நாமத்தைக்கொண்டும், மதத்தின் பெயரைக்கொண்டும் இயங்கிவரும் மாபெரும் அமைப்புகளானது உண்மை சபையினைத் துன்புறுத்தினபோதிலும், அவை செழித்தோங்கிக்கொண்டிருக்கின்றன மற்றும் அவை தங்களுக்கான நியாயமான பலனை இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை. கடந்த காலங்களில் மரித்த சில இரத்தச் சாட்சிகளானவர்கள், ஐந்தாம் முத்திரையின்கீழ், "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" என்று நமக்குச் சாட்சி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது (வெளிப்படுத்தல் 6:10). இது உண்மையில் மரித்துப்போனவர்களாகவும், உயிர்த்தெழுவது வரையிலும் எதைக்குறித்தும் அறியாதவர்களாகவும், அறிந்துகொள்ள முடியாதவர்களாகவும் காணப்படுபவர்களுக்குப் பிரதிநிதியென, பழிவாங்குதலுக்கு நீண்ட காலமாகக் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் நீதியினை அடையாளப்படுத்திக் காண்பிக்கும் காட்சியாகும். நீதியினுடைய ஆசனத்திற்கு முன்பு ஏறெடுக்கப்பட்ட இந்த வேண்டுதலுக்குப் பதில்கொடுக்கப்பட்டது. இதுபோலவே மற்றவர்களும் துன்பப்படுத்தப்பட்டு முடியும்வரைக்கும் கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டும் என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது; பின்னர் வரும் நியாயத்தீர்ப்பானது ஒட்டுமொத்த கணக்கையும் சரிக்கட்டிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவே நெருங்கி வந்துகொண்டிருக்கும் பயங்கரமான உபத்திரவமாகும் - அப்போது மகா பாபிலோனானது, மகா ஏந்திரக்கல்லெனக் கடலுக்குள் எறியப்படும்; அப்பொழுது ஒவ்வொரு மனுஷனுடைய கையும், குழப்பத்தின் மத்தியில் தன் அயலானுக்கு விரோதமாய்க் காணப்படும்; அப்போது வெளியே செல்கிறவனுக்கு அல்லது உள்ளே வருகிறவனுக்குச் சமாதானம் இராது; அது எந்த ஒரு ஜாதியார் தோன்றினது முதற்கொண்டு இராததும், இனிமேல் தோன்றாததுமான ஓர் உபத்திரவ காலமாய் இருக்கும்.

இந்த உபத்திரவத்திலிருந்து சிறுமந்தையினர், அதாவது உண்மையாய்ப் பலிசெலுத்துபவர் களாகிய கர்த்தருடைய ஆடு வகுப்பினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தப்பித்துக் கொள்வார்கள்; திரள் கூட்ட வகுப்பினரோ இதினின்று தப்பித்துக்கொள்ளாமல், மாறாக பங்கடைவார்கள். இவர்கள் இந்த மகா உபத்திரவத்திலிருந்து வஸ்திரங்களைத் துவைத்துக்கொண்டவர் களாகவும், ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் வஸ்திரங்களை வெளுக்கப்பெற்றவர்களாகவும் வருவார்கள். இவர்களுடைய பாடுகளானது, இவர்களுடைய வஸ்திரங்களை வெளுக்கப்பண்ணுவதில்லை; மாறாக இவர்கள் பாடுபடும்போது, இவர்கள் ஒருபோதும் இல்லாதளவுக்குத் தேவாட்டுக்குட்டியானவருடனான தங்கள் உறவினைக்குறித்தும், அவரது பாவநிவாரண புண்ணியத்தோடு இருக்கும் உறவினைக்குறித்தும் உணர்ந்துகொள்ள கற்றுக்கொள்வார்கள்; மேலும் விசுவாசத்தின் மூலமாய் அப்புண்ணியத்தினைத் தங்கள் சுத்திகரிப்பிற்காய்ப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுவார்கள்.

R3605 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பிராகாரத்தில் திரள் கூட்டத்தினர்

அடுத்ததாக நாம் போக்காட்டினைக்குறித்துப் பார்க்கப்போகின்றோம். இது ஓர் அர்ப்பணிக்கப்பட்ட வகுப்பாரையே குறிக்கின்றது; ஏனெனில் போக்காடும் சரி, கர்த்தருடைய ஆடும் சரி கூடாரத்தின் கதவண்டையில், பலிசெலுத்தப்படுவதற்கென்று கட்டப்படுகின்றன. எனினும் போக்காடானது, பலியாகாத ஒரு வகுப்பாருக்கு, பாளயத்துக்குப் புறம்பே சென்று, காளையோடுகூட நிந்தையைச் சுமக்காத ஒரு வகுப்பாருக்கு, பலிபீடத்தின்மீது கொண்டு செல்லப்படாத கொழுப்பையும், கிருபாசனத்தின்மீது ஒருபோதும் தெளிக்கப்படாத இரத்தத்தையும் உடைய ஒரு வகுப்பாருக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது. இது தங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த தவறுகிற அர்ப்பணிக்கப்பட்டவர்களிலுள்ள திரள் கூட்டத்தினருக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றது; மேலும் இவர்களைக் கர்த்தருடைய இரக்கமானது, இரண்டாம் மரணத்தினின்று தப்புவிக்கின்றது; காரணம் ஜெயம்கொண்டவர்களாகிய இராஜரிக ஆசாரியக்கூட்டத்தார் மத்தியில் பங்கடையும் அளவுக்கு நீதியின் மீதுள்ள இவர்களது அன்பின் விஷயத்தில் இவர்கள் சரியான அளவு பக்திவைராக்கியத்தினை வெளிப்படுத்தாதிருந்தபோதிலும், இவர்கள் நீதியினை விரும்பி, அக்கிரமத்தினை வெறுத்திருந்தார்கள் மற்றும் அவர்மீது விசுவாசமும் வைத்திருந்தார்கள்.

## போக்காட்டினால் சுமக்கப்படும் பாவங்கள்

இந்தப் போக்காட்டின்மீது ஆசாரியன் கைகளை வைப்பதையும், அதன்மேல் ஜனங்களுடைய பாவங்களை அறிக்கையிடுவதையும், பின்னர் அது வனாந்தரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே விடப்படுவதையும் குறித்து வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இதன் அர்த்தம், சபையாகிடுவதற்குத் தகுதியற்றுப்போன அங்கத்தினர்கள், அவர்களது மாம்சம் அழிக்கப்பட்டு, அவர்களது ஆவிகள் அல்லது ஜீவன் இறுதியில் இரட்சிக்கப்படத்தக்கதாக, அவர்கள் எதிராளியானவனின் அதிகாரத்திற்கும், வல்லமைக்கும் ஒப்புக்கொடுக்கப்படுகின்றனர் என்பதாகும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், பலிசெலுத்தப்படாத ஜீவனானது அழிக்கப்படுகின்றது மற்றும் அர்ப்பணிப்பிற்கு இசைவாக விரும்பி ஏற்றுக்கொள்ளப்படாத பாடுகளானது சுமத்தப்படுகின்றது; ஒருவேளை அந்தப் பாடுகளானது முறையாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒருவேளை கர்த்தருக்கான உண்மை இறுதியில் நிரூபிக்கப்பட்டதானால், மகா உபத்திரவத்தின் வாயிலாய் வரும் அக்கினியினால் இவர்களது ஆவியானது இரட்சிக்கப்படும். "இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் நின்றார்கள். இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளிப்படுத்தல் 7:9, 14). இந்த லேவியர்கள் ஒரு மகிமையான கூட்டத்தார் ஆவார்கள். ஆனால் இவர்கள் உலகத்தின் இரட்சிப்பிற்குரிய தெய்வீகத் திட்டத்தினுடைய கீழ்த்தளத்தில் இடம்பெறுபவர்கள் ஆவார்கள்; ஆயிரவருஷ யுகத்தின்போது மனுக்குலத்தின் உலகத்தினைச் சீர்த்தூக்கிவிடும் மகிமையான வேலையில் மணவாட்டிக்குக் கீழ்நிலையில் இடம்பெறுபவர்கள் ஆவார்கள்.

இக்காரியத்தினைத் தெளிவாய்க் கிரகித்துக்கொள்ளாத சிலர், நிழல்களையும் நிஜங்களையும் எப்படிப் பொருத்திப்பார்ப்பது என்று கற்றுக்கொள்ளாத சிலர், போக்காடானது ஒருபோதும் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாகப் பிரவேசிக்காத காரணத்தினால், போக்காடானது திரள் கூட்டம் வகுப்பாரினை அடையாளப்படுத்த முடியாது என்று கூறிடலாம். கர்த்தருடைய ஆடும் பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லவில்லை, காளையும் பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லவில்லை என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். ஒரு மனுஷனாக நமது கர்த்தரைக் காளை அடையாளப்படுத்தினதே ஒழிய, ஆவிக்குரிய ஜீவியாக அல்ல; கர்த்தருடைய ஆடும், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களை மனுஷஜீவிகள் என்ற விதத்திலேயே அடையாளப்படுத்தினதே ஒழிய, ஆவிக்குரிய ஜீவிகளாய் அல்ல. கவனிக்கப்பட வேண்டிய காரியம், கர்த்தருடைய ஆடானது பலியாகிடுவதற்கென்று காளையினைப் பின்தொடர்ந்துபோனது; ஆனால் போக்காடானது இப்படிச் செய்யவில்லை என்பதே ஆகும். கர்த்தருடைய ஆட்டின் இரத்தமானது பிரதான ஆசாரியனால் கிருபாசனத்தின் மீது தெளிக்கப்பட்டது; ஆனால் போக்காட்டின் இரத்தமானது இப்படியாகத் தெளிக்கப்படவில்லை.

## ஓர் உபத்திரவ காலம்

ஜனங்களுடைய பாவங்களானது போக்காட்டின்மீது அறிக்கைப்பண்ணி, சுமத்தப்பட்ட காரியத்தினுடைய அர்த்தத்திற்கு வருகின்றோம்: போக்காட்டினுடைய தலையின்மீது அறிக்கைப்பண்ணி சுமத்தப்பட்ட பாவங்களானது, காளை மற்றும் கர்த்தருடைய ஆட்டின் இரத்தத்தினைக்கொண்டு நிவிர்த்தி செய்யப்பட்ட பாவங்களாய் நிச்சயமாக இருப்பதில்லை. காளை மற்றும் கர்த்தருடைய ஆட்டின் இரத்தத்தினால் உண்டான நிவிர்த்தியானது, ஆதி பாவத்திற்கும், இதனால் ஆதாமின் சந்ததியினருக்கு உண்டான குறைவுகள் மற்றும் அபூரணங்கள் அனைத்திற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பாவங்களைத் தவிர்த்து, வேறு பாவங்களும் இருக்கின்றன; இவைகளுக்குப் பாவநிவாரணம் செய்யப்படவில்லை, இவைகள் மன்னிக்கப்பட முடியாது; மேலும் இவைகளின் காரணமாய்த் திவ்விய கோபாக்கினையானது ஏறக்குறைய கடந்த ஆறாயிரம் ஆண்டுகளாகவே வெளிப்பட்டுக்கொண்டிருக் கின்றது மற்றும் எந்த ஜாதியார் தோன்றினது முதற்கொண்டு இராததும், இனிமேலும் இதுபோன்று வராததும், இப்பொழுது நெருங்கி வந்துகொண்டிருக்கிறதுமான மகா உபத்திரவ காலத்தில் இந்தக் கோபாக்கினையானது விசேஷமாய் வெளிப்படும். மனுஷர்கள் தங்களுக்குக் கிடைத்த அறிவு, வாய்ப்புகள் மற்றும் சிலாக்கியங்களுக்கு ஏற்ப ஜீவிக்கவில்லை என்பதினால், உலகத்தின்மீது கோபாக்கினையை உடைய பொற்கலசங்களானது ஊற்றப்படும் என்ற விதத்தில் இந்த உபத்திரவ காலமானது பேசப்படுகின்றது. இது இயல்பான காரணங்களினால் வரும் இயல்பான விளைவுகளாய்க் கடந்துவரும்; எனினும் அவை உலகத்தின்மீது தவறுக்கான தண்டனையாகக் கடந்துவரும். இதில் திரள் கூட்டத்தினர் விசேஷித்த இடத்தினை, விசேஷித்த பங்கினைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நாங்கள் புரிந்திருக்கின்றோம். இந்த ஒரு காலத்தில் ஒவ்வொரு மனுஷனுடைய கிரியையும் அக்கினியினால் பரீட்சிக்கப்படும்; இது சபைக்கு விசேஷமாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கும்.

உண்மைதான் இந்தத் திரள் கூட்டத்தின் வகுப்பாரிலுள்ள சிலர், இவர்களது மாம்சம் அழிக்கப்படத்தக்கதாகவும், இவர்களது ஆவியானது இரட்சிக்கப்படத்தக்கதாகவும் (அதாவது ஆவிக்குரிய ஜீவிகளென இரட்சிக்கப்படத்தக்கதாகவும்) வேண்டி இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும் சாத்தானிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டு வந்துள்ளனர். ஆனால் (முற்காலங்களிலுள்ள) இவர்களின்

எண்ணிக்கையானது, இந்தக் காலங்களில் நாம் அனுபவிக்கும் மகா வெளிச்சம், வாய்ப்புகள் மற்றும் சிலாக்கியங்களின்கீழ்த் தங்களை அர்ப்பணம்பண்ணி, ஆனாலும் தங்கள் பலியினை முழுமையாய் ஏறெடுக்காமல் பின்வாங்குகிறவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, சிறிய எண்ணிக்கையாகவே காணப்படுகின்றது. இந்தத் திரள் கூட்டத்தினர் சம்பந்தமான பாவநிவாரண நாள் காட்சியின் இந்தப் பாகமானது, மற்ற வகுப்பார்பற்றின காட்சி பாகத்தினின்று வேறுப்படுகிறதில்லை. உதாரணத்திற்குக் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் கடைசி அங்கத்தினன் கர்த்தரோடுகூடப் பாடுபட்டு முடிவதுவரையிலும் - கர்த்தருடைய ஆட்டின் இரத்தமானது கிருபாசனத்தில் தெளிக்கப்படும் இறுதி வேலை நிறைவடைவது வரையிலும் - கடைசி அங்கத்தினன் அர்ப்பணம்பண்ணுவதோடு மாத்திரமல்லாமல், தன் பலியினை நிறைவேற்றிடுவது வரையிலும் - கர்த்தருடைய ஆட்டின் பலியானது நிறைவடைந்ததாகப் பார்க்கப்படுகிறதில்லை.

---

R4856 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# உரிய வகை தண்டனை அளிக்கும் ஆயிர வருஷ அரசாட்சியின் நடவடிக்கை

மனுக்குலத்திற்கு எதிராக நீதியின் சார்பில் வைக்கப்படும் கோரிக்கைகள் அனைத்துமே இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் கணக்குத் தீர்க்கப்பட்டு, முடிக்கப்பட வேண்டும் என்பதே தெய்வீக நீதியைப் பொறுத்தமட்டில் உள்ள தெய்வீக ஏற்பாடாகக் காணப்படுகின்றது. இது பாவங்களை நிவிர்த்தி செய்வதற்குரிய நிழலான பாவநிவாரணத்தினால் அடையாளப்படுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளது. நிஜமான பாவநிவாரண நாளில் கிறிஸ்துவின் பலிகளும், அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகுவதற்குப் பாத்திரமாயிருப்பவர்களை ஆயத்தமாக்குதலும் நடைபெற்று வருகின்றது. இந்த நிவிர்த்தியினை நீதியானது ஏற்றுக்கொள்ளும்போது, இது கணக்குகளைத் தீர்த்து, விலக்கப்பட்ட கனியினைப் புசித்ததன் வாயிலாகத் தேவனுடைய பிரமாணத்தினை மீறினதன் காரணமாய் உண்டான பொறுப்புகள் அனைத்தினின்றும் ஆதாமையும், அவர் சந்ததியார் யாவரையும் விடுவித்துவிடுகின்றது. இயேசுவின் மரணமானது, ஆதி ஆதாமின் பாவத்தினால் உண்டான பாவங்களுக்கான நிவிர்த்தியாக இருக்கின்றது.

ஆனால் வேறு பாவங்களும், தவறுகளும்கூடக் காணப்படுகின்றது - இவைகளுக்கு நீதியானது தண்டனை வழங்கிட எதிர்ப்பார்க்கின்றது - இவை பரிசுத்த ஆவிக்கு எதிரான, வெளிச்சத்திற்கு எதிரான பாவங்களாய்க் காணப்படுகின்றன. இவைகள் அனைத்தும் தேவனுக்கு எதிரான, நீதிக்கு எதிரான பாவங்களாய் இருக்கின்றன. உதாரணத்திற்குக் கர்த்தருடைய அனுபவத்தினைக் கவனியுங்கள்: ஒருவேளை சாதாரண ஜனங்களின் கும்பலானது நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்குப் பொறுப்பாளிகளாக இல்லாமல் இருக்கலாம்; ஆனால் நன்மையானவைகளைச் செய்வதற்கு ஏதுவாகப் போதுமான அளவுக்கு வெளிச்சத்தை உடையவர்களாகிய தனி நபர்கள் காணப்பட்டனர். ஆகையால் ஆபேலின் நாட்கள் முதற்கொண்டு இக்காலம் வரையிலும், சிலர் மிகுந்த அநியாயத்தினை அனுபவித்திருக்கின்றனர்; மேலும் ஆபேலின் இரத்தமானது அபயமிட்டதுபோன்று, நீதிக்கு எதிரான இந்தக் கொடுமைகள் தேவனை நோக்கி அபயமிட்டுக்கொண்டிருக்கின்றது. இவைகளுக்கான

நிவிர்த்தியும்கூட எவ்வாறு ஆசீர்வாதத்தின் மகா நாளானது துவங்குவதற்கு முன்பும், இராஜ்யத்தின் மத்தியஸ்தரிடம் உலகமானது முழுமையாய் ஒப்படைக்கப்படுவதற்கு முன்பும் செய்துமுடிக்கப்படும் என்று வேதவாக்கியங்களானது நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

இந்த மனப்பூர்வமான பாவங்களுக்குரிய நிவிர்த்தியினைக்குறித்துப் போக்காட்டின் நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளது. நிழலில் "திரள் கூட்டத்தினர்" எப்படி உபத்திரவத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் என்பதையும், இது இவர்களுக்கும் நல்ல விளைவுகளை உண்டுபண்ணுகின்றது என்பதையும், அதேவேளையில் ஆதாமின் பாவங்களைத் தவிர்த்து, நீதியினைக் கடுமையாய் மீறின கணக்குகளைச் சரிக்கட்டி தீர்த்துவைப்பதற்குரிய (squared) வழிவகையாகுகின்றது என்பதையும் நாம் காண்கின்றோம். பிரதான ஆசாரியன் போக்காட்டின் தலைமீது கைகளை வைத்தல் என்பது, "திரள் கூட்டம்" வகுப்பார்மீது இந்தப் பாவங்கள் சுமத்தப்பட்டு, அவர்களை உபத்திரவத்திற்குள் அனுப்புவதைச் சுட்டிக்காட்டுகின்றது. யூத ஜனங்கள்மீது வரும் என்று கர்த்தரால் முன்னுரைக்கப்பட்டதும், அப்படியே நிறைவேறித்தீர்ந்ததுமான அனுபவங்களுக்கு ஒத்த அனுபவங்களுக்குள் இவர்கள் கடந்துபோவார்கள். யூத யுகத்தின் முடிவின்போது சம்பவித்த அந்தப் பயங்கரமான பாடுகளானது, முந்தின காலங்களின் பல்வேறு தவறுகளுக்கு - அதாவது திவ்விய நீதிக்கு எதிரான பாவங்களுக்குரிய கணக்குகளைச் சரிக்கட்டித் தீர்த்துவைக்கும் என்று நமது கர்த்தர் தெரிவித்துள்ளார் (லூக்கா 11:49-51). இப்படியாக ஆயிரவருஷ அரசாட்சி துவங்குகையில் உலகமானது நீதியின் புஸ்தகத்தில் தங்களுக்கு எதிராக எந்தக் கணக்கையும் பெற்றிராமல் இருப்பார்கள்.

## முந்தின குணலட்சண வளர்ச்சிக்கேற்ப நடவடிக்கைகள்

பின்னர் நீதியானது ஒட்டுமொத்த மனுக்குலத்தின் உலகத்தினை மேசியாவின் கரங்களில் கொடுத்துவிடும் மற்றும் அவர் அவர்களை, அவர்கள் இருக்கிற பிரகாரமாகவே ஏற்றுக்கொள்வார். ஜனங்கள் பல்வேறு நிலைமைகளில் காணப்படுவார்கள். சிலர் மிகவும் சீர்க்கெட்டும், சிலர் குறைவாய்ச் சீர்க்கெட்டும் காணப்படுவார்கள்; சிலர் தங்கள் மனசாட்சியினை அதிகமாகவும், சிலர் குறைவாகவும் மழுங்கப்பெற்றிருப்பார்கள்; குணலட்சணங்களிலுள்ள இந்தக் குறைபாடுகளானது தற்காலத்தில் வெளிச்சம் மற்றும் வாய்ப்பினை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்ட அல்லது நிராகரித்த விதத்தைச் சார்ந்துள்ளது. அவர் சித்தம் என்ன என்று அறியாமல், அச்சித்தத்தைச் செய்யாதவர்கள் கொஞ்சமாய் அடிக்கப்படுவார்கள்; அவர் சித்தம் என்ன என்பதை அறிந்து, அதைச் செய்யாதவர்கள் அநேக அடிகள் அடிக்கப்படுவார்கள், காரணம் அவர்கள் முந்தின காலத்தில் கடினப்பட்டவர்களாய் இருந்துள்ளனர். அனைவருமே இறுதியில் திவ்விய எதிர்ப்பார்ப்பினுடைய தரநிலையின் முழு அளவினை அடைவதற்கு எதிர்ப்பார்க்கப்படுவார்கள். அதிகமாய்ச் சீர்க்கேடு அடைந்தவர்களுக்கு அதிகச் சிரமங்கள் இருக்கும் மற்றும் குறைவான சீர்க்கேடு அடைந்தவர்களுக்குக் கொஞ்சமே சிரமம் இருக்கும் மற்றும் திவ்விய எதிர்ப்பார்ப்பின் தரநிலையை அடைய முயற்சிக்கையில் சில அடிகளே அடிக்கப்படுவார்கள்.

வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில் - அனைத்து நற்செய்கைகளும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவதுபோன்று, ஒவ்வொரு தவறான செய்கையும், அந்தச் செய்கைக்குப் பின்புள்ள ஒவ்வொரு தவறான கொள்கையும் குணலட்சணத்தின்மீது தீய தாக்கம்கொண்டிருக்கும். ஆகையால் இந்த ஜீவியத்தில் சிலாக்கியங்களின் விஷயத்தில் அல்லது அறிவின் விஷயத்தில் மனுக்குலத்தார் கீழ்ப்படிந்துள்ளதற்கு அல்லது கீழ்ப்படியாமல்போனதற்கு ஏற்ப, அனுபவித்துப்

புரிந்துகொண்டதற்கு ஏற்ப - அவர்கள் அடுத்த யுகத்திற்குள் பிரவேசிக்கையில் குணலட்சணங்களின் காரியத்தில் மேம்பட்டு அல்லது சீர்க்கெட்டுக் காணப்படுவார்கள்.

---

R5255 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால்

"என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள். இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார்; பூமி தன் இரத்தப்பழிகளை வெளிப்படுத்தி, தன்னிடத்தில் கொலை செய்யப்பட்டவர்களை இனி மூடாதிருக்கும்." (ஏசாயா 26:20-21)

சுவிசேஷ யுகத்தினுடைய முடிவின்போதுள்ள உபத்திரவத்தினைக்குறித்துப் பேசுகையில், நமது கர்த்தர்: "ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" (லூக்கா 21:36) என்று கூறியுள்ளார்; இன்னுமாக 28-ஆம் வசனத்திலும், "இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்" என்று கூறியுள்ளார். "என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொள்."

இரகசிய "அறைகளுக்குள்" நாம் செல்கையில், கர்த்தருக்குள் கடந்துசென்றுவிடுகையில் எவ்வளவு உபத்திரவம் இருக்கும் என்று நாம் அறியோம். எனினும் இந்த உபத்திரவம் வருகையில், கர்த்தரிடமிருந்து அவ்வளவுக்கு ஓர் ஆசீர்வாதம் கடந்துவருகின்றபடியால், உபத்திரவத்திற்குள் கடந்துசெல்பவர்கள், உபத்திரவத்தில் களிகூரமுடிகிறவர்களாய் இருப்பார்கள். இவர்களுக்கான அனுபவங்கள் என்னவாக இருப்பினும், இவர்கள் கர்த்தரோடுகூட என்றென்றும் காணப்படுவார்கள் என்ற எண்ணத்தினால் சந்தோஷப் படுபவர்களாய் இருப்பார்கள். பரிசுத்தவானாகிய ஸ்தேவான் களிகூர்ந்ததுபோன்று நாமும் களிகூர முடியும்.

### மனப்பூர்வமான பாவங்களுக்கு உரிய தண்டனை

ஏசாயா 26:21-ஆம் வசனமானது, உலகத்தின்மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்புகளில் செயல்படும் நீதியின் கொள்கையினைக்குறித்துக் குறிப்பிடுகின்றதாயிருக்கின்றது. பரம பிதா நீதிக்குப் பிரதிநிதியாக நிற்கின்றார் மற்றும் தம் இரக்கம் அனைத்தும் கர்த்தராம் இயேசு கிறிஸ்துவின் மூலமாய்ச் செயல்படுத்தப்படும்படிக்கு நியமித்துள்ளார். நமது கர்த்தர் ஜாதிகள்மீது வரும் உபத்திரவங்களுடன் விசேஷமாய்ச் சம்பந்தப்பட்டவராய் இருப்பார்; எனினும் அவருக்கு அதில் பிதாவுக்கு இருக்கும் பங்கின் அளவிற்குப் பங்கு இருப்பதில்லை. உபத்திரவத்தின் நாளானது யேகோவாவின் நாள் என்று அழைக்கப்படுகின்றது. "அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்" என்றும், மகா பூமி அதிர்ச்சி உண்டாகும் என்றும் நாம் வாசிக்கின்றோம். (சகரியா 14:4)

கடந்த 6000-ஆண்டுகளாகத் தேவன் மனுக்குலத்திற்காக எதையும் செய்யவில்லை என்றாலும், சீர்த்திருத்த வேலை எதுவும் செய்யாமல் ஓய்ந்திருந்தார் என்றாலும், சில சந்தர்ப்பங்களில் அவர் தீமை பரப்பப்படுவதைத் தடுக்கும் வண்ணமாகக் குறுக்கிட்டுள்ளார்; உதாரணத்திற்கு அமலேக்கியர் மற்றும் சோதோமியர்களின் சம்பவங்கள் ஆகும். இந்த யுகத்தின் முடிவிலும் அவர் மனுக்குலத்தின் காரியங்களில் தலையிடுவார் என்றும், உபத்திரவத்தின் காலத்தில் நீதியினை நிறைவேற்றிடுவார் என்றும் வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

வேதவாக்கியங்களில் நீதியானது பழிவாங்கும்படிக்குக் கேட்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொலை செய்யப்பட்டவர்களின் இரத்தமானது பழிவாங்குதலுக்காகக் கூக்குரலிட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருவேளை பாவமானது சொல்லர்த்தமான கொலைக்கு நேராக வழிநடத்தி இருந்தாலும் அல்லது ஏதேனும் அநீதியானது ஒரு குற்றத்திற்கு நேராக அல்லது தற்கொலைக்கு நேராக வழிநடத்தி இருந்தாலும், இது விஷயத்தில் நீதியானது மனுக்குலத்திற்குத் தண்டனை வழங்கிட எதிர்ப்பார்க்கின்றது. ஆதாமின் பிள்ளைகள் பாடுபட வேண்டும் என்று நீதி வலியுறுத்துகின்றது. கிறிஸ்துவின் சபை என்பவர்கள் தனிப்பட்ட வகுப்பினராய் இருக்கின்றனர் - இவர்கள் உலகத்தினின்று எடுக்கப்பட்டவர்களாகவும், தங்கள் பாவங்களை மன்னிக்கப் பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் சத்தியத்தையும், நீதியினையும் ஆதரிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

உலகத்தின்மீது வரவிருக்கின்ற இந்த உபத்திரவ காலம் என்பது, நீதி அதன் கடன் பாக்கிகளைப் பெற்றுக்கொள்ளும் காலம் என்று சொல்லலாம். நீதியானது அதன் தீர்வுகள் கட்டித்தீர்க்கும்படிக்குக் கடுமையாய் நடவடிக்கையினை மேற்கொள்ளும். நீதியானது மனுக்குலத்தினுடைய மனப்பூர்வமான பாவங்களுக்காய் விசாரித்திடும். கடந்த காலங்களில் ஏழைகளைச் சூறையாடின பலனை அனுபவித்த வகுப்பார், கணக்குகளைச் சரிக்கட்டி தீர்த்துவைக்கத்தக்கதாக வரியில் கொஞ்சம் நீதிக்குக் கட்டித்தீர்க்க வேண்டும். "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்பந்தத்தினிமித்தம் அலறி அழுங்கள்" என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகின்றார் (யாக்கோபு 5:1). தற்காலத்தில் தேவன் ஐசுவரியவான்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. கிறிஸ்துவின் சபை தவிர மற்றப்படி வேறு எவரும் இப்பொழுது பரீட்சையின்கீழ் இல்லை. மற்றவர்கள் வெறும் மனுக்குலத்தின் உலகத்தாராய் இருக்கின்றனர்; இவர்களில் ஒரு சாரார் மற்ற சாரார்மீது கொஞ்சம் பழிவாங்குதலை நிறைவேற்றிடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் மனுஷனுடைய இயலாமை என்பது தேவன் செயல்புரிவதற்கான வாய்ப்பாய் அமைகின்றது. அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்குரிய நியமிக்கப்பட்ட காலம் வந்துவிடும் மற்றும் மனுஷருடைய இந்தக் கோபம் மனுக்குலத்திற்கு நன்மையினை உண்டுபண்ண ஏதுவாக்கிடுவார்.

இந்த உபத்திரவம் வருவதற்குக் காரணமாய் இருப்பவர்கள், தாங்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை அறியாமல் இருக்கின்றனர். ஆனால் நீதிக்கு நிவிர்த்தி செய்யப்படும்போது, மேசியாவின் இராஜ்யமானது தலையிடும். "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை" என்று நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 24:22). இத்தகைய பாவங்களுக்காய் இப்படித் தண்டனையைக் கட்டாயமாக அளிக்கும் காரியமானது, கிறிஸ்து பாவங்களுக்காய் மரித்தார் என்ற வேதாகமத்தின் போதனைக்கு முரண்படுகிறதில்லை. இயேசு உலகத்தினுடைய பாவ-கடனைக் கட்டித்தீர்த்தார்.

உலகத்தின் பாவ-கடன் என்பது மரண தண்டனையாகக் காணப்பட்டது. இந்தத் தண்டனையைக் கர்த்தர் இயேசு சந்திக்கவில்லையெனில், உலகமானது ஒருபோதும் விடுவிக்கப்படமாட்டாது. அந்த மரண தண்டனையானது உலகத்தின்மீதே காணப்பட்டு வந்திருக்கும், அதுவும் எவ்விதத்திலும் அநீதியாகக் காணப்படாமல் உலகத்தின்மீதே காணப்பட்டு வந்திருக்கும். எனினும் கொலைசெய்ய வழிநடத்தின சுயநலத்தின் காரியம் என்பது, நமது கர்த்தரினால் ஆதாமின் பாவ-தண்டனை சந்திக்கப்படும் காரியத்தைவிட அதிகமானதாகும். அநியாயமாய்க் கொலைசெய்த யாரொருவரும், அதற்குப் பொறுப்பாளிகளாகப் பார்க்கப்படுவார்கள்.

யூத யுகத்தினுடைய முடிவின்போது ஆபேலின் காலம் முதற்கொண்டு சிந்தப்பட்ட நீதிமான்கள் அனைவரின் இரத்தத்திற்கான கணக்கினைத் தேவன் இந்தத் தலைமுறையினரிடத்தில் விசாரிப்பார் என்று நமது கர்த்தர் கூறினதாக நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 23:35). மேலும் யூத ஜனங்கள்மீது அவர்களது யுகத்தினுடைய முடிவின்போது வந்த உபத்திரவமானது, அந்தக் கணக்கினை முழுமையாய்ச் சரிக்கட்டினது. இவர்கள் வெளிச்சத்தையும், அறிவையும் பெற்றிருந்தனர் மற்றும் இதனால் பொறுப்பாளிகளாகக் கையாளப்பட்டனர். இவர்கள் - சிலரால் செய்யப்பட்டதும், மற்றவர்களால் ஆதரிக்கப்பட்டதும் அல்லது கண்டும் காணாததுபோன்று காணப்பட்டதுமான பாதகங்கள் காரணமாய்க் கஷ்டப்பட வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள்.

## வெளிச்சம் மற்றும் பொறுப்பு

இந்த யுகத்தினுடைய முடிவில், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பானது, அநேகம் வெளிச்சத்தினை, சிலசமயம் திசைமாறிய வெளிச்சத்தினைப் பெற்றவர்களாயிருந்த கிறிஸ்தவ மண்டலத்தார்மீது காணப்படும். இவர்களோடுகூடப் பொறுப்பு ஒன்றும்கூடக் காணப்படுகின்றது மற்றும் இவர்கள் தண்டனையினின்று தப்பித்துக்கொள்வதில்லை என்பது கர்த்தருடைய ஆணையாக இருக்கின்றது. யூதர்களிடம் அவர்களது யுகத்தினுடைய முடிவின்போது கர்த்தர் கணக்கு விசாரித்ததுபோலவே, இந்த யுகத்தில் சிந்தப்பட்ட நீதிமான்கள் அனைவரின் இரத்தத்திற்கான கணக்கினை இந்தத் தலைமுறை யினரிடத்தில் அவர் விசாரிப்பார். இது முன்புபோன்று இந்த யுகத்திலும் மகா உபத்திரவ காலத்தினை உண்டுபண்ணிடும். உலகத்தாரைப் பொறுத்தமட்டில், அவர்கள் இக்காலத்திற்கும், முற்காலத்திற்கும் இடையிலுள்ள சம்பந்தத்தை உணர்ந்துகொள்வதில்லை. நாம் வேதவாக்கியங்களிலிருந்து மாத்திரமே இவைகளை அறிந்தவர்களானோம். நாம் மனதில் மகா அமைதியும், ஆறுதலும் அடையத்தக்கதாகத் தேவன் நமக்கு இந்தப் புரிந்துகொள்ளுதலைக் கொடுத்திருக்கின்றார்.

இந்த யுகத்தினுடைய முடிவின்போது வரவிருக்கும் உபத்திரவத்தின் தன்மையைக்குறித்து நாம் சிந்திக்கையில், இது உலகத்தார் மற்றும் மாய்மாலக்காரர் மீதுவரும் ஓர் உபத்திரவம் என்பதை முதலாவது நாம் நினைவில்கொள்ள வேண்டும். நாம் ஒருவேளை உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுவோமானால், உலகத்தின்மீது வரும் ஆக்கினையின்கீழ் நாம் வருவதில்லை என்று கர்த்தர் கூறுகின்றார். சிறுமந்தையின் அங்கத்தினராகுவதற்குப் போதுமான அளவிற்கு உண்மையாய் இராதவர்கள், உலகத்தோடுகூட இந்த ஆக்கினையின்கீழ் வருவார்கள். மாய்மாலக்காரரோடே தங்கள் பங்கினை அனுபவிக்கப்போகும் சிலரைக்குறித்துக் கர்த்தர் நமக்குத் தெரிவித்துள்ளார். (மத்தேயு 24:51)

கோதுமை வகுப்பார் மாத்திரமே கிறிஸ்துவின் சபையில் அடங்குவார்கள். இவர்கள் மாத்திரமே களஞ்சியத்திற்குள் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் (மத்தேயு 13:30). உலகத்தின்மீது வரவிருக்கும் இந்த

உபத்திரவ காலத்திற்குள் களை வகுப்பார் கடந்துசெல்வார்கள். மாய்மால வகுப்பாரில் இந்த உலகத்தினுடைய ஐசுவரியவான்களும் அடங்குவார்கள். இவர்கள் பரிசுத்த யாக்கோபு அடிகளால் யாக்கோபு 5:1-6-வரையிலான வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த வசனங்களில் அப்போஸ்தலன் சற்று தன் கருத்துகளை நிறுத்துகின்றார். பின்னர் மறுபடியுமாகச் சபையைக்குறித்துக் குறிப்பிடுகின்றார். இந்த உபத்திரவமானது விசேஷமாக ஐசுவரியவான்கள்மீது கடுமையாய்க் காணப்படும்; இவர்கள் நிர்பந்தங்களினிமித்தம் அலறி அழுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

திரள் கூட்ட வகுப்பார், இஸ்ரயேலுடைய பாவநிவாரண நாள் அனுசரிப்புகளின் நிழலில் போக்காட்டினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். காளை நமது கர்த்தர் இயேசுவுக்கு நிழலாய் இருக்கின்றது மற்றும் கர்த்தருடைய ஆடானது, அவரது உண்மையுள்ள பின்னடியார்களுக்கு நிழலாய் இருக்கின்றது (எபிரெயர் 13:11-13). உண்மையுள்ளவர்கள் தங்கள் ஓட்டத்தினை முடித்த பிற்பாடு, போக்காடாகிய திரள் கூட்டத்தினரால் ஒரு காரியம் செய்துமுடிக்கப்படும். லேவியராகமத்தின் பதிவில், பிரதான ஆசாரியன் பிற்பாடு போக்காட்டினுடைய தலையின்மீது இஸ்ரயேலர்கள் அனைவரின் அக்கிரமங்களைச் சுமத்துவதைக்குறித்துக் குறிப்பாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது (லேவியராகமம் 16:21). சகல ஜனங்களின் (மற்ற) சகல பாவங்களைப்/அக்கிரமங்களைப் போக்காடு சுமக்கத்தக்கதாக - முழுமையான நிவிர்த்தி செய்யத்தக்கதாக, இப்பாவங்களானது போக்காட்டினுடைய தலையின்மீது சுமத்தப்படுகின்றது. ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டதுபோன்று, ஆதி பாவங்களானது கிறிஸ்துவின் வாயிலாக ரத்து செய்யப்படத்தக்கதாகத் தேவன் ஏற்பாடு செய்திருக்கின்றார் மற்றும் உலகத்தினுடைய மற்ற எல்லாப் பாவங்களின் விஷயத்தில் திரள் கூட்ட வகுப்பார்மூலம் நீதியினைத் திருப்திப்படுத்தத் தக்கதாக ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்.

யூத யுகத்தினுடைய முடிவிற்கும், இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவிற்கும் இடையில் ஓர் ஒற்றுமை காணப்படுகின்றது, அதென்னவெனில்: இயேசுவின் ஜீவனை எடுத்ததற்கான பரிகாரமானது யூத ஜனங்களிடத்தில் விசாரிக்கப்பட்டதுபோலவே, சுவிசேஷ யுகத்தினுடைய முடிவிலும் சபையின் பலியாக்கப்பட்ட ஜீவனானது, பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிடத்தில் விசாரிக்கப்படும். இக்கருத்தினை கர்த்தர் பின்வருமாறு: "ஆபேலின் இரத்தம்முதல் பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே கொலையுண்ட சகரியாவின் இரத்தம்வரைக்கும், உலகத்தோற்றமுதற் கொண்டு சிந்தப்பட்ட சகல தீர்க்கத்தரிசிகளுடைய இரத்தப்பழியும் இந்தச் சந்ததியினிடத்தில் கேட்கப்படத்தக்கதாக அப்படிச் செய்வார்கள் என்று சொல்லுகிறது. நிச்சயமாகவே இந்தச் சந்ததியினிடத்தில் அது கேட்கப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறுகையில் அவர் தெரிவித்துள்ளார் (லூக்கா 11:50-51). தீர்க்கத்தரிசனங்களில் எழுதப்பட்டுள்ள அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று பரிசுத்த பவுல் அடிகளார் எழுதியுள்ளார். ஆகையால் இந்த யுகத்தினுடைய முடிவில் கிறிஸ்தவ மண்டலத்தின் பொல்லாத செய்கைகளின் நிமித்தம், அவர்களுக்கு எதிராகச் சில விஷயங்கள் குற்றஞ்சாட்டப்படும். இது இந்தச் சுவிசேஷ யுகத்தின் துன்புறுத்தல்கள் அனைத்தையும், இன்னுமாக (ஒருவேளை) யூதர்களுக்கு எதிராக நிகழ்ந்த துன்புறுத்தல்கள் அனைத்தையும்கூட உள்ளடக்கும். ஆகையால் யூத ஜனங்கள்மீது கடந்து வந்ததுபோலவே இப்பொழுது கிறிஸ்தவ மண்டலம் அனைத்தின்மீதும் ஒரு மகா உபத்திரவ காலம் கடந்துவரும் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. 70-ஆம் வருஷத்தில் இஸ்ரயேலுக்கு உண்டான அனுபவங்களானது,1915-ஆம் வருஷத்தின் அனுபவங்களுக்கு இணையான அனுபவங்களாகக் காணப்படும்.

---

R5872 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# மீட்கும்பொருளும், பாவநிவாரண பலியும்

## வெளிச்சத்துக்கு எதிராகப் பாவம் செய்தோருக்குத் தண்டனை

ஆதாமின் மீறுதலுக்குள் சேராத உலகத்தின் வேறு பாவங்களும் உண்டு. பாவநிவாரண பலிகளானது ஆதாமின் பாவத்திற்கும், இந்த ஆதி பாவத்தினிடமிருந்து கடந்துவரும் பல்வேறு பெலவீனங்கள் மற்றும் அபூரணங்கள் அனைத்திற்கும் மட்டுமே ஏறெடுக்கப்பட்டதாகும். மற்றவகை பாவங்களானது மனித பெலவீனத்தினால் உண்டானதாயிராமல், அறிவிற்கு எதிராகவும், வெளிச்சத்திற்கு எதிராகவும் ஏறத்தாழ செய்யப்பட்ட பாவங்களாயிருக்கின்றன. முழு வெளிச்சத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட மனப்பூர்வமான பாவம் பாவிக்கு இரண்டாம் மரணத்தை வருவிக்கும். ஆனால் வெகு சிலரே முழு வெளிச்சத்தையும், முழு அறிவையும், முழு வாய்ப்பையும் பெற்றிருக்கின்றனர். ஆதலால், வெகுசிலரே மரணத்துக்கேதுவான பாவத்தைச் செய்திருப்பவர்களாய்க் காணப்படுகின்றனர்.

சுவிசேஷத்தின் வெளிச்சம் எங்கெல்லாம் சென்றிருக்கிறதோ, அங்கெல்லாம் குறிப்பிட்ட அளவு அறிவு சென்றடைந்திருக்கிறது. அதோடு, குறிப்பிட்ட அளவு பொறுப்பும் சிறுகச் சிறுகச் சேர்ந்திருக்கிறது. மேலும், வெளிச்சம் சென்றடைந்த அனைவரிடமும் தேவன் மிகத் துல்லியமாக கணக்கீட்டை வைத்திருக்கிறார் என்று தெரியப்படுத்தியுள்ளார். ஒவ்வொரு பாவமும் நியாயமாய் ஈடுகட்டப்பட வேண்டும். ஆதாம் செய்த பாவத்தின் தண்டனை முழு மனுக்குலத்திற்கும் 6000 - வருஷங்களாகப் பொதுவாகச் சென்றடைந்துள்ளது. ஆனால் நாம் மேலே பேசிக்கொண்டுவரும் பாவங்களுக்கான தண்டனை கண்டிப்பாக நிறைவேற்றப்பட வேண்டும்; இந்தப் பாவங்கள் ஏறக்குறைய மனப்பூர்வமானவைகளாகவும், ஏறக்குறைய வெளிச்சம் மற்றும் அறிவிற்கு எதிராகச் செய்யப்பட்டவைகளாகவும், முந்தி நிவிர்த்தி செய்யப்படாதவைகளாகவும், பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு குவிந்துகொண்டு வருகின்றவையாகவும் இருக்கின்றது.

புதிய யுகமானது அதன் எல்லா ஆசீர்வாதங்களுக்குள் நடத்திச்செல்வதற்கு முன்பாக, உலகத்தாரின் பாவ-கணக்கு முழுமையாகச் சரிக்கட்டி தீர்த்துவைக்கப்பட வேண்டும். உலகத்திற்கு எதிரான இந்தக் கணக்குகளைச் சரிக்கட்டும் காரியமே, தேசம் தோன்றினதுமுதல், இதுவரை சம்பவித்திராத மாபெரும் உபத்திரவ காலத்தை கொண்டுவந்திடும். தற்போதைய யுத்தத்தில் உபத்திரவ காலம் துவங்கிவிட்டது என்று நாம் நம்புகிறோம். இது மாபெரும் குழப்பமாகிய திடீர் அழிவை நோக்கிப் படிப்படியாக வளர்ந்து, இனிவருகின்ற நாட்களில் முழுமையாக தண்டனையை நிறைவேற்றி முடிக்கும். இவ்வாறு மகா உபத்திரவ காலத்தில் நீதியின் கணக்குகளானது சரிக்கட்டி முடிக்கப்படும் மற்றும் உடனே மேசியாவின் இராஜ்யத்தினுடைய ஆசீர்வாதங்கள் துவங்கும்.

## போக்காட்டினுடைய பாடுகளின் மதிப்பு

தேவன் மிகக் கண்டிப்பான கணக்கீட்டாளராக இருக்கிறார். உலகத்தினுடைய மனப்பூர்வமான கீழ்ப்படியாமை அனைத்தையும்குறித்து அவர் கணக்கு வைத்தவராயிருக்க, அதிலும் விசேஷமாக தமது சபைக்கு நேரிட்ட துன்புறுத்தல்கள் அனைத்தையும்குறித்து கணக்கு வைத்தவராயிருக்க, அதுபோலவே அவர் உலகத்தின் எல்லா கணக்கையும் சரிக்கட்டுவதில் உதவிபுரிய சித்தமாகவும் இருக்கிறார். இதனை அவர் பாவநிவாரண பலியைத் தொடர்ந்து நடைபெறுகிற பணியின்மூலம் உருவகமாக அறிவுறுத்தியிருக்கிறார்

என்று நாம் நம்புகின்றோம், அதாவது ஜனங்களின் மீறுதல்களில் சிலவற்றைப் போக்காட்டின் தலைமேல் அறிக்கையிட்டு சுமத்தி, வனாந்தரத்திற்கு போக்காடு அனுப்பிவைக்கப்படுகின்றது.

இந்தப் போக்காடு என்பது, தங்களுடைய சிலாக்கியங்களுக்கு ஏற்ப ஜீவிக்கத் தவறிப்போகும் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களில் சிலரை அடையாளப்படுத்துகின்றது என்பதினால், இது இவர்கள் வெளிப்படுத்தல் 7:14-ஆம் வசனத்தில் தெரிவிக்கப்படும் மகா உபத்திரவ காலத்திற்குள் கடந்துசெல்வார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக நாம் புரிந்துகொள்கிறோம். இந்த வசனப்பகுதியில் இவர்கள் மகா உபத்திரவ காலத்தில், ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து வெண்மையாக்கிக்கொள்பவர்களாகத் தெரிவிக்கப்பட்டுள்ளனர். லேவி வகுப்பாராகிய திரள் கூட்ட வகுப்பார்மேல் வரவிருக்கும் அந்த உபத்திரவங்கள், மனப்பூர்வமாகப் பாவம் செய்ததால் வந்த உபத்திரவங்கள் அல்ல. மாறாக, இந்த வகுப்பார் தேவனோடு செய்துகொண்ட பலியின் உடன்படிக்கையைக் காத்துக்கொள்ளத் தவறியதால், அந்த உடன்படிக்கைக்கு இணக்கமாகும்படி, மாம்சத்தை அழிவுக்குள்ளாக்குவதற்காக வரும் உபத்திரவங்கள் ஆகும். ஆகவே இந்தத் திரள் கூட்ட வகுப்பாரது உபத்திரவங்கள் உலகத்துக்கு ஆதாயமளிப்பதாக இருந்து, வெளிச்சத்திற்கு எதிராகவும், விசேஷமாக தேவபிள்ளைகளுக்கு எதிராகவும் செய்யப்பட்ட உலகத்தினுடைய பாவ கணக்குகளைச் சரிக்கட்டி முடிப்பதற்கு உதவிபுரியும் என்று நாம் புரிந்துகொள்கிறோம். விசேஷமாக இந்த உபத்திரவ காலம், மாய்மாலக்காரர்களுக்கு எதிராக இருக்கும். ஆனால் திரள் கூட்ட வகுப்பாரும், இந்த மாய்மாலக்காரர்களோடு தங்களது பங்கை அடைவார்கள். இவ்வாறு உலகத்தாருக்குக் கொடுக்கப்பட வேண்டிய தண்டனையில் குறிப்பிட்ட அளவு பங்கை இவர்கள் அடைவார்கள்.

உலகத்தினை (குற்றத்திற்கான) பொறுப்பாளிகளாக நிறுத்திவைத்துள்ள பாவங்களின் தன்மையினை நாம் தெளிவாய்க் கவனித்துக்கொள்ளத்தக்கதாக வெளிப்படுத்தல் 6:9-11- வரையிலான வசனங்களின் காரியங்களை நினைவுகூருவோமாக. "தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலை செய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது." சுவிசேஷ யுக முடிவின்போதுள்ள தெய்வீகக் கோரிக்கைகள் குறித்த கருத்தானது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது; இதை யூத யுகத்தின் முடிவில் இயேசு யூதர்களிடத்தில் வலியுறுத்தினதன் மூலம் நாம் அறியவருகிறோம். "ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்" (மத்தேயு 23:34-36). யூத யுகம் மாபெரும் உபத்திரவ காலத்தோடு முடிவடைந்தபோது, அக்காலம் வரையுள்ள கணக்குகளானது சரிக்கட்டி முடிக்கப்பட்டது. அவ்வாறே, நமக்கு அண்மையில் உள்ள மகா உபத்திரவ காலத்தினுடைய நிறைவின்போது உலகத்தினுடைய மீதமுள்ள கணக்குகள் அனைத்தும் சரிக்கட்டி முடிக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

R4015

# போக்காடு பற்றின கேள்வி

பாவநிவாரண நாளினுடைய பலிகளைக்குறித்தும், அவைகளின் இரத்தம் முதலாவதாக ஆசாரியன் மற்றும் அவரது வீட்டாருக்கு அல்லது லேவி குடும்பத்தாருக்கு மற்றும் இரண்டாவதாக "ஜனங்கள் அனைவருடைய பாவங்களுக்காகவும்" செயல்படுத்தப்படுவதுகுறித்தும் தெரிவித்தப் பிற்பாடு போக்காட்டினுடைய தலையின்மீது, ஜனங்களின் அக்கிரமங்களானது அறிக்கையிடப்படுவதைக்குறித்து நாம் வாசிக்கின்றோம்; இரத்தத்தினால் அனைவருக்கும் நிவிர்த்தி செய்யப்பட்ட பிறகு, எந்தப் பாவங்கள் மீதியிருக்கின்றன?

எல்லா ஜனங்களுடைய பாவங்களுக்கான பாவநிவாரண நாளின் நிஜமான பலிகளானது, ஆதாமின் குற்றம் அனைத்தையும், அனைவர் மீதுமான ஆக்கினைத்தீர்ப்பினையும் ரத்து செய்கின்றது என்றும், இது சுதந்தரித்துக்கொள்ளும் பாவங்கள் மற்றும் அபூரணங்கள் அனைத்தையும் உள்ளடக்குகின்றது என்றும் நாம் பதிலளிக்கின்றோம். இந்தப் பாவங்களில் எதுவும், போக்காட்டினுடைய தலையின்மீது அறிக்கையிடத்தக்கதாக மீதியிருப்பதில்லை.

ஆனாலும் வெளிச்சம் மற்றும் அறிவிற்கு எதிராய் ஓரளவுக்கு மனப்பூர்வமாகச் செய்யப்பட்டுள்ள மற்றவகை பாவங்களும் இருக்கின்றன. இவைகள் ஆதாமின் பாவங்களல்ல மற்றும் இவை பாவநிவாரண பலிகளினால் மூடப்படுவதுமில்லை. இந்தப் பாவங்களும், அக்கிரமங்களும்தான், போக்காடு வகுப்பாராகிய "திரள் கூட்டத்தார்" மீது சுமத்தப்பட்டதாக இருக்கின்றது. சீக்கிரம் சம்பவிக்கவிருக்கும் நிஜத்தில் "திரள் கூட்டத்தினர்" உலகத்தினாலும், அதிலும் விசேஷமாகப் "பாபிலோனாலும்" ஓரளவிற்கு மனப்பூர்வமாய்ச் செய்யப்பட்ட பாவங்கள் சிலவற்றிற்காகப் பாடுபடத்தக்கதாக அனுமதிக்கப்பட விருக்கின்றனர்.

யூத யுக அறுவடையினைத் திரும்பிப்பார்க்கையில் நாம் இங்கு எதிர்க்காலத்தில் வரவிருக்கின்றவைகளுக்கான காட்சியினைக் காண்கின்றோம். அங்குத் திவ்விய தயவினின்று புறந்தள்ளப்பட்ட யூத ஜனங்களானவர்கள், பயங்கரமான ஓர் உபத்திரவ காலத்திற்குள் சென்றார்கள். அந்த உபத்திரவத்தைக்குறித்து நமது கர்த்தர் குறிப்பிடுகையில் "நீதிமானாகிய ஆபேலின் இரத்தம்முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் (இதற்கான தண்டனை) உங்கள்மேல் வரும்" (மத்தேயு 23:35-36) என்று கூறினார்.

இதுபோலவே இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்பம் துவங்கி, சிந்தப்பட்ட தேவனுடைய பரிசுத்தவான்கள் அனைவருடைய இரத்தத்தின் கணக்கானது, தற்காலத்துத் தலைமுறையினரிடத்தில் விசாரிக்கப்படும் மற்றும் இது எந்த "ஒரு ஜாதியார் தோன்றினது முதற்கொண்டு உண்டாயிராத மகா உபத்திரவ காலத்தினை" கொண்டுவந்திடும். கடந்த காலத்தில் இரத்த சாட்சியாய் மரித்தவர்கள், அதாவது "பலிபீடத்தின்கீழ்க் காணப்படும் ஆத்துமாக்கள், பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" (வெளிப்படுத்தல் 6:10) என்று கூறி, நீதியின் இந்தச் சரிக்கட்டுதலுக்காய்க் கூக்குரலிட்டுக் கொண்டிருப்பதுபோன்று அடையாளமான விதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மற்றவர்களாகிய தங்கள் சகோதர சகோதரிகளும் இதேபோன்று கொல்லப்படுவதற்குக் காத்திருக்கும்படியாகவும்,

அப்போது அனைவருக்கும் செய்யப்பட்ட குற்றமானது சரிக்கட்டப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. (வெளிப்படுத்தல் 6:9-11)

யுகங்களினுடைய இறுதியிலேயே, யுகங்களினுடைய தவறுகள் அனைத்தும் முழுமையாய்ச் சரிக்கட்டப்பட வேண்டியதன் அவசியம் என்ன என்று கேள்வி எழும்புகின்றதா?

ஏனெனில் ஒவ்வொரு யுகத்திற்குமான பிரதான வெளிச்சமானது அதன் இறுதி பகுதிகளிலேயே கடந்துவருகின்றது - ஏனெனில் இத்தகைய வெளிச்சத்திற்கு எதிராகப் பாவம் செய்தவர்கள், இவர்களுக்கு முன்பு குறைவான வெளிச்சத்தில் காணப்பட்ட பொல்லாதவர்களைக்காட்டிலும், மிகக் கடுமையாய் நியாயந்தீர்க்கப்படுவதற்கு ஏதுவானவர்களாய்க் காணப்படுவார்கள்.

இந்த ஒரு கொள்கையின் அடிப்படையிலேயே நமது கர்த்தர், உண்மை வெளிச்சத்தினை எதிர்த்த அவரது நாட்களிலுள்ள யூதர்கள், முற்காலங்களில் நீதிமான்களைத் துன்புறுத்திய அவர்களது முன்னோர்களைக்காட்டிலும் அதிகம் குற்றமுள்ளவர்களாகக் காணப்படுவதாகக் குற்றஞ்சாட்டினார். இதே கொள்கையின் அடிப்படையிலேயே அவர் நம்மிடம் "என் ஜனங்களே, நீங்கள் (பாபிலோனுடைய) அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று கூறுகின்றார் (வெளிப்படுத்தல் 18:4). இன்றும் பாபிலோனுக்குள் காணப்படுபவர்கள், ஏற்றகால சத்தியத்தினுடைய வெளிச்சத்தில் பார்க்கையில், பாபிலோனை அங்கீகரிப்பவர்களாகவும், அவளது கடந்தகால தவறான செய்கைகள் அனைத்தையும் மறைமுகமாய் அங்கீகரிப்பவர்களாகவும் இருப்பார்கள். தற்கால வெளிச்சத்தில் கடந்த காலங்களினுடைய தவறுகளை அங்கீகரித்தல் என்பது பொறுப்பினை இரட்டிப்பாக்குகின்றது மற்றும் வாதைகளுக்கு ஆளாக்கிவிடும் என்பதே வேதவாக்கியங்களினுடைய வாதமாய் இருக்கின்றது. அர்ப்பணம்பண்ணின பின்பு பாளயத்திற்கு வெளியே வரவும், கிறிஸ்துவின் நிந்தனைகளைச் சுமக்கவும் மனமுவந்து, விரும்பி வராத "திரள் கூட்டத்தினரை" தனிமையின் "வனாந்தரத்திற்குள்ளும்," துன்புறுத்துதல்களுக்குள்ளும் அனுப்பிவைத்திடும் காட்சியினைக் கர்த்தர் போக்காட்டினுடைய நிழலில் வெளிப்படுத்துகின்றார். இவர்கள் பாவநிவாரணத்தில் பங்காற்றுவதில்லை, மாறாக உலகத்தினுடைய பாவங்களின் பாரங்களைச் சுமக்கத்தக்கதாக அனுமதிக்கப்படுகின்றனர் - ஆம்! கட்டாயப்படுத்தப் படுகின்றனர்; இப்படியாக உலகத்திற்கு மரித்துப்போய், கர்த்தர் இயேசுவின் நாளில் இவர்களது ஆவிக்குரிய ஜீவன் இரட்சிக்கப்படும்.

---

R3356 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சுவாரசியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது

## நிஜமான போக்காடு வகுப்பார் எப்படி ஜனங்களுடைய பாவங்களைச் சுமக்கின்றனர்?

கேள்வி: லேவியராகமம் 16:20-22 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, பிரதான ஆசாரியன் "போக்காட்டின்" மீது பாவங்களை அறிக்கையிடும் நிழலின் அர்த்தமென்ன?

பதில்: இந்த ஆடானது, பலிசெலுத்தத் தவறிப்போகும் ஓர் அர்ப்பணிக்கப்பட்ட வகுப்பாருக்கு அடையாளமாயிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாக இருக்கின்றது என்று நாங்கள்

புரிந்துகொள்கின்றோம்; இன்னுமாக இந்த ஆடானது அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட காரியம், அர்ப்பணிக்கப்பட்டும் உடன்படிக்கைக்கு இசைவாக தங்கள் ஜீவியங்களைப் பலிசெலுத்தாத, ஆனாலும் கர்த்தரை மறுதலியாத இவர்கள், ஒன்றில் கர்த்தரை மறுதலிக்கத்தக்கதாக அல்லது தங்கள் ஜீவியங்களைச் சத்தியத்திற்காகக் கையளித்துவிடத்தக்கதாக, வரவிருக்கின்ற உபத்திரவ காலத்திற்குள்ளாகக் கொண்டுவரப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டு கின்றதாக இருக்கின்றது என்று நாங்கள் புரிந்துகொள்கின்றோம். ஆனாலும் ஜீவனைக் கையளிக்கும் இக்காரியமானது, ஒருவிதத்தில் கட்டாயமானதாக இருக்கின்றபடியால், இது "பலியாக" கருதப்படாமல், "மாம்சத்தின் அழிக்கப்படுதலாக" காணப்படும். காளையினுடைய இரத்தத்தினாலும், வெள்ளாட்டுக்கடா வினுடைய இரத்தத்தினாலும் பாவத்திற்கான நிவாரணம் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்க, ஏன் பிரதான ஆசாரியன் இந்த வகுப்பார்மீது குறிப்பிட்ட பாவங்களை அறிக்கைப்பண்ணினார்? என்ற உங்களது கேள்வி இங்கு எழுகின்றது. பாவம் இரண்டு கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கப்படலாம் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். முதலாவதாக அது திவ்விய ஆக்கினைத்தீர்ப்பாக இருக்கின்றது மற்றும் அது மீறுதல்புரிந்தவர் பாடுபடுவதினால் கணக்குச் செலுத்தித்தீர்க்கப்பட முடியாது, மாறாக மகா பிரதான ஆசாரியனாகிய தலை மற்றும் சரீரத்தின் பாவநிவாரண பலியினால் சந்திக்கப்பட வேண்டும். இரண்டாவதாக ஜனங்கள் மீது திவ்விய பிரமாணத்தினுடைய பழிவாங்கும் செயல்பாடு ஒன்று உண்டு; இது பாவியின்மீது பாவங்களுக்கான பாடுகளைக் கொஞ்சம் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. இந்த இரண்டாம் காரியமே வனாந்தரத்தில் போக்காட்டினுடைய பாடுகளில் வெளிப்படுத்தப்படுகின்றது என்று நாங்கள் நம்புகின்றோம். கர்த்தருடைய முதலாம் வருகையின்போது, தங்கள் நாட்களுக்குரிய வெளிச்சத்தினையும், அறிவையும் பெற்றிருந்தவர்களாகவும், இந்த வெளிச்சம் மற்றும் அறிவிற்கு விரோதமாய்ப் பாவம் செய்தவர்களாகவும் காணப்பட்ட யூதர்களில் அப்போது உயிரோடு இருந்த தலைமுறையினருக்கு விரோதமாய்க் கர்த்தர் குற்றஞ்சுமத்தி, ஆபேல் முதற்கொண்டு சிந்தப்பட்ட இரத்தத்திற்கான கணக்கினை அந்தத் தலைமுறையினருடைய கைகளில் விசாரித்தார்; ஆகையால் இதுபோலவே பெயரளவில் கர்த்தரின் ஜனங்களாகக் காணப்பட்டு, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலண்டையில் கூடியிருப்பவர்களாகிய பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தில் இன்று காணப்படுபவர்கள்மீது, ஒரு மாபெரும் பொறுப்பானது தேவனுடைய பார்வையில் காணப்படுவதாக நாங்கள் புரிந்துகொள்கின்றோம். பெயர்க்கிறிஸ்தவத்தின் கைகளில் இன்று அதிகம் விசாரிக்கப்படும்; ஏனெனில் ஒருவேளை பெயர்க்கிறிஸ்தவ மண்டலம் முழுவதுமே கர்த்தருக்கு அர்ப்பணித்துக் காணப்பட்டிருந் திருப்பார்களானால், அனைவர்மீது வரும் உபத்திரவ காலத்திற்கான அவசியம் இருந்திருக்காது, மாறாக கோபாக்கினையின் நாளில் தற்கால அமைப்புகளினுடைய கவிழ்த்துப்போடுதலின் அவசியமில்லாமலேயே, கர்த்தர் வந்து, விருப்பமுள்ள ஜனங்கள் மத்தியில் தம் இராஜ்யத்தினை ஸ்தாபித்திருந்திருப்பார். ஆகையால் கோபாக்கினையின் நாள் வருகையில், அது நீதியான இழப்பீடு சரிக்கட்டுதலாகத்தான் இருக்கும் மற்றும் திவ்விய கோபாக்கினையானது முழுமையாய் இந்தப் பெயரளவிலான வகுப்பார்மீது வெளிப்படும்.

---

# பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்

**1. (Q632:1) போக்காட்டிற்குப் பாவநிவாரண பலியில் எப்பங்குமில்லை.**

கேள்வி (1915)-1- போக்காட்டிற்குப் பாவநிவாரண பலியில் ஏதேனும் பங்கு உண்டா?

**பதில்:** போக்காட்டிற்கு எந்தப் பங்குமில்லை. போக்காடானது பலிசெலுத்தப்படவே இல்லை. அது பலிசெலுத்தப்படுவதற்குத் தவறிப்போயிற்று. இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள் பலியாகுவதற்குக் கொண்டுவரப்பட்டன, ஆனால் சீட்டானது கர்த்தருடைய ஆட்டின்மீது மாத்திரம் விழுந்தது மற்றும் அந்த ஆடுதான் பாவ-நிவாரண பலிக்குரியதாயிற்று. ஆகையால் காளையும், ஒரு வெள்ளாட்டுக்கடாவும் பாவநிவாரண பலிக்குரியவைகளாயின; மற்ற ஆடு பலிசெலுத்தப்படவே இல்லை. ஆகையால் அது பாவநிவாரண பலியாக இருக்கமுடியாது (லேவியராகமம் 16:7-10). ஆனாலும் தேவனுடைய ஞானத்தில் ஆதாமின் பாவம் அல்லாத உலகத்தினுடைய சில குறிப்பிட்ட மனப்பூர்வமான பாவங்களுக்காய்ப் போக்காடு வகுப்பாரின் பாடுகள், பாவ-நிவிர்த்தியாய்ச் செயல்படுத்தப்படுவதன் வாயிலாக, இந்தப் போக்காடானது பாவநிவாரணத்தில் இரண்டாம் தரமான/பட்சமான பங்கினைப் பெற்றுக்கொள்கின்றது.

**2. (Q298:1) திரள் கூட்டத்தார் - உலகத்தின் பாவங்களை ரத்து செய்தல் தொடர்பாக.**

**கேள்வி:** (1909)-1- எவ்வாறு திரள் கூட்டத்தார் குறிப்பாக உலகத்தினுடைய மனப்பூர்வமான பாவங்களுக்கான தண்டனையினை ரத்து செய்கின்றனர்? எவ்வாறு போக்காடானது தேவனிடத்தில் ஒரு நிவிர்த்தியினை ஏற்படுத்துகின்றது?

**பதில்:** பாவத்தினை ரத்து செய்திடும் விஷயத்தில், திரள் கூட்டத்தாருக்கு எந்தப் பங்குமில்லை; சிறுமந்தைக்கும் இதில் எந்தப் பங்குமில்லை. அந்த வேலையினைப் பிரதான ஆசாரியனே செய்கின்றார். அவர் தமது பல்வேறு நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக பல்வேறு காரியங்களைப் பயன்படுத்திடலாம், ஆனாலும் அதைச் செயல்முறைப்படுத்துகின்றவர் (application) அவரே; திரள் கூட்டத்தாரும் சரி, சிறுமந்தையினரும் சரி "ரத்து செய்திடும் விஷயத்தில்" எதையும் செய்கிறதில்லை.

**போக்காடானது திரள் கூட்டத்தாரை அடையாளப்படுத்துகின்றது எனும் கருத்தினை நாங்கள் ஆசரிப்புக்கூடார நிழல்கள் புஸ்தகத்தில் குறிப்பிட்டிருந்தோம் மற்றும் அதே கருத்தை இன்னமும் உடையவர்களாக இருக்கின்றோம்.** அநேகர் திரள் கூட்டத்தார் அல்லது போக்காடானது பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாகச் செல்லவில்லை என்கின்றனர். காளையோ அல்லது கர்த்தருடைய ஆடோ உள்ளே செல்லவில்லை என்று நான் பதிலளிக்கின்றேன். அப்படியானால் உள்ளே சென்றது எது? பலியின் மதிப்பினை அடையாளப்படுத்திடும் காளை மற்றும் கர்த்தருடைய ஆட்டினுடைய இரத்தமானது, பாவ-நிவிர்த்தி செய்யப்படத்தக்கதாக உள்ளே எடுத்துச்செல்லப்பட்டது. பிரதான ஆசாரியனின் சரீரம் அல்லது வீட்டார், ஆசாரியனின் குடும்பத்தார் என்று அழைக்கப்படும் ஆசாரியர்களை உள்ளடக்கின லேவி கோத்திரத்தின் பாவங்களுக்கான நிவிர்த்தியினைக் காளையின் இரத்தம் செய்யவேண்டியிருந்தது; இவர்கள் அனைவரின் - சரீர அங்கத்தினர்களின் அல்லது உடன் ஆசாரியர்களின் பாவங்களுக்காகக் காளையினுடைய இரத்தம் நிவிர்த்தி செய்தது. பின்னர் உடன் ஆசாரியர்களை அடையாளப்படுத்தின வெள்ளாட்டுக்கடாவின் இரத்தமானது எடுத்துச்செல்லப்பட்டது. வெள்ளாட்டுக்கடாவினுடைய இரத்தமானது, வெள்ளாட்டுக்கடாவினால் தெளிக்கப்படவில்லை; மாறாக பிரதான ஆசாரியனால் தெளிக்கப்பட்டு, ஜனங்கள் அனைவருக்காகவும் செயலாற்றப்பட்டது (applied). பிரதான ஆசாரியனே


அனைத்தையும் செய்தார்; ஒருவேளை இதில் எதையேனும் நாம் செய்தோமென எண்ணம்கொள்ளு வோமானால், நாம் தலையைச் சரியாய்ப் பற்றிக்கொள்ளாதவர்களாய் இருப்போம். நாம் அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்களாக மாத்திரமே கருதப்பட்டிருக்கின்றோம்.

காளையினுடைய இரத்தம் விசுவாச வீட்டாருடைய பாவங்களை ரத்து செய்கின்றபடியால் மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தமானது புறம்பே இருக்கும் அனைவரின் பாவங்களை ரத்து செய்கின்றபடியால், எந்தப் பாவங்கள் போக்காடு தொடர்பில் விடப்படுகின்றன? பிரதான ஆசாரியன் இஸ்ரயேல் சபையாரின் பாவங்களை எடுத்து, அவைகளைப் போக்காட்டினுடைய தலைமீது அறிக்கையிட்டார் என்பதே பதிலாகும். எந்தப்பாவங்களுக்காய் இரத்தம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மேலே குறிப்பிடப்பட்டுள்ளதோ, அந்தப் பாவங்களைத் தவிர்த்து வேறு எந்தப் பாவங்கள் இருக்கின்றன? பரிசுத்த ஸ்தலத்திலும், மகா பரிசுத்த ஸ்தலத்திலும் பாவநிவிர்த்தி செய்யப்பட்ட பாவங்களானது ஆதாமிடமிருந்தும், அவரிடமிருந்து சுதந்தரிக்கப்பட்ட அபூரணங்களிடமிருந்தும் கடந்துவந்த ஆதி பாவங்களாய் இருக்கின்றன என்று நான் பதிலளிக்கின்றேன். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் வாயிலாகக் கடந்துவரும் அவரது புண்ணியமானது, இந்தப் பாவங்கள் அனைத்திற்குமாகச் செயல்படுத்தப் படுகின்றது. வேறு என்ன பாவங்கள் இருக்கின்றன? ஆதாமின் பெலவீனத்தினால் உண்டாயிராதவைகள் இருக்கின்றன. உலகமானது அதனால் செய்ய முடிந்த சிறந்ததைச் செய்துகொண்டு வருகிறதில்லை; ஆகையால் ஆதாமின் பெலவீனத்தினால் உண்டாயிராத அநேகம் பாவங்களை அவர்கள் செய்கின்றனர். சில மனுஷருடைய பாவங்கள் முந்திக்கொள்ளும் மற்றும் சிலருடைய பாவங்கள் பின்பாகத் தொடர்கின்றது; ஆனால் அனைத்துப் பாவங்களுக்கான கணக்குச் சரிக்கட்டப்படத்தக்கதாகக் கர்த்தர் பார்த்துக்கொள்வார். அறிந்து செய்த ஒவ்வொரு பாவமும் இவ்வகைப் பாவமாகும்; இந்தப் பாவங்களே போக்காடு வகுப்பாரினுடைய தலைமீது அறிக்கையிடப்படுகின்றது. ஓர் உதாரணத்தை உங்களுக்குக் கொடுக்கின்றோம்: "நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்" (மத்தேயு 23:35) என்று வாசித்த வசனம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். எந்த இரத்தம்குறித்து இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது? ஆம்! மனுக்குலத்தினால் செய்யப்பட்ட இந்தத் தவறான கிரியைகள், ஆதாமின் பெலவீனத்தினால் உண்டானவையல்ல. மனுக்குலம் அறிந்து தெரிந்து செய்த பாவங்கள் ரத்து செய்யப்படத்தக்கதாக, கர்த்தர் சில வழிகளைப் பார்த்திருக்கின்றார் மற்றும் நீங்களும், நானும் இக்கொள்கையினைக் காண்கையில், இது சரி என்று கூறுவோம். ஆகையாலே வேதவாக்கியங்களானது உலகத்துடன் இன்னுமொரு கணக்குச் சரிக்கட்டப்படுதல் காணப்படுவதைச் சுட்டிக்காட்டுவதாகக் காண்கின்றோம். பலிபீடத்தின்கீழ்க் கூக்குரலிடும் ஆத்துமாக்களைக்குறித்துக் குறிப்பிடும் வேதவாக்கியம் உங்களுக்கு ஞாபகமிருக்கும்: "அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" (வெளிப்படுத்தல் 6:10). கர்த்தர் துல்லியமாய்க் கணக்குப் பதிவுகளை உடையவர் ஆவார் மற்றும் சரியாய் அல்லது தவறாய்ச் செய்ததற்கேற்ப அவர் ஒவ்வொருவருக்கும் பலன் அளிப்பார் மற்றும் தண்டிப்பார். அறிந்து புரிந்து பாவங்கள் செய்தவர்கள்,

கணக்குகள் சரிக்கட்டித்தீர்த்துவைக்கப்படுவதற்கு முன் ஒரு குறிப்பிட்ட தண்டனையைத் தங்களுக்கு வரப்பெற்றிருப்பார்கள். நாம் இன்றைய காலங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்றபடியால் மற்றும் "இருண்ட யுகங்களைத்" திரும்பிப்பார்க்க முடிகின்றபடியால், வரவிருக்கின்ற காரியங்களை நாம் ஒத்துக்கொள்ளவே வேண்டும். இந்த யுகத்தினுடைய முடிவில் ஒரு மகா உபத்திரவ காலம் வந்துகொண்டிருக்கின்றது மற்றும் திரள் கூட்டத்தார் அந்த உபத்திரவத்தில் பங்கடைவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். தங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுக்கத்தக்கதாக இவர்கள் பங்கடைவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்; ஏனெனில் இவர்கள் மரிக்கவில்லையெனில், இவர்களால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் பங்கடைய முடியாது.

**ஆமென்!!**

**பிரதிகள் தேவைப்படுவோர்**
**தொடர்புக்கு:**
**8428737474; 9442221874**



# லேவியராகமம் 16:21

